


ஏவிஎம்
புரொடக்ஷன்ஸின்
மற்றொரு
கலா சிருஷ்டி
வாழ்க்கை
சமூகச் சித்திரம்
வைஜயந்திமாலா · ராமச்சந்திரன்
சாரங்கபாணி · சகஸ்ரநாமம் · துரௌபதி
லலிதா · பத்மினி
AVM
புரொடக்ஷன்ஸ்


'பாலுட்ரின்' மலேரியாவிலிருந்து,
பாதுகாத்துக் கொள்ளுவதற்கு
எப்பொழுதும் மூன்று மாத்திரைகளுக்குப் பதிலாக, ஒரு மாத்திரை
ICI
பாலுட்ரின்
உங்களுக்கு ஒரு முக்கியமான அறிவிப்பு!
இந்த புதிய, பெரிய சைஸ் 0·3 கிராம் 'பாலுட்ரின்' மாத்திரை . . . வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டு வந்தால்—உங்களை மலேரியாவிலிருந்து பாதுகாக்கிறது. இவைகள் ஒரு ஸ்டிரிப்பில் 8 மாத்திரைகள் வீதம், சீதோஷ்ணத்தால் பாதிக்கப்படாதபடி, ஒரு விசேஷ முறையில் பாக் செய்யப்பட்டிருக்கிறது.
ஒரு ஸ்டிரிப்பின் விலை 8 அணா
அல்லது ஒரு மாத்திரையின் விலை
ஒரு அணா
ICI
இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்

அடுத்து வரும் புதிய வருஷத்திற்கு அழகு மிகுந்த பரிசுகள்




No. 8321—பல பல வர்ணங்களில் உயர்ந்த தோலால் ஆகிய மூடிகள் கொண்டவை. சம்புடம்போல் மடித்து வைக்கலாம். இந்த அலாரம் உள்ள கடிகாரம் பிரயாணத்திற்கு வெகு உபயோகம். இருட்டில் மணி பார்க்கலாம். வாரத்திற்கு ஒரு முறை சாவி கொடுத்தால் போதும். $2\frac{1}{4}$'' சதுர கண்ணாடி டயல் ரூ. 198

No. 8388—மேலே உள்ளது போல ஆனால் ஒரு நாள் விட்டு மறுநாள் சாவி கொடுக்கவேண்டும். ரூ. 120.


No. 8389—மேலே உள்ளதுபோல ஆனால் இரண்டு நாளைக்கு ஒருதரம் சாவி கொடுக்க வேண்டும். $2\frac{1}{4}$''x$2\frac{3}{4}$'' அளவில் டயல். ரூ. 130.

கண்ணிற்குக் குளுமை—வீட்டிற்கு ஒரு சோபை



No. 8415—அழகிய இல்ட் மெருகு ஏறிய புதிய மாடல். அலாரம் கொண்டது. வாரத்திற்கு ஒருதரம் சாவி கொடுத்தால் போதும். $2\frac{3}{4}$'' சதுர வடிவு டயல் கொண்ட இந்த கடிகாரத்தில் மணி காட்டும் கையும் எண்களும் இருட்டிலும் வெளிச்சம் கொண்டவை. ரூ. 228.

ஒவ்வொன்றும் வானில் பிரகாசிக்கும் நக்ஷத்திரம் போன்றது




No. 8400—அழகிய வட்டம் வடிவமும் வேறு வேறு வர்ணங்களில் உயர்ந்த தோல் கேஸில் உள்ளதுமான இந்த அலாரம் கடிகாரம் பிரயாணத்திற்கு மிகவும் உதவும். இருட்டில் மணி பார்க்கலாம். வாரத்திற்கு ஒரு முறை சாவி போதும். $2\frac{3}{4}$'' வட்டவடிவம் உள்ள கண்ணாடி டயல். ரூ. 198.

No. 8400—மேலேஉள்ளதுபோல் ஆனால் வேறு டோம்களில் அராபிக் அல்லது ரோமன் எண்கள் பதிக்கப்பட்டவை. ரூ. 216.

★ பொருக்கிப் பொருக்கி எடுக்க இன்னும் எவ்வளவோ ரகங்களும் உள்ளன.

FAVRE-LEUBA

பேவர் லூபா & கம்பெனி, லிட். பம்பாய் & கல்கத்தா


கடாவ
வாயில்கள்

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 19 | டிசம்பர் 11 | விரோதி ஆ கார்த்திகை 26

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 19

என்ன சேதி?

பகுத்தறிவாளர் மகாநாடு

இந்த உலகத்திலே மூட நம்பிக்கைகளாலும் மதவெறியினாலும் நிகழ்ந்துள்ள கொடுமைகள் ஏட்டிலும் எண்ணிலும் அடங்காது. மதவெறி சம்பந்தமான கோர சம்பவங்களைச் சரித்திர வாயிலாகக் கேட்டிருந்தோம். ஆனால், இந்தியா பிளக்கப்பட்டுப் பாகிஸ்தான் ஏற்பட்ட பின் மதவெறியின் ராக்ஷஸத் தனத்தை நேரில் கண்டோம். மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் படுகொலைகள் நடந்த பாதகத்தைப் பார்த்தோம். இன்னமும் பாகிஸ்தான் தலைவர்கள் மதவெறியை வளர்த்து வருவதையும் பார்க்கிறோம்.

மேற்படி மூடத்தனத்துக்கு இந்திய சர்க்கார் இடம் கொடுக்காதது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்தியாவில் மதத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை இந்திய சர்க்கார் உலகம் அறியப் பிரகடனம் செய்து அனுஷ்டானத்திலும் நிறைவேற்றி வருகிறார்கள். எனினும், மதவெறி என்னும் ராட்சதனும் குருட்டு நம்பிக்கைப் பிசாசும் தேசத்திலிருந்து அடியோடு துரத்தப்பட வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வரவேண்டும். இந்த நோக்கத்துடன் டிசம்பர் 18உ ராஜாஜி மண்டபத்தில் நடக்கப் போகும் பகுத்தறிவாளர் மகாநாட்டை வரவேற்கிறோம்.

மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் ஸர் ரகுநாத் பரஞ்சபே என்ற அறிஞர் பழம்பெரும் தலைவர். கோபாலகிருஷ்ண கோகலேயின் சகபாடிகளில் ஒருவர்; கணித சாஸ்திரத்தில் மேதாவி; பேராசிரியர், உப அத்தியக்ஷகர், ஹைகமிஷனர், மந்திரி போன்ற உயர்ந்த பதவிகளைத் திறம்பட வகித்தவர். எனவே, அவரது தலைமையில் நடைபெறும் மகாநாடு சமுதாயத்துக்குப் பிரயோஜனகரமான வகையில் பல தீர்மானங்களை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கலாம்.

மூட நம்பிக்கையையும் மதப் பற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டு எந்த விஷயத்தையும் பரிசீலனை செய்யக் கூடாது; கண் முன்னால் காணும் அனுபவத்தைக் கொண்டு பகுத்தறிவை உபயோகித்தே எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வர வேண்டும் — இதுதான் பகுத்தறிவாளர்களின் கொள்கை. இந்தக் கொள்கையை அனுஷ்டிக்கும் பட்சத்தில் ஜாதி சமய மத வேற்றுமைகள் தானாகவே ஒழிந்து விடும் என்பது நிச்சயம். மூட நம்பிக்கையாகிற இருளில் சூழப்பட்டுக் கிடக்கும் விஷயத்தைப் பகுத்தறிவாகிற தீபத்தைக்கொண்டு சுலபமாகக் கண்டு கொள்ள முடியும் அல்லவா?

ஹோட்டல்களுக்கு ஆபத்து

பொதுஜன வாழ்க்கையில் ஹோட்டல்கள் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றன. மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், பிரயாணிகள் முதலிய பல்வேறு பிரிவினருக்கும் ஹோட்டல்கள் மிகவும் உதவியாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அதிலும் ரேஷன் முறை அனுஷ்டானத்தில் இருந்துவரும் இக்காலத்தில் ஹோட்டல்களின் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகமாகியிருக்கிறது. காப்பிக் கொட்டையும் சர்க்கரையும் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும் இந்தச் சமயத்தில் குடும்ப வாதி உள்ளவர்கள் கூட ஹோட்டல்களையே நாடுகிறார்கள். உணவுப் பொருள்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கிடைத்தாலும் விலைகள் எல்லைமீறி அதிகமாக இருக்கின்றன. ஹோட்டல்களில் சாப்பிடுவோர் ஏழைகளும் மத்திய வகுப்பாருந்தான். ஆகவே உணவுப் பொருள்களின் விலைகள் உயர்

வதற்குத் தகுந்தவாறு ஹோட்டல் பண்டங்களின் விலைகளை உயர்த்துவது அவர்களுடைய பளுவை இன்னும் அதிகப்படுத்துவதாகும். இத்தனை சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும் ஹோட்டல்களுக்குச் சென்னை சர்க்கார் சமீபத்தில் விற்பனை வரியும் போட்டு விட்டார்கள். அந்த வரியினால் சர்க்காருக்குக் கிடைக்கும் தொகை அற்பமாயினும், ஹோட்டல்காரர்களின் கஷ்டம் மிகவும் அதிகமாகி யிருக்கிறது.

சிறிய நகரங்களிலுள்ள ஹோட்டல்களைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. சென்னை நகரைத் தவிர மற்ற இடங்களில் சர்க்கரையைக் கண்ணாலும் பார்க்க முடியவில்லை. அதன் விளைவாக அருப்புக்கோட்டையிலுள்ள சுமார் முப்பது ஹோட்டல்களில் பத்தொன்பது ஹோட்டல்காரர்கள் தங்களுடைய லைசென்ஸுகளைப் புதுப்பிக்கப் போவதில்லை என்றும், ஹோட்டல்களை மூடிவிடப் போவதாகவும் அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாக ஓர் அன்பர் நமக்கு எழுதியிருக்கிறார். "ஹோட்டல்களை மூடினால் மூடிவிட்டுப் போகட்டும்; நமக்கு என்ன வந்தது?" என்று சர்க்கார் அசிரத்தையாக இருக்கக் கூடாது என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். அதனால் ஜனங்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதுடன், மற்றொரு விபரீதமும் உண்டாவதற்கு இடமாகின்றது.

பாதுகாப்பு அளியுங்கள்

ஹோட்டல்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் முதலில் சிறிய ஹோட்டல்களைப் பாதிக்கின்றன. சிறிய ஹோட்டல்கள் மூடப்படும்போது பெரிய முதலாளிகள் ஹோட்டல் தொழிலில் ஏகபோக உரிமை அடைகிறார்கள். சில பெரிய முதலாளிகள் பல ஹோட்டல்கள் வைத்து நடத்துகிறார்கள். இன்னும் சில பெரிய ஹோட்டல்காரர்கள் மளிகைக் கடைகளும் வைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குச் சாமான்கள் சௌகரியமாகக் கிடைக்கின்றன. இவ்வாறாக ஹோட்டல்கள் ஒரு சில லக்ஷாதிபதிகளின் ஏகபோக பாத்தியமாகி விடுமாயின், அதனால் ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகமாகுமே ஒழிய நன்மை ஏற்படாது என்பது நிச்சயம்.


காப்பிக்கொட்டை, சர்க்கரை, மிளகு போன்ற சாமான்களின் வியாபார உரிமை ஒரு சில குழுவினரின் ஏகபோகமாக இருப்பதால் எவ்வளவு அனர்த்தம் நேர்ந்தது என்பது சமீபத்தில் ஜனங்களும் சர்க்காரும் தெரிந்து கொண்ட விஷயம். எனவே, அத்தகைய விபரீத நிலைமை ஹோட்டல் தொழிலிலும் ஏற்படாமல் தடுக்கவேண்டியது சர்க்காரின் கடமை. சின்ன ஹோட்டல்காரர்களுக்கு உணவுப் பொருள்கள் போதிய அளவு கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். அவ்வாறு செய்தால்தான் ஹோட்டல்கள் பெரிய முதலாளிகளின் கையில் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாக்க முடியும்.


உண்மையாயிற்று

பாஷாவாரி மாகாணப் பிரிவினைப் பிரச்னையை இப்போது எடுத்துக் கொள்வதால் பல தொல்லைகள் ஏற்படும் என்று தார் கமிஷன் கூறியது உண்மையாகி விட்டது. மிகவும் தெளிவான, சம்பந்தப்பட்ட எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆந்திர மாகாணப் பிரிவினை விஷயமே பல மாதங்களாக இழுத்துப் பறித்துக் கொண்டு வந்தது. அப்படியிருக்க, கேரள, கர்நாடக, மகாராஷ்டிர பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதால் எத்தனையோ தகராறுகள் எழ இடமிருக்கிறது. அத்தகைய மாகாணங்களைப் பிரிப்பதாயின் மைசூர், திருவாங்கூர்-கொச்சி முதலிய சமஸ்தானங்கள், சென்னை சர்க்கார், பம்பாய் சர்க்கார், இந்திய சர்க்கார் முதலிய சகலரும் ஏகோபித்த முடிவுக்கு வரவேண்டும். அது ஒரு சில பிரமுகர்களோ, எம். எல். ஏ.க்களோ சேர்ந்து முடிவு செய்யும் விஷயம் அல்ல. ஆந்திர மாகாணப் பிரிவினையை அங்கீகரித்த காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இந்திய சர்க்காரும் மற்ற மாகாணங்களைப் பிரிப்பதில் எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன என்றும், எனவே, அவ்விஷயத்தைத் தாற்காலிகமாக ஒத்திவைப்பதே சிறந்தது என்றும் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனினும், பாஷாவாரி மாகாணப் பிரிவினைக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பதைப் பிரிவினைப் பிரியர்கள் கவனிக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் அவ்வாறு கவனித்ததாகத் தெரியவில்லை. கர்நாடக மாகாணத்தை உடனே அமைக்கக் காங்கிரஸ் காரியக் கமிட்டி முன் வரவில்லை என்பதற்காக இந்திய அரசியல் நிர்ணய சபையையும், பம்பாய், சென்னை அசெம்பிளிகளையும் சேர்ந்த ஒரு டஜன் கர்நாடக அங்கத்தினர்கள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள காரியம் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கோரிக்கைக்கு விரோதமானது. இந்திய சர்க்காரின் கட்டளைக்கு விரோதமானது. தேச நலனுக்கு முற்றிலும் விரோதமானது.

நிகழ்ச்சிச் சித்திரம்





- சாஸ்திரி


ஐயோ! நிறுத்துங்கள் சரண் அடைந்து விடுகிறோம்.
கலகக்காரர்களின் மனதைக் கவர போலீஸார் சங்கீதத்தை உபயோகிக்கலாம் என்று வங்கப் பிரதமர் கூறுகிறார்.
வறண்ட பாலைவனத்தில் நிழலைக் கொடுக்கும் மரம் தென்படுவது போல, சாந்தி நிகேதனத்தில் உலக சமாதானப் பிரியர்களின் மகாநாடு கூடியது.
பஸ் போக்குவரத்து நிர்வாகத்தை நடத்த ஏழு கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு கம்பெனியை ஆரம்பிக்க பம்பாய் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். தமக்கு அதில் விசேஷத் திறமையும் அனுபவமும் உண்டு என்று கனம் கோபால ரெட்டி அப்ளிகேஷன் போடலாம்.
புதிய அரசியலின்படி மொத்தம் உள்ள பதினேழு கோடி வாக்காளர்களில் பாதிப் பேருக்குமேல் பெண்கள் என்று கூறப்படுகிறது. எனவே, தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களின் வேலை சுலபமாக இராது.
உங்களுக்கு என்ன யோக்கியதை உண்டு? சொல்லுங்கள்.
தயவு செய்து எனக்கு வோட்டுக் கொடுங்கள்.
அபேட்சகர்

சீனாவை நோக்குங்கள் சிந்தித்துப் பாருங்கள்

மா பெரும் சீன தேசத்தின் தந்தையும் சீனக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியுமான டாக்டர் சன் யாட் சென்னுக்குப் பிறகு, அந்த நாட்டின் தனிப்பெரும் தலைவராக விளங்கும் பாக்கியத்தையும் பெருமையையும் ஜெனரல் சியாங் கை ஷேக் பூரணமாகப் பெற்றிருந்தார்.

சென்ற முப்பது வருஷ காலமாகச் சீனாவின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கி வந்துள்ள சியாங் கை ஷேக் சீன ஜனங்களின் மதிப்பை மாத்திரமல்ல, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் நன்மதிப்பையும் பெற்றுச் செல்வாக்குடன் விளங்கினார்.

ஒரு புறம் ருஷ்யத் துருப்புகளையும் மற்றொரு புறம் ஜப்பானியத் துருப்புகளையும் சீனா முறியடிப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் சியாங் கை ஷேக்தான்.

ஐக்கிய நாடுகள் சபையிலே அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் போன்ற வல்லரசுகளுக்குச் சமமாக நிரந்தரமான ஸ்தானத்தை வகிக்கும் கௌரவத்தைப் பெற்ற நாடு ஆசியாவில் சீனாவைத் தவிர வேறெதுவும் இல்லை.

ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் இவர்களுக்குச் சமமாக உலக சமாதான மகாநாட்டில் வீற்றிருக்கும் வாய்ப்பு ஜெனரல் சியாங்கைத் தவிர வேறு எந்த ஆசிய நாட்டுத் தலைவருக்கும் கிடைக்கவில்லை.

இந்தியாவின் ஒப்பற்ற தலைவர் பண்டித ஜவாஹர்லால் நேருவின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரராகி இந்திய ஜனங்களிடையும் ஜெனரல் சியாங் புகழ் பெற்று விளங்கினார்.

அவரது தேச பக்தியின் உயர்வை அவருடைய பகைவர்களும் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்கு உதாரணமாக அவரது வாழ்க்கையிலே நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

சீனாவில் உள்நாட்டு யுத்தம் உக்ரமாக இருந்தபோது ஜெனரல் சியாங் கை ஷேக்கைக் கைது செய்த அவரது எதிர்க்கட்சியினர், பிறகு தாங்களாகவே அவரை விடுதலை செய்து மரியாதையாக அவர் இருப்பிடத்துக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.

• • •

அவ்வாறாக, உள்நாட்டு மக்களும் உலக நாடுகளும் பகைவர்களும்கூட கௌரவித்துவந்த ஜெனரல் சியாங்கை ஷேக்கின் இன்றைய நிலைமை என்ன?

உலக நாடுகளின் மதிப்பையும் அனுதாபத்தையும் அமெரிக்காவின் அபரிமிதமான உதவியையும் பெற்று அவருடைய தலைமையில் போரிட்டு வந்த தேசிய சீனா தோல்வியடைந்ததற்குக் காரணம் என்ன?

சுமார் முப்பது வருஷ காலமாக சீன தேசத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய சியாங் கை ஷேக் இன்று தம்முடைய நாட்டையேவிட்டு வெளியேறும்படியான துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருப்பதற்குப் பொறுப்பாளிகள் யார்?

வல்லரசுத் தலைவர்களுக்குச் சமமான மதிப்பும் மாண்பும் பெற்று விளங்கிய அவர், இனி எங்கு சென்று அடைக்கலம் புகுவது என்று ஏங்கும்படியாக நேர்ந்ததேன்?

ஜெனரல் சியாங் கை ஷேக்கைத் தலைவராகக் கொண்ட தேசிய சீனாவுக்கு வருஷக் கணக்கில் அமெரிக்காவின் அபரிமிதமான உதவி கிடைத்து வந்தது. எனவே அவருடைய தோல்விக்கு,—தேசிய சீனாவின் வீழ்ச்சிக்கு உதவி போதவில்லை என்பது தகுந்த காரணம் ஆகாது.

எட்டு வருஷ காலத்துக்கு மேல் உறுதியுடன் ஜப்பானை எதிர்த்து நின்று, தங்களுடைய நாட்டின் பெரும் பகுதியிலிருந்து ஜப்பானியரை விரட்டிய தேசிய சீனாவின் படைகள் ஓய்ச்சல் ஒழிவின்றி உக்ரமாகப் போர் புரிந்தன;

இறுதியான கட்டத்தை அடைந்துள்ள இன்றைய நிலையிலும் போர் புரிந்து வருகின்றனர். எனவே, தோல்விக்குத் தேசியத் துருப்புகளின் சோர்வுதான் காரணம் என்றும் கூறுவதற்கில்லை.

அன்னியரை எதிர்த்துப் போராடு வதற்காக ஒன்றுபட்ட சீன மக்களின் தேச பக்தி திடீரென்று குன்றி விட்டது என்றும் சொல்லிவிட முடியாது.

தேசியப் படைகளை எதிர்த்துப் போராடிய பொது உடைமைக் கட்சியினருக்கு ருஷ்யா உதவி புரிந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

யார் எவ்வளவு உதவி செய்தாலும் பொது மக்களின் ஆதரவின்றேல் இவ்வளவு துரிதமாகப் பல முக்கிய நகரங்களையும் எதிர்க்கட்சியினர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, நல்ல மரத்தில் புல்லுருவி படருவதைப் போல, ஜெனரல் சியாங் கை ஷேக்கைப் பேராசை பிடித்த சில முதலாளிகளும் துரோகிகளும் சூழ்ந்து கொண்டிருந்ததே அந்தத் தேசத்தின் இன்றைய பரிதாபகரமான நிலைமைக்குக் காரணம் என்பது நிச்சயமாகிறது.

* * *

தேசிய சீனாவின் தோல்வியை இந்தியாவிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜனங்கள் எவ்வளவு தேசபக்தியுடையவர்களாயினும், சில முதலாளிகளின் கொள்ளைப் புத்தி காரணமாகத் தாங்கள் துன்பத்துக்கு உள்ளாகும்படி நேருவதை அதிக காலம் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

சீனாவில் முதலாளிகளின் பேராசை காரணமாக அக விலைகள் உலகிலே கண்டும் கேட்டும் இராதவாறு ஆயிரம் பதினாயிரம் மடங்கு அதிகமாயின.

முதலாளித்துவக் கொடுமை அத்துடன் நிற்கவில்லை. சீன தேசியப் படைகளுக்காக வெளி நாடுகளிலிருந்து வந்த ஆயுத வகைகள் பண ஆசை பிடித்த துரோகிகளின் மூலம் திருட்டுத்தனமாக எதிர்க் கட்சியினரிடம் போய்ச் சேர்ந்தன.

வேலி பயிரை மேய்வதற்கொப்ப அரசாங்க அதிகாரிகளிடையே லஞ்ச ஊழல் தாண்டவம் ஆடியது.

இத்தகைய கொடுமைகளால் மக்களின் வாழ்வு நரக வேதனையாயிற்று. பொது ஜனங்களை இடை விடாது பஞ்சமும் பிணியும் பிடுங்கித் தின்றன.

எனவே மக்களுக்கு அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டது; சர்க்காருக்கு அவர்களின் ஆதரவு குன்றியது.

எவ்வளவு பலம் பொருந்திய அரசாங்கமாயினும் ஜனங்களின் ஆதரவின்றி வெற்றிபெற முடியுமா?

இவ்வாறாக, ஜனங்களின் அதிருப்தியும் ஆத்திரமுமே எதிர்க் கட்சியினருக்குச் சிறந்த ஆயுதமாயின.

எனவே, சீனாவின் இன்றைய நிலைமை இந்தியாவுக்குச் சிறந்த படிப்பினையாக இருக்க வேண்டும்.

எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டாலும் பொறுத்துக் கொண்டு சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று தலைவர்கள் வாயளவில் கூறுவதால் அதிக பலன் ஏற்பட்டுவிட முடியாது.

ஜெனரல் சியாங் கை ஷேக் தம்மை முதலாளிகளும் லஞ்சம் வாங்கும் அதிகாரிகளும் சூழ்ந்துகொள்ள இடம் கொடுத்ததைப் போல, நமது சர்க்கார் தலைவர்களும் இடம் கொடுத்துவிடக் கூடாது. அரசாங்கத்துக்கு ஆணி வேராக இருப்பது மக்களின் அன்பும் ஆதரவும்தான்.

ஜனங்கள் எவ்வளவு தேசபக்தியுள்ளவர்களாயினும், பசியினால் கஷ்டப் படும்படி நேருமாயின் அவர்கள் தங்களுடைய கஷ்டத்தை எவ்வளவு காலம்தான் சகித்துக் கொண்டு சாந்தமாக இருக்க முடியும்?

அதிலும் தங்களுடைய கஷ்டங்களுக்குப் பேராசை வெறிகொண்ட முதலாளிதான் காரணஸ்தர்கள் என்றும், அத்தகைய முதலாளிகளே சர்க்காரைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் ஜனங்கள் கருதும்படி சர்க்கார் நடந்து கொள்ளக் கூடாது.

முதலாளித்துவக் கொடுமையை ஒடுக்குவதன் காரணமாக தேச நலனுக்குச் சிறிது பாதகம் நேருவதாக இருந்தால்கூட சர்க்கார் அதைப் பொருட்படுத்தாமல், ஏழை மக்களின் கஷ்டத்துக்குக் காரணஸ்தர்களாக இருப்போர் மீது கடுமையான நடவடிக்கைகளைக் கைக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் ஜனங்களின் பூரண ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றுச் செல்வாக்குடன் விளங்குவது சாத்தியமாகும்.

எனவே, சீனாவின் இன்றைய துக்ககரமான நிலைமையும் ஜெனரல் சியாங் கை ஷேக்கின் மகத்தான தவறும் இந்தியத் தலைவர்களுக்குச் சரியான படிப்பினையாக அமைந்திருக்கின்றன.

வட்ட மேஜை

* மனித குலத்துக்கே அவமானம்!

சமீபத்தில் சென்னை சட்ட சபையில் பிச்சைக்காரர்கள் தொல்லையைப் பற்றிப் பல கேள்விகள் கேட்கப்பட்டது. சென்னை நகர போலீஸ் சட்டம் 71 ஏ. பிரிவின்படி சென்னை நகருக்குள் பிச்சை எடுப்பது சட்ட விரோதம். அப்படியிருந்தும் பிச்சை எடுப்பவர்கள் தொல்லை அதிகமாய் இருப்பதைக் குறித்து, ஒரு எம். எல். ஏ. "ஏன் சட்டத்தைத் தீவிரமாய் நடவடிக்கையில் கொண்டுவரக் கூடாது" எனக் கேட்டதற்கு மந்திரி கனம் மாதவமேனன், நம்மவர்களின் பிறவிக் குணமான தர்மம் கொடுக்கும் சிந்தையும் பல தடைகளில் ஒன்று என்பதாய் விளக்கம் கூறினார். நம்மவர்கள் கொடுக்கும் தர்மத்தைக் கட்டுப்படுத்தி, ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்களுடைய தர்ம சிந்தையை உபயோகப்படுத்தி வருஷம் ஒன்றுக்கு மூன்றணா பெற்றால்கூட மிகவும் சுலபமாய் பிச்சை எடுக்கும் கொடுமையை ஒழித்து விடலாம்.

எப்படி என்பதற்கு நானறிந்த ஒரு யோசனையை இங்கு சொல்லுகிறேன். தற்போது சென்னை நகரின் ஜனத்தொகை பதினாறு லக்ஷம். ஒவ்வொருவரும் மாதத்திற்குக் காலணா தர்மநிதிக்குக் கொடுப்பது பெரிதல்ல. அப்படியானால் ஒவ்வொரு மாதமும் 25 ஆயிரம் ரூபாய் வரும். அதாவது வருஷத்திற்கு மூன்று லக்ஷம் ரூபாய் வரும். இந்த மூன்று லக்ஷம் ரூபாயில் பிச்சைக்காரர்களின் விடுதியை நல்ல முறையில் பரிபாலிக்கலாம். இந்தத் தொகையை எப்படி வசூல் செய்வது? இதற்காகத் தனி உத்தியோக இலாகா வைக்கக் கூடாது. ஏனெனில் இது போன்ற இலாகாக்களே வசூலாகும் பெரும் பகுதியை விழுங்கி விடும். ஆகவே, இதைக் கூடுமான வரை செலவில்லாமல் செய்ய முன் வர வேண்டும்.

ரேஷன் இலாகா இதைக் கவனிக்கலாம். ஒவ்வொரு மாதமும் முதல்வார ரேஷன் அரிசி வாங்கும் பொழுது நபர் ஒன்றுக்குக் காலணா வீதம் கணக்கிட்டு நம்மவர்கள் தர்மத்தைச் செலுத்தி விடலாம். ஏன்? இந்த நிதிக்குக் கட்டாய வசூலாகவே செய்தாலும் தவறு ஒன்றும் இல்லை.

இந்த வசூல் தொகைகளைக் கார்ப்பரேஷன் நிர்வாகத்தினரிடம் ஒப்புவிக்க வேண்டும். அரசாங்கத்தின் நன்கொடை, கார்ப்பரேஷன் ஒதுக்கி வைக்கும் நிதி ஆகியவைகளையும் சேர்த்துக் கொண்டால், பிச்சைக்காரர்களின் விடுதிகளை நன்கு அமைத்துப் பிச்சைக்காரக் குழந்தைகளுக்குக் கல்வி, மற்றும் கைத்தொழில் கற்பித்தும் சீர்திருத்தப் பெருதவியாகும். இந்தத் திட்டத்தின்படி செய்தும் பிச்சை எடுப்பவர்கள் இருந்தால் அவர்களைச் சரியான தண்டனைக் குள்ளாக்க வேண்டும். வெளியூர்களிலிருந்து வரும் பிச்சைக்காரர்களைத் தடுக்க வேண்டும். மீறி நகருக்குள் வந்து பிச்சை எடுத்தால் அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

பொதுஜனங்களுக்கு வருஷத்துக்கு மூன்றணா பெரும் தொகை அல்ல. கணக்குப் பார்த்தால் ஒவ்வொருவரும் இதைவிட அதிகமாகவே தர்மம் செய்யலாம். தர்ம சிந்தையே பிறவிக்குணமான நம்மவர்க்கு இது எளிது.

ஆகவே, கார்ப்பரேஷனும் சர்க்காரும் கொஞ்சம் சிரமம் எடுத்துப் பிச்சை எடுக்கும் பெருங்கொடுமையை ஒழிக்க முயலவேண்டும். சுதந்திர நாட்டில் ஜனங்கள் பிச்சை எடுப்பதைப் பார்க்கும்படி விடுவது மனித குலத்துக்கே அவமானமாகும்.

சென்னை
25—11—49 கே. வேம்பு

○●○

சர்க்கார் கவனிக்குமா?

13-11-49 தேதி 'கல்கி' இதழில் வெளியான 'ஆனால் ஒரு எச்சரிக்கை' என்ற கடிதத்தைப் படித்தேன். கோவில்களின் நிர்வாகத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு கோவில் காரியங்களை நடத்த நிர்வாக அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அந்த நிர்வாக அதிகாரிகள் பலர் சாமியாவது, பூதமாவது என்று சொல்லுவதுடன் மற்றொரு மாபெரும் தவறும் செய்கிறார்கள். கோவில் திருவிழாக்கள் ஏழு நாள் நடத்துவதை இரண்டு நாள் நடத்தி விடுகிறார்கள். இரவு நேரங்களில், சுவாமி ஊர்வலம் வருவதை மாலை ஆறு மணிக்கே செய்துவிட்டு லைட் சார்ஜை மீதி செய்து விடுகிறார்கள். ஆனால் அந்த மீதிப் பணம் சர்க்காருக்குச் சேருவதில்லை. இன்னும் பல வகையில் மீதி செய்து அவர்களே வைத்துக் கொள்ளுகிறார்கள். அதைப் போலவே மதுவிலக்குப் பிரசாரத்துக்குப் பிரசாரகர்களை சர்க்கார் நியமித்தால் அவர்கள் பிரசாரம் செய்யாமல் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கோவில் நிர்வாகஸ்தர்களைப்போல் நடந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமே என்று கவலைப்படுகிறேன்.

சிராப்பள்ளி
20—11—49 சீனிவாசன்

○●○

யார் காரணம்?

சில வருஷங்களுக்குப் பிறகு சமீபத்தில் நான் சென்னைக்கு வந்திருந்தேன். சென்னை மாகாணத்தில் மதுவிலக்குப் பூரணமாக அமுலுக்கு வந்து அநேக மாதங்கள் ஆகிவிட்டன. அதனால், தென்னை மரங்கள் யாவும் காய்க்க ஆரம்பித்து இருக்க வேண்டும். முன்பெல்லாம் நூற்றுக்கு எண்பது மரங்களிலிருந்து கள் இறக்கப்பட்டு வந்தது. மற்ற இருபது மரங்கள்தான் காய் கொடுத்து வந்தன. அதனால், இலங்கை போன்ற இடங்களிலிருந்து நாம் தேங்காய் மற்றும் கொப்பரை முதலியவற்றை இறக்குமதி

செய்து வந்தோம். ஆனால் இப்பொழுதோ, மது விலக்குக்குப் பிறகு, மாகாணத்திலுள்ள எல்லாத் தென்னை மரங்களும் காய்க்க ஆரம்பித்திருக்க வேண்டும். சென்னையில், தேங்காய், தேங்காயெண்ணெய் மற்றும் பிண்ணாக்கு இவைகள் விற்கும் விலையைப் பார்த்தால், சென்னை மாகாணத்திலுள்ள தென்னை மரங்கள் யாவும் காய்ப்பையே நிறுத்தி விட்டனவோ என்று சந்தேகப் படும்படித் தோன்றுகிறது. 'கள் இறக்கினால் இறக்குங்கள்; இல்லாவிட்டால் நாங்கள் காய்க்கப் போவதில்லை' என்று தென்னை மரங்கள் விம்பு செய்து கொண்டு சும்மா இருக்கின்றனவோ, என்னவோ?

முன்பெல்லாம் சென்னையில் இரண்டணா கொடுத்தால் சுமாரான தேங்காய் ஒன்று கிடைக்கும். மதுவிலக்குக்குப் பிறகு, எல்லாத் தென்னை மரங்களும் காய்க்க ஆரம்பித்த பொழுது தேங்காயின் விலை நிச்சயமாகக் குறைந்து போயிருக்க வேண்டும்; அப்படியே இல்லாவிட்டாலும் விலை அதிகம் ஆகாமலாவது இருந்திருக்க வேண்டும். ஆனால் உண்மையில், விலை மூன்று மடங்கு அதிகரித்து விட்டிருக்கிறது. தற்சமயம் சென்னையைவிட இவ்விடத்தில் (பூனா) தேங்காயின் விலை குறைவு என்றால் வேடிக்கையாக இருக்கிறதல்லவா? தேங்காயைப் போலவே, தேங்காயிலிருந்து கிடைக்கும் மற்றப் பண்டங்களின் விலையும் மூன்று மடங்குக்கு மேல் உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் யார்? அரசாங்கமா? வியாபாரிகளா, அல்லது தென்னை மரங்களா?

பூனா
8—12—49 வி. லக்ஷ்மணன்

★ வாழ ஆசை வேண்டும்

நான் நேற்றைய தினத்தாள் ஒன்றில் கோவை விவசாயக் கல்லூரி மாணவர் ஒருவர் வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பு காரணமாகத் தற்கொலை செய்துகொண்ட செய்தி அறிந்து மனம் மிக வருந்தினேன். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாக இம்மாதிரியான செய்திகளை அடிக்கடி படித்தும் கேட்டும் வருகிறேன். பரீட்சைத் தேர்வில் தோல்வியுறும் மாணவர், மாணவிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். காதலில் தோல்வியுறும் இளைஞர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அநேகமாக வாழவேண்டிய இளைஞர்களில் அநேகர் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றனர்.

உலகத்தில் படைக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. கல்வி வாழ்க்கைக்காகவே படைக்கப்பட்டதே அன்றி வாழ்க்கை கல்விக்காகப் படைக்கப்படவில்லை என்பதைப் படித்தும் அறியாத மாணவர்களைப் பற்றி மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. அதுபோல்தான் காதல். காதல் வாழ்க்கைக்கே தவிர வாழ்க்கை காதலுக்கல்ல. உலகத்தில் துன்பமும் இன்பமும் மாறி மாறி வருவது இயற்கையே. இன்று செல்வந்தனாயிருப்பவன் நாளை ஏழையாகின்றான். இன்று ஏழையாயிருப்பவன் நாளை செல்வந்தனாகின்றான். இன்பத்தையும் துன்பத்தையும் வண்டிச் சக்கரத்தின் இருபுறமும் என வைத்துக் கொண்டால் அது வாழ்வென்னும் தரையைத் தொட்டுத்தானே ஆகவேண்டும்! அதனால் துன்பம் வருங்கால் இளைஞர்கள் மனந் தளராது யாவும் நன்மைக்கே என்று வாழ்வின் லட்சியத்தையே குறிக்கோளாகக்

கொண்டு வாழவேண்டும். படித்த மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வது அறிவின்மை. ஒரு தடவை தோற்றால் வாழ்விற்கே அவர்கள் லாயக்கற்றவர்களா? இன்று தோற்றவர்கள் நாளை சிறந்தவர்களாக ஆக முடியாதா? அன்றும் இன்றும் உலகத்தில் பெரியோர்களாக வாழ்ந்தவர்களும் வாழ்கின்றவர்களும் தங்கள் இளமை வாழ்வில் துன்பக் கடலில் மூழ்கி மீண்டவர்களும், அநேகத் தோல்விகளையும் கண்டவர்களுமேயாவர்.

ஆதலின் இனியாவது மாணவர்களும் மற்ற இளைஞர்களும் வாழ்விற்கே மற்றவை என்றும் மற்றவைக்காக வாழ்வு அல்லவென்றும் உண்மையை உணர்ந்து நடப்பார்களாக.

திருச்சிராப்பள்ளி
3—12—49 எஸ். ராமச்சந்திரன்

○●○

ஒழுக்கம் வேண்டும்

நம் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. நாம் எல்லோரும் சுதந்திர மக்களாகிவிட்டோம். நம் சர்க்கார் செய்யும் காரியங்களைப் பற்றிக் காரசாரமாகப் பேசிக்கொள்கிறோம்.

ஆனால் நம் ஒழுக்கங்களைப் பற்றி நாமே எண்ணிப் பார்த்தால் விசனப்பட வேண்டியதாகவே இருக்கிறது. பொது இடங்களில் நம் மக்கள் நடந்துகொள்ளும் ஒழுக்கம் நம்மைத் தாழ்மையுறவே செய்கிறது.

சமீபத்தில் நான் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தேன். தியேட்டருக்குள் புகை பிடிக்கக் கூடாது. எச்சில் துப்புவதானால் தொட்டியில் துப்புங்கள் என்றும் போர்டுகள் காட்டப்பட்டன. 'ஸ்லைடு'கள் போட்டும் விளம்பரப்படுத்தினார்கள். ஆனால் பலர் இவைகளைக் கவனிப்பதாகவே தெரியவில்லை. ஆசனங்களுக்குக் கீழே தங்கள் கால்களின் அடியிலேயே சுத்தமான தரையில் எச்சிலைத் துப்பி வைத்தார்கள். புகையோ மேகப்படலம் போலத் தியேட்டரை வியாபித்திருந்தது.

இவைகளெல்லாம் மேல் வகுப்பின் டிக்கட்காரரும் சிலரிடையே நடப்பதில்லை. கீழ் வகுப்பின் டிக்கட்காரரும் பலர் இப்படிச் செய்கிறார்கள். இவர்கள் பல தொழில்களில் ஈடுபட்ட ஏழை மக்களாக இருக்கலாம். படிக்காதவர்களாகவுமிருக்கலாம். ஆனால் இந்தச் சாதாரண ஒழுக்கங்களை ஏன் அனுசரிப்பதில்லை? முதியோர் பள்ளிக்கூடத்தில் படித்த பின்தான் இந்த ஒழுக்கங்களை அனுசரிக்க வேண்டுமா? அல்லது இந்தச் சாதாரண ஒவ்வொரு ஒழுக்கத்துக்கும் சட்டம் கொண்டு வந்து தண்டிக்க வேண்டுமா?

தியேட்டர் முதலாளிகள் புகை பிடிக்காதே என்னும் விளம்பரத்துக்குப் பின் காரம், மணம் குணம் நிறைந்த கழுதை மார்க் பீடிகளை உபயோகியுங்கள் என்று விளம்பரம் செய்வதைத் தயவுசெய்து நிறுத்தவேண்டும்.

இதுபோலவே, ரயிலில் பிரயாணம் செய்யும் போதும், இன்னும் பொது ஸ்தாபனங்களுக்குச் செல்லும்போதும் பொது ஜனங்களிடம் மிகவும் மரியாதையாகவும் அங்குள்ள சட்ட திட்டங்களுக்கு விரோதமில்லாமலும் நடந்து கொள்ளவேண்டும். இப்படி நடந்து கொள்ளப் பழகிக்கொண்டால்தான் நாம் பெற்ற சுதந்திரத்தின் பயனை அனுபவிப்பதுடன், அதைக் காப்பாற்றவும் முடியும்.

பண்ரூர்பேட்டை
16—11—49 ரே. வி. மூர்த்தி

அட்டைப்பட விளக்கம்

பழந் தமிழ் நாட்டில் நம் முன்னோர்கள் உணவுக்காக உழுது பயிர் செய்தார்கள்; உடைக்காக நூற்று நெசவு செய்தார்கள். நாட்டின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் காப்பதற்காக வாள் கொண்டு போர் செய்தார்கள்.



இந்த மூன்று தொழில்களும் செய்து ஓய்ந்திருக்கும் காலங்களிலெல்லாம் பழந்தமிழ் நாட்டு மக்கள் கோவில்களையும் கோபுரங்களையும் நிர்மாணித்தார்கள்!

அப்படி அவர்களுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கோயில் கட்டுவதிலே செலவழித்ததினாலேதான் இன்று தென்னாட்டில் ஏறக்குறைய நாற்பத்திரண்டாயிரம் கோவில்கள் நிலைத்து நின்று காட்சி தருகின்றன.


எனவே, பழந்தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும்போது அதில் சிற்பக் கலைக்கு ஒரு முக்கியமான இடம் ஏற்படுவதில் வியப்பில்லையல்லவா?

• • • •

மதுரையை ஆண்ட பராக்கிரம பாண்டியன் தஞ்சாவூர் உத்தம சோழனைக் கைப்பற்றிக் கொண்டு வந்து மதுரையில் சிறையில் அடைத்தான். உத்தம சோழனுடைய மூத்த மகன் சுகுமாரன் தந்தையை உபாயத்தினால் விடுவித்துக் கொண்டு போவதற்காக மாறுவேடம் பூண்டு மதுரைக்கு வந்தான். புகழ் பெற்ற தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்தில் மாணாக்கனாகச் சேர்ந்துகொண்டான். பராக்கிரம பாண்டியனுடைய ஒரே புதல்வியான புவன மோகினி அந்தச் சிற்பக் கூடத்தில் தஞ்சாவூரிலிருந்து வந்த இளஞ் சிற்பியைச் சந்திக்க நேர்ந்தது. சிற்ப மண்டபத்தில் அவர்களுடைய ஒரு சந்திப்பைத்தான் இந்தக் 'கல்கி' இதழின் அட்டைப் படம் சித்திரிக்கின்றது. சந்திப்பின் நிகழ்ந்தது என்ன வென்பதை "மோகினித் தீவு" என்னும் சிறிய தொடர் கதையில் விவரமாகக் காணலாம்.

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'நூற்றுக்கோர் அவமானம்!' என்ற கடிதம் எழுதிய சென்னை ஸ்ரீ கே. வேம்புக்கும், 'வாழ ஆசை வேண்டும்' என்ற கடிதம் எழுதிய திருச்சிராப்பள்ளி ஸ்ரீ எஸ். ராமச்சந்திரனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

மோகினித்தீவு



நான்காம் அத்தியாயம்

பூரண சந்திரன் உச்சி வானத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தான். அந்தத் தீவுக்கு 'மோகினித்தீவு' என்று ஏன் பெயர் வந்தது என்பது தமக்குத் தெரியாது என்று கப்பல் காப்டன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. அதற்குக் காரணம் தேடவா வேண்டும்? நள்ளிரவில் வெள்ளி நிலவில் அந்தத் தீவை ஒருதடவை பார்த்தவர்களுக்கு 'மோகினித்திவு' என்னும் பெயர் எவ்வளவு பொருத்தமானது என்று உடனே தெரிந்து போய்விடும்.

சொர்க்க பூமியிலிருந்து ஏதோ ஒரு காரணத்தினால் ஒரு சிறு பகுதி தனித் துண்டாகப் பிரிந்து வந்து கடலில் விழுந்து அங்கேயே மிதப்பதுபோல மோகினித்தீவு அச்சமயம் காட்சி அளித்தது. சொர்க்கத்திலிருந்து அந்தத் துண்டு பிரிந்துவிழுந்த சமயத்தில் அத்துடன் விழுந்துவிட்ட தேவனும் தேவியுந்தான் இந்தத் தம்பதிகள் போலும்! ஆனால் தேவலோகத்துத் தம்பதிகளாயிருந்தாலும், பூலோகத்துச் சதிபதிகளைப் போலவேதான் இவர்கள் அடிக்கடி விவாதத்திலும் விவகாரத்திலும் ஈடுபடுகிறார்கள்!...

மோகினித்தீவின் அந்தச் சுந்தர புருஷன் "முகத்தில் இரு வாள்களுடன் கூடிய 'கொல்லியம்பாவை'யை மதுரையில் சுகுமார சோழன் சந்தித்தான்" என்று சொன்னதும் அவன் அருகில் வீற்றிருந்த வனிதாமணி குறுக்கிட்டாள்.

"பெண் குலத்தைப்பற்றி இவ்விதம் அடிக்கடி ஏதாவது நிந்தைமொழி கூறு விட்டால் புருஷர்களுக்குத் தலை வெடித்துவிடும்போலிருக்கிறது!" என்றாள். பால் நிலவு பட்டு அவளுடைய பால் வடியும் முகம் தந்தத்தினால் செய்த பதுமையின் முகம் போலத் திகழ்ந்தது. ஆனால் அந்தப் பதுமை முகத்தில் ஜீவகளை ததும்பியது. அந்த முகத்திலிருந்த கரிய விழிகளில் சந்திர கிரணங்கள் பட்டு எழுந்த எதிரொளிக் கதிர்கள் வாள்களாகவும் வேல்களாகவும் வஜ்ராயுதத்தின் வீச்சுக்களாகவும் ஜொலித்தன.

பாவைமார்களின் வாளையொத்த விழிகளைப்பற்றி அந்த ஆடவன் கூறியது அப்படியொன்றும் தவறில்லையென்று எனக்குத் தோன்றியது.

அவன் தன் காதலியின் வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகை புரிந்தவண்ணம் அவள் முகத்தை உற்று நோக்கினான். "மன்னிக்க வேண்டும். புவன மோகினியைக் 'கொல்லியம்பாவை' என்று நான் கூறியது குற்றந்

கல்கி

தான். அவளுடைய கண்களை வாள்கள் என்றும், வேல்கள் என்றும் கூறியது அதைவிடப் பெரிய குற்றம். 'அமுத கிரணங்களை அள்ளி வீசும் ஜீவச் சுடர் ஒளிகள்' என்று அவளுடைய கண்களைச் சொல்லியிருக்க வேண்டும்!'' என்றான்.

புவனமோகினி என்ற பெயரை அவன் சொன்னவுடனே எனக்குக் கதையின் பேரில் நினைவு சென்றது. "என்ன? என்ன? சுகுமார சோழன் மதுரையில் சந்தித்த 'கொல்லியம் பாவை' பாண்டிய குமாரிதானா? பராக்கிரம பாண்டியரின் ஒரே புதல்வியா?'' என்று வியப்புடன் கேட்டேன்.

"ஆம், ஐயா! சுகுமார சோழன் மதுரைமா நகருக்குச் சென்றபோது அவனுடைய விதியும் அவனைப் பின் தொடர்ந்து சென்றது. விதியின் வலிமை மிகப் பெரிது என்று பெரியோர்கள் சொல்வார்கள். விதி வலிமையுடன்கூட ஒரு பெண்ணின் மன உறுதியும் சேர்ந்து விட்டால், அந்த இரண்டு சக்திகளுக்கு முன்னால் யாரால் எதிர்த்து நிற்க முடியும்? சுகுமாரனால் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆனமட்டும் அவன் போராடிப் பார்த்தும் கடைசியில் சரணாகதி அடைய நேர்ந்தது......''

"நீங்கள் கதை சொல்லுகிறீர்களா? அல்லது புதிர் போடுகிறீர்களா? பாவம்! இவருக்கு நீங்கள் சொல்வது ஒன்றுமே புரியவில்லை. மதுரையில் நடந்ததை இனிமேல் நான் கொஞ்சம் சொல்லட்டுமா?'' என்று கேட்டு விட்டு, அந்த இளமங்கை உடனே சொல்லத் தொடங்கினாள்:—

"மதுரையில் அப்போது தேவேந்திரச் சிற்பி என்பவர் பிரசித்தி பெற்றிருந்தார். அவர் வயது முதிர்ந்தவர். அவருக்கு மனைவி மக்கள் யாரும் இல்லை. அவர் கலியாணமே செய்து கொள்ளவில்லை. கலைத் தேவியைத் தாம் திருமணம் செய்து கொண்டிருப்பதாகவும் வேறொரு மனைவிக்குத் தமது அகத்தில் இடமில்லையென்றும் சிலசமயம் அவர் சொல்லுவது உண்டு. பராக்கிரம பாண்டியருக்குத் தேவேந்திரச் சிற்பியிடம் அபிமானம் இருந்தது. தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்துக்கு அவர் சில சமயம் செல்லுவதுண்டு. தம்முடன் தம் குமாரி புவன மோகினியையும் அழைத்துப் போவார். குடும்பமும் குழந்தைகளும் இல்லாத தேவேந்திரச் சிற்பிக்கு ராஜகுமாரியிடம் மிகுந்த வாஞ்சை ஏற்பட்டது. ராஜகுமாரிக்கும் தேவேந்திரச் சிற்பியிடம் அன்பு உண்டாகி வளர்ந்தது. அந்த அன்பு காரணமாகச் சிற்பக் கலையிடத்திலும் அவளுக்குப் பற்று ஏற்பட்டது.

பராக்கிரம பாண்டியர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் மீனாக்ஷி அம்மன் கோவிலைப் புதுப்பித்துக் கட்ட விரும்பினார். அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யும்படி தேவேந்திரச் சிற்பிக்குச் சொல்லியிருந்தார். தஞ்சை நகரில் ராஜராஜ சோழர் கட்டிய பிரகதீஸ்வர ஆலயத்தைப் பார்த்த பின்னர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை அதைவிடப் பெரிதாகக் கட்ட வேண்டும் என்ற ஆசை பராக்கிரம பாண்டியருக்கு ஏற்பட்டது. ஆகையால் வேலையைத் துரிதப் படுத்தும்படி கட்டளையிட்டார்.

தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்தில் பல மாணாக்கர்கள் சிற்பக் கலை கற்றுக் கொண்டிருந்தார்கள். வெவ்வேறு தேசங்களிலிருந்து வந்தவர்கள் இருந்தார்கள். பராக்கிரம பாண்டியர் உத்தம சோழரைச் சிறைப் பிடித்து வந்த சில நாளைக்கெல்லாம் தேவேந்திரச் சிற்பியின் சிற்பக் கூடத்துக்கு ஓர் இளைஞன் வந்தான். தேவேந்திரச் சிற்பி இன்னார் என்பதைத் தெரிந்துகொண்டு அவரிடம் வந்து பணிவோடு நின்று ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். 'ஐயா! நான் சோழ நாட்டைச் சேர்ந்தவன். சிற்பக் கலையில் பற்றுக் கொண்டு அக்கலையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். ஆனால் சோழ நாட்டில் இப்போது ஆலயத் திருப்பணி எதுவும் நடைபெறவில்லை. ஆகையால் என்னுடைய வித்தையைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்பி யாத்திரை கிளம்பினேன். போகுமிடமெல்லாம் மதுரை தேவேந்திரச் சிற்பியாரின் புகழைக் கேட்டு என் செவிகள் குளிர்ந்தன; என் மனமும் மகிழ்ந்தது. அத்தகைய பிரசித்தமான ஆசிரியரை என் குருவாகக் கொண்டு நான் கற்ற சிற்பக்

கலையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக வந்தேன். கருணை கூர்ந்து என்னைத் தங்கள் சீடனாக அங்கீகரிக்க வேண்டும்!' என்று சொன்னான். அந்த வாலிபனின் அடக்க ஒடுக்கமும் பணிவான பேச்சும் களைபொருந்திய முகமும் தேவேந்திரச் சிற்பியின் மனதைக் கவர்ந்தன. அக்கணமே அவனைத் தம் சீடனாக ஏற்றுக்கொண்டு சிற்பக் கூடத்தில் வேலை செய்யப் பணித்தார். ஆனால் சில நாளைக்குள்ளேயே தமக்குச் சீடனாக வந்திருப்பவன் உண்மையில் தமக்குக் குருவாயிருக்கத் தகுந்தவன் என்று தேவேந்திரச் சிற்பி தெரிந்து கொண்டார். தம்மைக்காட்டிலும் அந்த வாலிபனுக்குச் சிற்ப வித்தையின் நுட்பங்கள் அதிகமாகத் தெரியும் என்று கண்டு கொண்டார். இவ்விதம் தெரிந்து கொண்டதனால் அவர் அதிருப்தியோ, அசூயையோ கொள்ளவில்லை. அளவிலாத மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தார். இத்தகைய சிற்ப மேதாவி ஒருவன் தமக்குச் சீடனாகக் கிடைத்திருக்கிறபடியால் மீனாக்ஷி அம்மன் கோவில் திருப்பணியை விரைவாகவும் சிறப்பாகவும் நடத்தி முடிக்கலாம் என்ற நம்பிக்கை தேவேந்திரச் சிற்பிக்கு ஏற்பட்டது.

உத்தம சோழரைத் தேர்க்காலில் கட்டி இழுத்த கோரமான காட்சியைப் பார்த்த நாளிலிருந்து புவன மோகினிக்கு வாழ்க்கையில் உற்சாகமே இல்லாமல் போயிருந்தது. ஆகையினால் அரண்மனைக்குள்ளேயே இருந்து காலங் கழித்து வந்தாள். தன்னுடைய கலியாணப் பேச்சுக் காரணமாக அத்தகைய குரூரமான சம்பவம் நிகழ்ந்ததை எண்ணி எண்ணி அவள் வருந்தினாள். இது போதாததற்குச் சோழ நாட்டு இளவரசர்களைச் சிறை பிடித்துக் கொண்டு வருவதற்குத் தன் தந்தை முயன்று வருகிறார் என்னும் செய்தி அவளுக்கு இன்னும் அதிக மனச்சோர்வை உண்டாக்கியிருந்தது. இந்த நிலையில் அவள் தன்னுடைய தந்தைக்கு இணையாக மதித்து வந்த தேவேந்திரச் சிற்பியைக்கூட நெடுநாள் வரையில் போய்ப் பார்க்கவில்லை.

இப்படியிருக்கும்போது ஒரு நாள், தேவேந்திரச் சிற்பியிடம் புதிதாகச் சோழ நாட்டிலிருந்து ஒரு மாணாக்கன் வந்து சேர்ந்திருக்கிறான் என்றும் அவன் சிற்பக் கலையில் தேர்ந்த மேதாவி என்றும் கேள்விப்பட்டதாகப் புவன மோகினியிடம் அவளுடைய தோழி ஒருத்தி சொன்னாள். இதைக் கேட்டதும் புவனமோகினிக்குத் தேவேந்திரச் சிற்பியை வெகு நாளாகத் தான் போய்ப் பார்க்கவில்லையென்பது நினைவு வந்தது. அதற்குப் பரிகாரமாக உடனே அவரைப் போய்ப் பார்க்கத் தீர்மானித்தாள். முடிந்தால் அவருடைய புதிய சீடனையும் பார்க்க அவள் விரும்பினாள். சோழ நாட்டிலிருந்து வந்தவனாகையால், ஒரு வேளை சோழ இளவரசர்களைப் பற்றி அவன் அறிந்திருக்கலாம் அல்லவா? தன் தந்தையின் படை வீரர்களிடம் சோழ இளவரசர்கள் சிக்காமல் இருக்க வேண்டுமே என்று அவளுக்கு மிகுந்த கவலை இருந்தது. உத்தம சோழர் அவளுடைய அரண்மனைப் பணிப் பெண்ணாகத் தன்னை வரும்படி சொன்னதைப்பற்றி அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் இல்லாமலில்லை. ஆயினும் அந்த அவமானம் தனக்கு நேர்ந்ததின் பொறுப்பை அவள் தன் தந்தையின் பேரிலேயே சுமத்தினாள். இவர் எதற்காக வலியப் போய்த் தன்னைச் சோழ குமாரனுக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொல்ல வேண்டும்? அப்படிச் சொன்னதினால்தானே இந்த அவமானம் தனக்கு நேர்ந்தது? பாண்டிய நாட்டில் பிள்ளையைச் சேர்ந்தவர்கள் பெண்ணைத் தேடிக்கொண்டு போவதுதான் வழக்கம். சாக்ஷாத் பரமசிவனே கைலாசத்திலிருந்து மீனாக்ஷியம்மனைத் தேடிக் கொண்டு மதுரைக்கு வந்து அம்பிகையை மணந்து கொண்டாரே? அதற்கு மாறாக, பராக்கிரம பாண்டியர் மகளுக்கு வரன் தேடிக்கொண்டு ஏன் தஞ்சாவூருக்குப் போனார்? அப்படி முறை தவறிய காரியத்தைச் செய்து விட்டுப் பிறகு ஆத்திரப்படுவதில் பயன் என்ன? உத்தமசோழரைத் தேர்க்காலில் கட்டி இழுப்பதனாலோ அவருடைய குமாரர்களைச் சிறைப் பிடித்து வந்து சித்திரவதை செய்வதனாலோ அவமானம் நீங்கி விடுமா?

பெண்ணாய்ப் பிறந்தவர்கள் கலியாணம் செய்து கொண்டுதான் ஆக வேண்டும் என்பது என்ன கட்டாயம்? தமிழ் மூதாட்டியான ஔவையாரைப்



போல் ஏன் கன்னியாகவே இருந்து காலம் கழிக்கக் கூடாது? பராக்கிரம பாண்டியருடைய மகளாகப் பிறந்ததினுலே யல்லவா இவ்வளவு துன்பங்களும் அவமானங்களும் தனக்கு நேர்ந்தன? பாண்டியர் மகளாகப் பிறக்காமல் தேவேந்திரச் சிற்பியின் புதல்வியாகத் தான் பிறந்திருக்கக் கூடாதா என்று புவனமோகினி எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டாள். தன்னுடைய மனுநிலையை அறிந்து தன்னிடம் அநுதாபப் படக்கூடிய ஆத்மா இந்த உலகத்தில் தேவேந்திரச் சிற்பி ஒருவர்தான். அவரை இத்தனை நாளும் பார்க்கப் போகாமலிருந்தது தவறு. — இவ்வாறெல்லாம் எண்ணிப் பாண்டிய குமாரி அன்று மத்தியானம் தேவேந்திரச் சிற்பியின் சிற்ப மண்டபத்துக்கு வருவதாக அவருக்குச் செய்தி சொல்லி அனுப்பினுள்.

நெடுநாளைக்குப் பிறகு புவனமோகினி வரப்போவதை அறிந்து தேவேந்திரச் சிற்பியார் மிகுந்த குதூகலம் அடைந்தார். கொஞ்சகாலமாக ராஜகுமாரி தம்மை மறந்திருந்தது அவருக்கு வியப்பாயும் வருத்தமாயுமிருந்தது. ஒரு வேளை பாண்டிய மன்னர் 'அரண்மனையைவிட்டு வெளியில் போக வேண்டாம்' என்று அவளுக்குக் கட்டளை யிட்டிருக்கலாம். பராக்கிரம பாண்டியர் ஏற்கெனவே கோபக்காரர். தஞ்சைக்குப் போய் வந்ததிலிருந்து அவருடைய ஆத்திர



சுபாவம் இன்னும் மோசமாகி யிருந்தது என்பதை மதுரை வாசிகள் தெரிந்துகொண் டிருந்தார்கள். ஆகையால் பாண்டியர் புவனமோகினியை வெளியே புறப்படாமல் தடுத்திருந்தால் அதில் வியப்புறுவதற்கு ஒன்று மிராது. பராக்கிரம பாண்டியரின் இயல்புக்கு ஒத்ததாகவே இருக்கும்.

இவ்விதம் எண்ணியிருந்த தேவேந்திரச் சிற்பி அரசிளங் குமாரி வரப் போகிறான் என்னும் செய்தியினால் குதூகலம் அடைந்து, அந்தச் செய்தியை முதன் முதலில் மதிவாணனுக்குத் தெரியப்படுத்தினார். சோழ குமாரன் தன்னுடைய பெயர் மதிவாணன் என்று அவரிடம் சொல்லி யிருந்தான். ஆச்சாரிய சிற்பியார் தம்முடைய புதிய மாணாக்கனைப் பார்த்து, 'மதிவாணா! சமாசாரம் கேட்டாயா? இன்றைக்குப் பாண்டிய ராஜ குமாரி இங்கே வரப் போகிறாளாம். வருவதாகச் செய்தி சொல்லி அனுப்பி யிருக்கிறாள். புவன மோகினிக்கு என்னிடம் மிக்க வாஞ்சை உண்டு. அதைவிடச் சிற்பக் கலையில் பற்று அதிகம். அவளுடைய தந்தையான பராக்கிரம பாண்டியரிடம் எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறாளோ அவ்வளவு பக்தி என்னிடமும் அவளுக்கு உண்டு. உத்தமமான குணம் படைத்த பெண். அழகோடு அறிவும் அறிவோடு குணமும் அப்படிப் பொருந்தி யிருப்பது மிகவும் துர்லபம்!' என்றெல்லாம் வர்ணித்தார். ஆனால் அந்த வர்ணனை யெல்லாம் மதிவாணன் காதில் ஏறவே இல்லை. புவனமோகினியை அந்த வாலிபன் பேய் பிசாசு என்று நினைத்தானோ அல்லது வேறு என்ன நினைத்தானோ தெரியாது. அவள் வருகிறாள் என்ற செய்தி கேட்டதும் அவன் முகத்தில் பயப்பிராந்தியும் அருவருப்பும் திகைப்பும் விழிப்பும் தோன்றின. இதைப் பார்த்துத் தேவேந்திரச் சிற்பியும் திகைத்துப் போனார். 'ஏன், அப்பா, உனக்கு என்ன வந்து விட்டது திடீரென்று? ஏதாவது உடம்பு சரியில்லையா!' என்று கேட்டார். மாணாக்கன் குருவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து 'என்னைக் காப்பாற்றி யருள வேண்டும்!' என்று பிரார்த்தித்தான். குரு மேலும் தூண்டிக் கேட்டதின் பேரில் தன்னுடைய விசித்திரமான விரதத்தைப்பற்றிச் சொன்னான். 'குருநாதா! நான் சில காலத்துக்குப் பெண்களின் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதில்லை யென்றும், அவர்களுடன் பேசுவதில்லை யென்றும் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். தஞ்சையில் நான் முதலில் சிற்பம் கற்றுக்கொண்ட குருவுக்கு அவ்விதம் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதை மீறி நடந்தால் என்னுடைய சிற்ப வித்தையை அடியோடு மறந்து விடுவேன் என்று என் குருநாதர் சொல்லி யிருக்கிறார். ஆகையால் தாங்கள் இச்சமயம் என்னைக் காப்பாற்ற வேண்டும். ராஜ குமாரியை நான் பார்க்கவே விரும்பவில்லை. பார்த்தபிறகு அவள் ஏதாவது கேட்டால் எப்படிப் பதில் சொல்வா

திருக்க முடியும்? இந்தச் சிற்பக்கூடத்தில் ஒதுப்புறமான இடம் ஒன்றை எனக்குக் கொடுத்து விடுங்கள். நான் ஒருவர் கண்ணிலும் படாமல் என் வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன்!' என்று சீடன் முறையிட்டதைக் கேட்ட தேவேந்திரச் சிற்பியாருக்குச் சிறிது வியப்பாகத்தானிருந்தது. ஆயினும் வேறு வழியின்றி அவனுடைய பிடிவாதமான கோரிக்கைக்கு அவர் இணங்க வேண்டியதாயிற்று.

அன்று மத்தியானம் பாண்டிய குமாரி சிற்பக் கூடத்துக்கு வந்தாள். தேவேந்திரச் சிற்பியிடம் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சோழ நாட்டிலிருந்து வந்திருந்த சீடனைப் பற்றிக் கேட்டாள். அவனைப் பற்றி எவ்வளவோ பெருமையுடன் சொல்ல வேண்டுமென்று தேவேந்திரச் சிற்பி எண்ணியிருந்தார். அதற்கு மாறாக இப்போது தயங்கித் தயங்கி, பட்டும் படாமல் ஏதோ கூறினார். ஆனாலும் புவனமோகினி விடவில்லை. அந்தப் புதிய சீடனையும் அவன் செய்திருக்கும் சிற்ப வேலைகளையும் பார்க்க வேண்டும் என்று கோரினாள். 'அவனுடைய சிற்பங்களைப் பார்க்கலாம்; ஆனால் அவனைப் பார்க்க முடியாது!' என்றார் தேவேந்திரர். அவனுடைய சிற்பங்களைக் காட்டிய போது தம்முடைய புதிய சீடனைப் பற்றி அவரால் வானளாவப் புகழ்ந்து பேசாமலிருக்க முடியவில்லை. 'இந்த ரதியின் சிலையைப் பார், தாயே! அந்தச் சிலையின் கையில் உள்ள கிளியைப் பார்! என்ன ஜீவகளை! எவ்வளவு தத்ரூபம்! உயிரற்ற கல்லுக்கு இந்தப் பையன் உயிரைக் கொடுத்திருக்கிறானே? இவன் பிரம்ம தேவனைக் காட்டிலும் ஒரு படி மேலானவன் அல்லவா? நான் வேணுமானால் சொல்லுகிறேன். தஞ்சாவூரில் ராஜராஜேசுவரம் என்னும் பெரிய கோயிலைக் கட்டினானே ஒரு மகா சிற்பி, அவனுடைய சந்ததியில் இவன் தோன்றியவனாயிருக்க வேண்டும். தன் பரம்பரையைப் பற்றி இவன் எதுவும் சொல்ல மறுக்கிறான். ஆனாலும் என்னுடைய ஊகம் சரியென்பதில் என்னளவும் சந்தேகமில்லை' என்றார்.

இதையெல்லாம் கேட்ட புவனமோகினிக்குக் கட்டாயம் அந்த வாலிபச் சிற்பியைப் பார்க்கவேண்டும் என்று ஆசை உண்டாகிவிட்டது. ஆனால் அதற்குத் தேவேந்திரச் சிற்பி இடங்கொடுக்கவில்லை. புதிய சீடனிடம் அவர் இதற்குள் தன் மகனைப் போலவே அன்பு செலுத்தத் தொடங்கியிருந்தார். அவனைத் தம்முடைய தவறினால் இழந்துவிட அவர் விரும்பவில்லை. 'இன்றைக்கு வேண்டாம். அந்தப் பிள்ளைக்கு நான் சொல்லி அவனுடைய மனம் மாறும்படி செய்கிறேன். பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்றார்.

ஏதாவது ஒரு பொருளை அடைவதற்குத் தடை ஏற்பட்டால் அந்த அளவுக்கு அதன் பேரில் ஆசை அதிகமாகிறது. இது மனித இயல்பல்லவா? புதிய இளம் சிற்பியைப் பார்ப்பதில் புவனமோகினியின் ஆர்வமும் அதிகமாயிற்று. மதிவாணனுடைய விரதத்தைப் பற்றி அவளுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. பெண் முகத்தைப் பார்த்தால் கற்ற வித்தை மறந்து போகவாவது? அவர்களுடைய ஊரில், சோழ தேசத்தில், பெண்களையே இவன் பாராமலிருந்திருக்க முடியுமா? எந்தக் காரணத்தினாலோ வீண் சால்ஜாப்புச் சொல்லுகிறான். பொருத்தமில்லாத காரணத்தைச் சொல்லுகிறான். ஏதோ சூட்சுமம் ஒன்று இருக்க வேண்டும். அதை நாம் கண்டுபிடித்தே யாகவேண்டும்.—இவ்விதம் புவனமோகினி தீர்மானித்து அடிக்கடி சிற்ப மண்டபத்துக்குப் போனாள். புதிய சீடனைப் பார்க்கும் விஷயமாகத் தேவேந்திரச் சிற்பியைக் கேட்டாள். அவர் தம்முடைய பிரயத்தனம் இது வரையில் பலிதமாகவில்லை என்றார். 'மாமா! நீங்கள் அந்தப் பையன் சொல்வதை நம்புகிறீர்களா? அப்படி ஒரு குரு சாபம் இருக்க முடியுமா?' என்று கேட்டாள். 'நான் என்னத்தைக் கண்டேன், தாயே! எனக்கென்னமோ, அவனுடைய விரதம் சுத்தப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. சாக்ஷாத் மீனாக்ஷி அம்மனைப்போல் இருக்கிறாய். உன்னை அவன் ஒரு தடவை பார்த்தால்கூட அவனுடைய கலை மேம்படும் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏன்?

அவன் செய்துள்ள ரதியின் சிலைகூட இன்னும் சிறிது மேலாகவே இருந்திருக்கும். ஆனால் யாரோ என்னமோ சொன்னார்கள் என்று அவன் ஒரே குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கிறான்!' என்றார்.

அதற்கு மேலே பாண்டிய குமாரி புவனமோகினி ஒரு யுக்தி செய்தாள். தேவேந்திரச் சிற்பியின் மனதைக் கரைத்து அதற்கு அவரையும் சம்மதிக்கும்படி செய்தாள். அதாவது புவனமோகினி ஆண்வேடம் போட்டுக் கொண்டு வரவேண்டியது. காசியில் வசித்துத் திருப்பணி செய்யும் தேவேந்திரச் சிற்பியின் தமையனுடைய குமாரன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ள வேண்டியது. அப்போது மதிவாணன் ஆட்சேபம் ஒன்றும் சொல்ல முடியாதல்லவா? இந்த உபாயம் அவனை ஏமாற்றுகிற காரியமாயிருந்தாலும், அதனால் அவனுக்கு முடிவில் நன்மைதான் உண்டாகும் என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

அவ்விதமே புவனமோகினி வடதேசத்திலிருந்து வந்த வாலிபனைப் போல் வேடந் தரித்துக்கொண்டு வந்தாள். அவளுடைய உபாயம் பலித்தது. மதிவாணனை அவள் சந்திக்க முடிந்தது. ஆகா! மனித இதயத்தின் மர்மத்தைத்தான் என்னவென்று சொல்வது? மதிவாணனை முதன் முதலில் சந்தித்த அதே வினாடியில் புவனமோகினியின் இதயப்பூட்டுத் தளர்ந்து திறந்து கொண்டது. இதுவரையில் அவள் கண்டறியாத உணர்ச்சி வெள்ளம் அவளை ஆட்கொண்டது. அவள் உள்ளக் கடலில் மலைபோன்ற அலைகள் எழுந்து விழுந்தன. புயலும் தென்றலும் கலந்து அடித்தன. குதூகலமும் சோர்வும் இன்பமும் வேதனையும் அவள்மீது ஏககாலத்தில் மோதின. தன்னுடைய இருதயத்தில் என்ன நேர்ந்தது, எதனால் நேர்ந்தது என்பதையெல்லாம் அச்சமயம் அவள் தெளிவாகத் தெரிந்து கொள்ளவில்லை. போகப் போகத்தான் தெரிந்துகொண்டாள். தெரிந்துகொண்ட பிறகு ஏன் அந்த வாலிபனைச் சந்தித்தோம், அவனைச் சந்திப்பதற்காக ஏன் இவ்வளவு பிரயாசை எடுத்தோம் என்றெல்லாம் அவள் வருந்தும்படி நேர்ந்தது......"

ஐந்தாம் அத்தியாயம்

அந்தப் பெண்ணரசி கதையில் இந்தக் கட்டத்துக்கு வந்தபோது ஆடவன் குறுக்கிட்டு, "பெண்களின் விஷயமே இப்படித்தானே? வீண் பிடிவாதம் பிடித்து வேண்டாத காரியத்தைச் செய்துவிடுவது, அப்புறம் அதற்காக வருத்தப்படுவது;—தாங்கள் வருந்துவது மட்டுமா? மற்றவர்களையும் பொல்லாத கஷ்டங்களுக்கு உள்ளாக்குவது;—இது பெண் குலத்தின் தனி உரிமை அல்லவா?" என்றான்.

அவனுடைய காதலி ஏதோ மறுமொழி சொல்ல ஆரம்பித்தாள். அதற்கு இடங் கொடாமல் அந்த மோகன புருஷன் கதையைத் தொடர்ந்து கூறினான்:—

"காசியிலிருந்து வந்த தேவேந்திரச் சிற்பியின் தமையன் மகனைப் பார்த்ததும் மதிவாணனுக்கு அவனைப் பிடித்துப் போய்விட்டது. மதுரைமா நகரத்தில் பல்லாயிர மக்களுக்கு மத்தியில் இருந்த போதிலும் மதிவாணனைத் தனிமை சூழ்ந்திருந்தது. காசியிலிருந்து வந்த கோவிந்தன் என்னும் வாலிபன் அந்தத் தனிமை நோய்க்கு மருந்தாவான் என்று தோன்றியது. கோவிந்தனிடம் அந்தரங்க அபிமானத்துடன் பேசினான்; நட்புரிமை பாராட்டினான். அடிக்கடி வரவேண்டும் என்று வற்புறுத்தினான். கோவிந்தன் சிற்பக் கலையைப் பற்றி நன்கு அறிந்திருந்தான். இலக்கியங்கள் — கவிதைகளிலும் பயிற்சி உடையவனாயிருந்தான். ஆகையால் அவனுடன் அளவளாவிப் பேசுவதற்கு மதிவாணனுக்கு மிகவும் விருப்பமாயிருந்தது. கோவிந்தன், 'எனக்கு இந்த நகரில் உறவினர் அதிகப் பேர் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம்

பார்க்கவேண்டும். ஆயினும் அடிக்கடி வரப் பார்க்கிறேன்!' என்றான்.

மதிவாணனுடைய விரதத்தைப் பற்றி அறிந்துகொண்ட கோவிந்தன் தனக்கும் ஒரு விரதம் உண்டு என்று சொன்னான். அதற்காக ஆசார நியமங்களைத்தான் கண்டிப்பாக நியமிப்பதாகவும், எவரையுமே தான் தொடுவதும் இல்லை, தன்னைத் தொடுவதற்கு விடுவதும் இல்லையென்றும் சொன்னான். இதைப்பற்றி மதிவாணன் எந்த விதமான சந்தேகமும் கொள்ளவில்லை. கோவிந்தனுடைய ஆசார நியமத்தைத் தான் எதற்காகக் கெடுக்க முயல வேண்டும் என்று இருந்து விட்டான்.

பாண்டிய குமாரி புருட வேடம் பூண்டு அடிக்கடி சிற்பக்கூடத்துக்கு வந்து போவது பற்றித் தேவேந்திரச் சிற்பியின் மனதிலே கவலை உண்டாயிற்று. இதிலிருந்து ஏதேனும் விபரீதம் விளையப்போகிறதோ என்று பயப்பட்டார். பயத்தை வெளிப்படையாகச் சொல்லாமலும் இரகசியத்தை வெளியிடாமலும் தமது சீடனிடம் 'கோவிந்தன் வரத் தொடங்கியதிலிருந்து உன்னுடைய வேலையின் தரம் குறைந்துவிட்டது' என்றார். அவன் அதை ஆட்சேபித்து, 'வேலை அபிவிருத்தி அடைந்திருக்கிறது' என்றான். பாண்டிய குமாரியோ தேவேந்திரச் சிற்பியின் ஆட்சேபங்களைப் பொருட்படுத்தவில்லை. இந்த நிலைமையில் தேவேந்திரச் சிற்பி நலிவாய்த் தவித்துக்கொண்டிருந்தார். அதற்குத் தகுந்தாற்போல், அவருடைய கவலையை அதிகமாக்கும்படியான காரியம் ஒன்று நிகழ்ந்தது. மதுரை நகரின் ஒற்றர் தலைவன் ஒவ்வொரு நாள் தேவேந்திரச் சிற்பியின் சிற்பக்கூடத்துக்கு வரத் தொடங்கினான். 'யாரோ புதிதாகச் சோழ நாட்டிலிருந்து ஒரு சீடன் வந்திருக்கிறானமே? காசியிலிருந்து ஒருவன் வந்திருக்கிறானமே?' என்றெல்லாம் விசாரணை செய்யத் தொடங்கினான். தேவேந்திரச் சிற்பியார் மனதில் பயந்துகொண்டு வெளிப்படையாகத் தைரியமாய்ப் பேசினார். 'இங்கே வந்து தொந்தரவு செய்தால் பாண்டியரிடம் சொல்லுவேன்' என்று ஒற்றர் தலைவனைப் பயமுறுத்தினார். அதற்கெல்லாம் ஒற்றர் தலைவன் பயப்படவில்லை. மறுபடியும் மறுபடியும் வந்துகொண்டிருந்தான்.



ஒரு நாள் கோவிந்தன் வேடம் பூண்டு வந்த ராஜகுமாரி மதிவாணனிடம் பேசிவிட்டு வெளி வந்தபோது ஒற்றர் தலைவன் பார்த்துவிட்டான். 'நீ யார், எங்கே வந்தாய்?' என்று


கேட்டான். சந்தேகம் கொண்டு தலைப் பாகையை இழுத்து விட்டான். உடனே புவனமோகினி ரௌத்ராகாரம் அடைந்து ஒற்றர் தலைவனைக் கண்டித்துத் திட்டினாள். அவன் நடுநடுங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். பிறகு போய் விட்டான். இதெல்லாம் அரை குறையாக உள்ளே தன் வேலைக் கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்த மதிவாணன் காதில் விழுந்தது. கோவிந்தனுடைய அதிகார தோரணையான பேச்சும் குரலும் அவனுக்கு வியப்பையும் ஓரளவு திகைப்பையும் உண்டாக்கின. கோவிந்தனைப் பற்றி ஏதோ ஒரு மர்மம் இருக்கிறதென்ற ஐயம் அவன் மனதில் உண்டாயிற்று.

இது நிகழ்ந்த சில நாளைக்கெல்லாம் பராக்கிரம பாண்டியரின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக ஒரு திருவிழா நடந்தது. அன்றைக்குப் பாண்டியரும் அவருடைய குமாரியும் ரதத்தில் அமர்ந்து ஊர்வலம் போனார்கள். அப்போது மதிவாணன் சிற்பக்கூடத்தின் மேல் மாடத்தில் நின்று ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சோழ ராஜகுமாரனுடைய மனம் அப்போது பெரிதும் கலக்கத்தை அடைந்திருந்தது. அவன் மதுரைக்கு வந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆயினும் வந்த காரியம் நிறைவேறுவதற்கு வழி எதையும் அவன் காணவில்லை. உத்தம சோழரை வைத்திருந்த சிறைக்குக் கட்டுக்காவல் வெகு பலமாயிருந்ததை அவன் தெரிந்து கொண்டிருந்தான். எத்தனை எத்தனையோ யுக்திகளை அவன் உள்ளம் கற்பனை செய்தது. ஆனால் ஒன்றிலும் காரியசித்தி அடையலாம் என்ற நிச்சயம் ஏற்படவில்லை. நாளாக ஆக, பராக்கிரம பாண்டியர்மீது அவனுடைய குரோதம் அதிகமாகி வந்தது. வேறு வழி ஒன்றும் தோன்றா விட்டால், பழிக்குப் பழியாகப் பராக்கிரம பாண்டியர் மீது வேல் எறிந்து அவரைக் கொன்று விட வேண்டுமென்று எண்ணினான்.

இத்தகைய மனோ நிலையில் அவன் சிற்பக் கூடத்தின் மேன் மாடத்திலிருந்து பாண்டிய மன்னரின் நகர்வலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். பராக்கிரம பாண்டியர் வீற்றிருந்த அலங்கார வெள்ளி ரதம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. அந்த ரதத்தில் பாண்டியருக்குப் பக்கத்தில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதை அவன் கவனித்தான். பாண்டியரின் பட்டமகிஷி காலமாகி விட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் அரசர் பக்கத்தில் உட்கார்ந்து வருவது அவருடைய மகளாய்த்தானிருக்க வேண்டும். தனக்கு நேர்ந்த இன்னல்களுக்கெல்லாம் காரணமான அந்தப் பெண் எப்படித்தான் இருப்பாள் என்று தெரிந்துகொள்ள அவனை மீறிய ஆவல் உண்டாயிற்று. ஆகையால் நின்ற இடத்திலிருந்து அகலாமல் நெருங்கிவந்த ரதத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

சிற்பக் கூடத்திற்கு நேராக ரதம் வந்ததும் பாண்டிய



குமாரி சிற்பக் கூடத்தின் மேல் மாடத்தை நோக்கினாள். தேவேந்திரச் சிற்பியின் பல சீடர்களுக்கு மத்தியில் நின்ற மதிவாணனுடைய முகத்தை அவளுடைய கண்கள் தேடிப் பிடித்து அங்கேயே ஒரு கண நேரம் நின்றன. அந்தக் கணத்தில் மதிவாணன் தன் மனதைச் சில காலமாகக் கலக்கி வந்த இரகசியத்தைக் கண்டு கொண்டான். எவ்வளவு திறமையாக எத்தனை வேடங்கள் வேணுமானாலும் போடலாம். ஆனால் கண்கள் உண்மையை வெளியிடாமல் தடுக்க முடியாது. தேவேந்திரச் சிற்பியின் தமையன் மகன் என்று சொல்லிக் கொண்டு வந்து தன்னோடு சிநேகம் பூண்ட வாலிபன் உண்மையில் மாறு வேடம் தரித்த பாண்டிய குமாரி புவன மோகினிதான் என்று தெரிந்து விட்டது.



இந்த உண்மையைத் தெரிந்து கொண்டதும் சுகுமாரனுடைய உள்ளம் கொந்தளித்தது. பற்பல மாறுபட்ட உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. எல்லாவற்றிலும் முதன்மையாக இருந்தது தன்னை ஏமாற்றியவளைத் தான் ஏமாற்றி விட வேண்டும் என்பதுதான். அப்படி ஏமாற்றுவதன் மூலம் தான் வந்த காரியத்தையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதற்காக ஓர் உபாயத்தைச் சுகுமாரன் தேடிக் கடைசியில் கண்டு பிடித்தான். ஆனால் காரியத்தில் அதை நிறைவேற்ற வேண்டி வந்த போது அவனுக்கு எவ்வளவோ வருத்தமாயிருந்தது......"

கதை இந்த இடத்துக்கு வந்தபோது அந்த ஆடவனின் முகத்தில் உண்மையான பச்சாதாபத்தின் சாயை படர்ந்தது. அவனுடைய குரல் தழதழத்தது. பேச்சு தானாகவே நின்றது. அவன் கதையை விட்ட இடத்தில் அந்தப் பெண்மணி எடுத்துக் கொண்டாள்:—

"பாவம்! அந்த வஞ்சகச் சிற்பியின் கபட எண்ணத்தை அறியாத புவன மோகினி வழக்கம் போல் மறுநாள் அவனைப் பார்ப்பதற்கு ஆண் வேடத்தில் சென்றாள். அவனைத் தான் ஏமாற்றியதற்காகத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

மதிவாணன் வெகு திறமையுடன் நடித்தான். நேற்றோடு தன்னுடைய விரதத்தைக் கைவிட்டு விட்டதாகச் சொன்னான். பாண்டிய குமாரியின் சுண்டு விரல் ஆக்ஞைக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்யச் சித்தமாயிருப்பதாய்க் கூறினான். இனிமேல் ஆண் வேடம் பூண்டு வர வேண்டிய அவசியமில்லையென்றும் ராஜகுமாரியாகவே தன்னைப் பார்க்க வரலாம் என்றும் தெரிவித்தான். கள்ளங் கபடமற்ற புவன மோகினி அவனுடைய வஞ்சக வார்த்தைகளையெல்லாம் உண்மையென்று நம்பினாள்.

இந்த நாளில் மேற்கே குடகு நாட்டிற்குப் படையெடுத்துச் சென்ற பாண்டிய சேனை பெருந்தோல்வியடைந்து விட்டதாக ஒரு செய்தி வந்தது. பராக்கிரம பாண்டியர் 'தோல்வியை வெற்றியாகச் செய்து கொண்டு வருகிறேன்' என்று சொல்லி விட்டு உதவிப் படையுடன் புறப்பட்டுப் போனார். போகும்போது அவர் தம் அருமை மகளிடம் தம்முடைய முத்திரை மோதிரத்தை ஒப்படைத்து 'நான் இல்லாத காலத்தில் இராஜ்யத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது' என்று சொல்லி விட்டுப் போனார். ஆனால், தன்னுடைய உள்ளத்தையே பாதுகாக்க முடியாமல் நாடோடி வாலிபன் ஒருவனுக்குப் பறிகொடுத்து விட்ட புவனமோகினி இராஜ்யத்தை எப்படிப் பாதுகாப்பாள்? அவள் மனோநிலையை அறிந்த இளஞ்சிற்பி தன் வஞ்சக வலையைத் தந்திரமாக வீசினான்.

ஒரு நாள் புவனமோகினி தேவேந்திரச் சிற்பியின் சிற்ப மண்டபத்துக்குப் போனபோது மதிவாணன் சோகமே உருவாக உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவனுக்கு எதிரே ஒரு செப்பு விக்கிரகம் உடைந்து சுக்கு நூறாகக் கிடந்தது. அவனுடைய சோகத்துக்குக் காரணம் என்ன

வென்று பாண்டிய குமாரி கேட்டாள். நொறுங்கிக் கிடந்த விக்கிரகத்தை இளஞ்சிற்பி காட்டி, 'செப்புச் சிலை வார்க்கும் வித்தை இன்னும் எனக்குக் கைவர வில்லை. என் ஆசிரியருக்கும் அது தெரியவில்லை. இந்த உயிர் வாழ்க்கையினால் என்ன பயன்? ஒரு நாள் வைகையாற்றில் வெள்ளம் வரும் போது விழுந்து பிராணனை விட்டு விடப் போகிறேன்' என்றான். பாண்டிய குமாரியின் இளகிய நெஞ்சு மேலும் உருகியது. 'அந்த வித்தையைக் கற்றுக் கொள்வதற்கு வழி ஒன்றும் இல்லையா?' என்று கேட்டாள். 'ஒரு வழி இருக்கிறது. ஆனால் அது கைகூடுவது துர்லபம்' என்றான் மதிவாணன். மேலும் குடைந்து கேட்டதில் அவன் தன் அந்தரங்கத்தை வெளியிட்டான். 'செப்புச் சிலை வார்க்கும் வித்தையை நன்கு அறிந்தவர் ஒரே ஒருவர் இருக்கிறார். அவர் இந்த நகரத்தில் கட்டுக்காவலுடன் கூடிய கடுஞ் சிறையில் இருக்கிறார். உத்தம சோழரை ஒருநாள் இரவு தனியாகச் சிறையில் பார்க்க முடியுமானால் போதும். அவரிடம் அந்த வித்தையின் இரகசியத்தை அறிந்து கொண்டு வந்துவிடுவேன். உன்னிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேன். நான் இந்த நகருக்கு வந்ததே அந்த நோக்கத்துடனேதான். ஏதாவது ஓர் உபாயம் செய்து உத்தம சோழரைச் சிறையில் சந்தித்து அவரிடமுள்ள இரகசியத்தை அறிந்து போகலாம் என்று தான் வந்தேன். ஆனால் அது கைகூடுவதற்கு ஒரு வழியையும் காணவில்லை. நான் இந்த உலகில் உயிர் வாழ்ந்து என்ன பயன்?' என்றான். இதையெல்லாம் உண்மையென்று நம்பிய புவன மோகினி 'நீ கவலைப்பட வேண்டாம். உன்னுடைய மனோரதம் ஈடேற நான் ஏற்பாடுசெய்கிறேன்' என்றாள். அதை நம்பாததுபோல் மதிவாணன் நடித்தான். முடிவில் 'அவ்விதம் நீ உதவி செய்தால் என் உயிரையே கொடுத்தவளாவாய். நான் என்றென்றைக்கும் உன் அடிமையாயிருப்பேன்' என்றான்.

மறுநாள் புவன மோகினி மதிவாணனிடம் பாண்டிய மன்னரின் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தாள். 'இன்றிரவு இந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு சிறைக் கூடத்துக்குப்போ! இதைக் காட்டினால் திறவாத சிறைக் கதவுகள் எல்லாம் திறந்துகொள்ளும். அசையாத காவலர்கள் எல்லாரும் வணங்கி ஒதுங்கி நிற்பார்கள். உத்தம சோழரைச் சந்தித்து இரகசியத்தைத் தெரிந்து கொள். நாளைக்கு முத்திரை மோதிரத்தை என்னிடம் பத்திரமாய்த் திருப்பிக் கொடுத்துவிடு!' என்றாள்.

மதிவாணன் முத்திரை மோதிரத்தை வாங்கிக்கொண்டு மறுபடியும் நன்றி கூறினான். பாண்டிய குமாரிக்குத் தான் ஏழேழு ஜன்மங்களிலும் கடமைப் பட்டிருப்பேன் என்று சொன்னான். அவளுக்குத் தன்னுடைய இருதயத்தையே காணிக்கையாகச் சமர்ப்பித்து விட்டதாகவும் இனி என்றென்றைக்கும் அவள் காலால் இட்ட பணியைத் தன் தலையினால் ஏற்றுச் செய்யப் போவதாகவும் கூறினான். அதையெல்லாம் அந்தப் பேதைப் பெண் — புவனமோகினி — உண்மையென்றே நம்பினாள்......" (தொடரும்)



மாய மாளிகை

ரா.நா.

செல்வத்திற்குப் புகழ்பெற்ற நம் பாரத தேசத்தின் ஒரு பகுதியை முன்னொரு காலத்தில் ஒரு புகழ்பெற்ற சுல்தான் ஆண்டு வந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தனர். அந்த இளவரசர்களின் பெயர்கள் முறையே ஹுசேன், அலி, அகம்மத். மூன்று இளவரசர்களும் அழகிற் சிறந்தவர்கள்; புத்திசாலித்தனம் மிகுந்தவர்கள்; பராக்கிரமசாலிகள். சுல்தானின் அரண்மனையில் அவன் உறவினர் பெண் ஒருத்தி வசித்து வந்தாள். பார்த்தவர்கள் கண்டு மயங்கும் அழகு வாய்ந்தவளாக இருந்தாள் அந்தப் பெண். அந்த அழகியின் பெயர் நளீம். அந்தப் பேரழகி மீது மூன்று இளவரசர்களும் அளவிலா ஆசை கொண்டிருந்தனர். அவளை எப்படியாவது கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு இளவரசனும் விரும்பினான்.

நளீமுக்கு நெருங்கிய உறவினர்கள் வேறு யாரும் இல்லை. அவளுடைய தந்தை அவள் சிறு வயதாயிருக்கும் பொழுதே இறந்து விட்டதால், சுல்தான் அவளைத் தன்னிடம் அழைத்து வந்து வளர்த்து வந்தான். குழந்தைப் பருவத்திலிருந்து தங்களுடன் ஆடிப் பாடிப் பழகி வந்ததால், இளவரசர்களுக்கு அவள்மீது இயற்கையாகவே ஆசை ஏற்பட்டது. அவளுக்கு வயதாக ஆக அவள் அழகும் அதிகரித்து வந்தது. பார்த்தோர் கண்டு மயங்கக்கூடிய அவ்வழகிய பெண்ணை அவள் அழகுக் கேற்ற ராஜகுமாரனைத் தேடிப் பார்த்து மணம் செய்து வைக்க வேண்டும் என சுல்தான் ஆவலாயிருந்தான். இதற்கான ஏற்பாடுகளும் செய்து வந்தான். ஆனால், ஒரு நாள் இளவரசர்கள் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவதாகக் கேள்விப் பட்டு சுல்தான் திடுக்கிட்டான்.

இளவரசர்களை எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். ஆனால் அம்மூவரும் பிடிவாதமாக நளீமையே விவாகம் செய்து கொள்ள விரும்புவதாகக் கண்டிப்பாகக் கூறி விட்டனர்.

ஆனால் ஒருத்தியை மூவர் எப்படி விவாகம் செய்து கொள்ள முடியும்? யாராவது ஒருவன்தான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளலாம். நளீமின் காரணமாகத் தன் குமாரர்களிடையே சச்சரவு ஏற்படாமலிருக்க வேண்டுமே என சுல்தான் கவலை கொண்டான். ஆகையால் ஒவ்வொரு மகனையும் தனித்தனியாகக் கூப்பிட்டு அவர்களிடம் உண்மையான நிலைமையை விளக்கிக் கூறினான். மூவரும் நளீமைக் கலியாணம் செய்து கொள்ள முடியாது. ஆகையால் ஒவ்வொருவனும் தனக்கேற்ற ராஜகுமாரிகளைப் பார்த்து விவாகம் செய்து கொள்ளும்படி சொல்லிப் பார்த்தான். எவ்வளவு சொல்லியும் மூவரும் நளீமையே விவாகம் செய்து கொள்வது, இல்லாவிட்டால் உயிரையே மாய்த்துக் கொள்வது என்று

சபதம் செய்து விட்டனர். இந்த நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் சுல்தான் தவித்துக் கடைசியில் ஒரு யுக்தி செய்தான்.

மூன்று இளவரசர்களையும் அழைத்து அவர்களிடம் தன் யோசனையை எடுத்துக் கூறினான். "அருமை மைந்தர்களே! நளினமை நீங்கள் மூவரும் விவாகம் செய்து கொள்ள முடியாது. ஆகையினால் அந்த எண்ணத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் நீங்கள் அதற்கு இணங்கவில்லை. அவளை உங்களில் ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்தால் மற்ற இருவருக்கும் வருத்தம் ஏற்படும். அதன் பலனாக உங்களுக்குள் சண்டை ஏற்படும். அப்படிச் சண்டை ஏற்பட்டால் நமது ராஜ்யமே நாசமாகிவிடும். உங்களுக்குள் பகைமை ஏற்படாமல் யாராவது ஒருவர் நளினமைக் கலியாணம் செய்து கொள்வதற்கு நான் ஒரு யோசனையைக் கூறுகிறேன். அதன்படி நீங்கள் நடக்க வேண்டும். அந்த யோசனை என்னவென்றால், நீங்கள் மூவரும் மூன்று திக்கு நோக்கி ஏதாவது ஒரு தேசத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் திரும்பி வரும் வரை ஒருவரை யொருவர் சந்திக்கலாகாது. நான் செல்லுமிடங்களில் அபூர்வ வஸ்துக்கள் கிடைத்தால் அவற்றை எவ்வளவு விலை கொடுத்தாவது வாங்கி வருவது எனது வழக்கம். இது உங்களுக்குத் தெரியும். நீங்கள் செல்லுமிடங்களில் எது உங்களுக்கு மிகவும் அபூர்வம் என்று தோன்றுகிறதோ அவற்றை விலை கொடுத்து வாங்கி வாருங்கள். யார் மிகவும் அதிசயமான வஸ்துவைக் கொண்டு வருகிறானோ அவனுக்கு நளினமைக் கலியாணம் செய்து கொடுப்பதாக வாக்களிக்கிறேன். உங்கள் வழிச் செலவுக்கு நிரம்பப் பணம் கொடுக்கிறேன். அதிசய வஸ்துக்களை வாங்குவதற்கான பணமும் ஏராளமாகக் கொடுக்கிறேன். நீங்கள் இளவரசர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் வியாபாரிகள் மாதிரியே பிரயாணம் செய்யுங்கள். ஏனெனில் நீங்கள் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிந்தால் பொருள்களை விற்பவர்கள் ஏராளமாகப் பணம் கேட்பார்கள்."

இவ்வாறு சுல்தான் பேசியதை இளவரசர்கள் கேட்டபின் ஆலோசனை செய்தனர். தங்கள் தந்தை கூறிய யோசனை நியாயமானது என்று முடிவு செய்தனர். இந்த முயற்சியில் ஒவ்வொருவனும் தானே வெற்றி பெறப் போவதாக எண்ணியதால், சுல்தான்



யோசனைப்படி நடப்பதாக மூவரும் ஒப்புக்கொண்டனர்.

தான் கூறியபடி சுல்தான் தன் குமாரர்களுக்குப் பணம் கொடுத்தான். அவர்களும் மறுநாளே புறப்பட்டனர்.

எல்லோரும் வியாபாரிகளைப் போல உடை தரித்துக் கொண்டனர். மூவருடனும் மூன்று அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அடிமை மாதிரி உடை தரித்து இளவரசர்களுக்குத் துணையாகச் சென்றனர். மூவரும் சேர்ந்தாற்போல் கிளம்பினர். ஒவ்வொருவனும் ஒரு சிறந்த குதிரை மீது ஏறிக் கொண்டு பிரயாணத்திற்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் எடுத்துச் சென்றான். பிரயாணம் தொடங்கி முதல் நாள் மாலைப் பொழுது வரும் சமயம் அவர்கள் ஒரு சத்திரத்திற்கு வந்து சேர்ந்தனர். அந்த சத்திரத்தினருகில் மூன்று ரஸ்தாக்கள் மூன்று திசைகளில் பிரிந்து சென்றன. அன்றிரவு அவர்கள் மூவரும் அந்தச் சத்திரத்தில் தங்கினார்கள்.

இரவு போஜனம் முடிந்தவுடன், மூவரும் தங்கள் பிரயாணத் திட்டத்தைப் பற்றிப் பேசினர். சத்திரத்திலிருந்து பிரியும் மூன்று ரஸ்தாக்களில் ஒவ்வொருவனும் ஒரு ரஸ்தாவிலேயே பிரயாணம் செய்வது; ஒரு வருஷ காலம் பிரயாணம் செய்த பின் மூவரும் இந்தச் சத்திரத்திலேயே சந்திப்பது; யார் சத்திரத்திற்கு முதலில் வந்து சேருகிறார்களோ அவர்கள் மற்ற இருவருக்காகவும் காத்திருப்பது; மூவரும் வந்து சேர்ந்தவுடன் எல்லோரும் சேர்ந்து தங்கள் தந்தையைச் சந்தித்துத் தங்கள் பிரயாண விவரங்களை எடுத்துக் கூறுவது — என்று முடிவு செய்தனர்.

இவ்வாறு ஏற்பாடு செய்த மறுநாள் மூவரும் தங்கள் தங்கள் குதிரை மீது ஏறிக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

மூவரில் பெரியவனான ஹூசேன் பிஸ்நகர் நாட்டில் ஏராளமாகச் செல்வமும் உயர்ந்த பொருளும் இருக்கிறதென அறிந்திருந்தான். அந்த ராஜ்யம் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதும் அவனுக்குத் தெரியும். பிஸ்நகர் இந்தியக் கடற்கரையில் முக்கியமான ராஜ்யம். ஆகையால் அந்த நாட்டை நன்றாகச் சுற்றிப் பார்த்து அங்கு கிடைக்கக் கூடிய அதிசய வஸ்துவை வாங்கி வருவது என்று திட்டம் செய்தான். மூன்று மாதம் சளிக்கச் சளிக்கச் சுற்றிவிட்டுக் கடைசியில் அந்த நாட்டின் தலைநகருக்கு வந்து சேர்ந்தான். அங்கேதான் அந்நாட்டு மன்னன் வசித்து, சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான். அயல்நாட்டு வியாபாரிகள் தங்குவதற்கென கட்டப்பட்டிருந்த ஒரு சத்திரத்தில் ஹூசேன் தங்கினான். தலைநகர் வந்து சேர்ந்த மறுநாள் ஊரைச் சுற்றிப் பார்த்தான்.

அதையும் கொடு!



அம்பி :— கண்டக்டர்! நாலு அணா வைத்திருந்தேன். எப்படியோ அது கெட்டுப்போய் விட்டது: உம்...ம்...ஊ...ம்

கண்டக்டர் :— போனால் போகிறது. நான் இரண்டணா டிக்கட்டு உனக்கு இலவசமாகத் தருகிறேன். இந்தா வாங்கிக்கோ!

அம்பி :— ஆகட்டும், ஆனால், பாக்கி இரண்டணாவையும் நீ தான் கொடுக்க வில்லையே? ஊம்......ம்......ம்......ம்...

இம்மாதிரி அழகும் சிறப்பும் வாய்ந்த நகரத்தை அவன் பார்த்ததே இல்லை.

அந்த ஊர் வியாபாரிகள் நான்கு ஜில்லாக்களில் தங்கள் வியாபாரத்தை நடத்தி வந்தனர் என்பதை அறிந்து கொண்டான். அந்த நகரையும் அதில்வசிக்கும் ஜனங்களையும் பார்த்து ஹுசேன் பிரமித்துப் போய் விட்டான். ஆண்களும் பெண்களும் வைரங்கள், முத்துக்களால் ஆக்கப்பட்ட ஹாரங்களையும், காப்புகளையும் இதர ஆபரணங்களையும் அணிந்திருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைந்தான். அங்கே வியாபாரத்திற்கு வந்திருந்த பொருள்களும் நூதனமாகவும், விலை உயர்ந்தனவாகவும் இருந்தன. அந்நாட்டு மக்கள் கருப்பாக இருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களினால் அந்தக் கருநிறத்திலும் ஒருவித அழகு தென்பட்டது.

மலர் மாலைகள் ஒவ்வொருவர் கைகளிலும் இருந்தது மன்றி, கழுத்துகளையும் அலங்கரித்தன. மலரின் சுகமான வாசனையிலும், ஆடை ஆபரணத்தின் பிரகாசத்திலும் ஹுசேன் மயங்கிப் போய் விட்டான்.

இவ்வாறு நகரைச்சுற்றிஅலைந்ததில் ஹுசேன் களைப்புற்றான். அங்கிருந்த வியாபாரிகளில் ஒருவன் தன் கடைக்கு வந்து இளைப்பாறும்படி கேட்டுக் கொண்டவுடன் அவ்வாறே அங்கு சென்று படுத்துக்கொண்டான். சற்று தலை சாய்ந்தவுடன் வெளியே ஒரு வியாபாரி ரத்தினக் கம்பளம் ஒன்றை விலைகூறி விற்கத் தயாரா யிருப்பதாகக்கூறினது அவன் காதில் விழுந்தது. ஆறு சதுர அடியுள்ள அந்தக் கம்பளத்தை முப்பது பை தங்க நாணயம் கொடுத்தால் விற்று விடுவதாக அந்த வியாபாரி கூறினான். (தொடரும்)

எத்தனை நாள்?

ஒரு நத்தை ஒரு சுவர் மேல் ஏறுகிறது. ஒவ்வொரு நாளும் பகலில் மூன்றடி உயரம் போகிறது. ஆனால் இரவில் இரண்டடி கீழே விழுகிறது. இந்த மாதிரியாகப் போய்க் கொண்டிருந்தால் சுவரின் உச்சிக்குப்போக எத்தனை நாளாகும்? சுவரின் உயரம் 30 அடி.

சென்ற வாரத்தில் வெளியான புதிருக்கு விடை 37.

அதிகாரம் பலிக்குமா!

விக்டோரியா மகாராணி புகழ் பெற்ற ஒரு பிரிட்டிஷ் அரசி.

ஒரு நாள் இரவு அவள் அரசாங்க வேலையாக எங்கேயோ போய்விட்டு வெகு நேரம் கழித்து அரண்மனைக்கு வந்தாள். அப்போது அவளுடைய அறை உள்ளே பூட்டப்பட்டிருந்தது. கதவைத் தட்டினாள்.

உள்ளே படுத்திருந்த அவள் கணவர் ஆல்பர்ட் எழுந்து "யார் அது?" என்று கேட்டார்.

"நான்தான் பிரிட்டிஷ் மகாராணி!" என்றாள் விக்டோரியா.

"அப்படியா!" என்று சொல்லி விட்டு ஆல்பர்ட் பேசாமல் படுத்துக் கொண்டார்.

விக்டோரியா பொறுத்துப் பார்த்தாள். கதவு திறக்கப்படாததால் மறுபடியும் பலமாகத் தட்டினாள்.

"யார் அது?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தார் ஆல்பர்ட் மீண்டும்.

"நான் தான்—தெரியவில்லையா? இந்திய சக்கரவர்த்தினி!" என்றாள் விக்டோரியா.


"அப்படியா!" என்று சொல்லி விட்டு மீண்டும் படுக்கையில் படுத்துக் கொண்டார் ஆல்பர்ட்.

விக்டோரியா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அவள் கால்கள் கடுத்துவிட்டன. கதவு திறக்கப்படுவதாகக் காணோம். மூன்றாவது முறையாகக் கதவைத் தட்டினாள்.

"யார் அது?" என்று கேட்டார் ஆல்பர்ட் மீண்டும்.

"நான்தான் தங்கள் அருமை மனைவி!" என்றாள் விக்டோரியா.

ஆல்பர்ட் உடனே எழுந்துபோய் அறையின் கதவைத் திறந்தார்.



"நம்பி! ஓடிவா! அண்ணா! ஓடிவா! மன்னி! சீக்கிரம் வா! அம்மா! அந்த மதராஸ்காரர்களை இங்கே வரச் சொல்லு!" என்பதாக அவசரக் கூக்குரல்கள் கேட்டன. தடதட வென்று பலர் விழுந்தடித்து ஓடுகிற சத்தம் தொடர்ந்து வந்தது. எல்லாரும் வீட்டின் பின்புறத்தை நோக்கி ஓடினார்கள். என்னமோ ஏதோ என்று திடுக்கிட்டு நானும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றேன்.

அங்கே சிரஞ்சீவி சேஷாத்ரி ஒரு பெரிய எருமை மாட்டுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு குதித்துக் கூத்தாடிக் கொண்டிருந்தான். அந்தப் பெரிய எருமை மாட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய கன்றுக்குட்டி நின்றது. மாடும் கன்றும் நல்ல கரியநிறம். வார்னிஷ் போட்டது போன்ற பளபளப்பான கருமை. வீட்டுக்குள்ளே யிருந்து வந்த கோவிந்தனும் ராமசாமியும் சேஷாத்ரியைப் போலவே குதூகலமாய்க் குதித்துக் கொண்டு எருமை மாட்டையும் கன்றுக் குட்டியையும் பிரதட்சணம் செய்தார்கள்.

"எப்போது கன்று போட்டது?"

"அரைமணி நேரந்தானா ஆயிற்று?"

"கன்றுக்குட்டி நன்றாயிருக்கிறதே?"

"கடாக்கன்றா? கிடாரியா?"

இப்படி ஒருவருக்கொருவர் விசாரணைகள் நடந்து கொண்டிருந்தன.

இதற்குள் குடும்பத் தலைவரான ஸ்ரீ சௌம்ய நாராயணன் வந்து சேர்ந்தார்; அவரிடம் திரும்பவும் ஒரு தடவை ஆரவாரத்தோடு செய்தியைச் சொன்னார்கள்.

"கவர்னர் பண்ணையைப் பார்க்க நாளைக்கு வரப்போகிறார். இன்றைக்கு எருமை கன்று போட்டு விட்டது! எப்பேர்ப்பட்ட சகுனம்!" என்றான் சேஷாத்ரி.

"நாளைக்குக் கவர்னர் வரப்போகிறதைச் சொல்லப் போய் விட்டாயே? இன்றைக்கு இவர்கள் மதராஸிலிருந்து வந்திருக்கிறார்களே! இவர்களுக்காகத்தான் கன்று போட்டதாக இருக்கட்டுமே?" என்று ஸ்ரீ சௌம்யம் கூறி, என்னையும் என் நண்பர்களையும் புன்னகையோடு பார்த்தார்.

"கவர்னர் நாளைக்கு வருகிறதனாலே தான் இன்றைக்கு இவர்கள் வந்திருக்கிறார்கள்? ஆகையால் இந்தக் கௌரவம் கவர்னர் தம்பதிகளுக்குத்தான் போக வேண்டும்" என்றாள் வீட்டு நாட்டுப் பெண்.

"ஒரு எருமைமாடு கன்று போடுகிற விஷயம் இவ்வளவு குதூகலத்துக்குக் காரணமாயிருக்கக்கூடும் என்று நான் கனவிலும் எண்ணியதில்லை. உங்களுக்குப் பேரப் பிள்ளை பிறந்த அன்றைக்குக் கூட இவர்கள் இவ்வளவு பிரமாத குதூகலப்பட்டிருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே!" என்று நான் சொன்னேன்.

ஸ்ரீ சௌம்யம் அவர்கள் காது நன்றாகக் கேட்கச் செய்யும் கருவியை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு "என்ன சொன்னாய்?" என்று கேட்டார்.


"இந்த எருமை கன்று போட்டதற்காக இவர்கள் இவ்வளவு சந்தோஷப் படுகிறார்களே? அப்படி இது எவ்வளவு பால் கறந்து விடும்?" என்றேன்.

"வேளைக்கு நாலுபடி கறக்கும்!" என்று அவர் சொன்னதும் என் முகத்தில் ஏற்பட்ட ஆச்சரியத்தைப் பார்த்து விட்டு, "இது ஒன்றும் அவ்வளவு பிரமாதம் இல்லை. ஸிந்திப் பசு ஒன்று இருக்கிறது. வேளைக்கு எட்டுப்படி பால் கறக்கும்!" என்றார்.

நியாயமாக நான் மூர்ச்சை போட்டு விழுந்திருக்க வேண்டும். ஆனால் நின்ற இடம் எக்கச்சக்கமான கொல்லைத் தாழ்வாரமாயிருந்தபடியால் சமாளித்துக் கொண்டு "அவ்வளவு பாலையும் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டேன்.

"பாலை என்ன செய்கிறது? காய்ச்சிச் சாப்பிடுகிறது; அல்லது தயிர் ஆக்கிச் சாப்பிடுகிறது. மீந்ததை யாராவது கேட்டவர்களுக்குக் கொடுக்கிறது!"

எருமை மாடு கன்றுபோட்ட நிகழ்ச்சியும் அது சம்பந்தமான மேற்படி கொண்டாட்டங்களும் பேச்சுக்களும் திருவெங்கிமலை



கவர்னர் பவ்நகர் ராஜாவும் மந்திரி டாக்டர் ராஜனும்

என்னும் கிராமத்தில் டாக்டர் ராஜன் அவர்களின் விவசாயப் பண்ணையில் நடந்தன.

* * *

ஏறக் குறைய இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் "கிராமத்துக்குத் திரும்புங்கள்!" என்ற கோஷத்தை முதன் முதலில் நாம் கேட்டோம். பிறகு எத்தனையோ ஆயிரம் தடவை அந்த கோஷத்தைக் கேட்டிருக்கிறோம். காந்தி மகாத்மா என்ன, டாக்டர் டாகூர் என்ன, இப்படிப்பட்ட பெரியவர்கள் முதல், பிர்க்கா அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் வரையில் "கிராமத்துக்குத் திரும்பிப் போங்கள்!" என்று நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். இவ்வளவு உபதேசத்துக்கும் பிரசாரத்துக்கும் பலன் என்ன என்று கேட்டால் சென்னைமா நகரின் ஜனத் தொகை ஐந்து லட்சத்திலிருந்து பதினைந்து லட்சத்துக்கு வந்திருக்கிறது! இப்படியே ஒவ்வொரு பட்டணம் அல்லது நகரத்தின் ஜனத் தொகையும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. காந்தி மகாத்மாவின் பிரதம சீடர்கள் என்று சொல்லிக் கொள்வோர் சென்னை நகரில் தங்களுடைய உரிமையை நிலை நாட்டுவதற்காக யுக்திகள், குயுக்திகள் எல்லாவற்றையும் கையாளுகிறார்கள். "சுயராஜ்யம் வந்து பிரயோஜனமில்லை; கிராமப் பஞ்சாயத்து ராஜ்யம் வந்தால்தான் இந்தியாவுக்குக் கதிமோட்சம்" என்று பறை சாற்றும் ஆந்திர சகோதரர்கள் சென்னை நகரத்துக்காகக் கச்சை கட்டிக் கொண்டு போருக்கு ஆயத்தமாகிறார்கள். அது மாதிரியே தமிழ் நாட்டிலுள்ள காந்தி மகான் சீடர்களும் சென்னை நகரத்துக்காகத் தங்கள் கடைசிச் சொட்டு இரத்தம் வரையில் சிந்தத் தயாராயிருக்கிறார்கள்! நகர வாழ்க்கை நம்மவர்களுக்கு அவ்வளவு மோகத்தை உண்டு பண்ணியிருக்கிறது! கிராமத்து வாழ்க்கையின் பேரில் நமக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது!

இத்தகைய சூழ்நிலையில் நமக்குத் தெரிந்த ஒரே ஒரு தேச பக்தர்—அரசியல்வாதி—உண்மையாகவே கிராமத்துக்குத் திரும்பிப் போயிருக்கிறார். தாம் மட்டு மில்லாமல் தம்முடைய குடும்பத்தாரையும் கிராமத்தில் கொண்டுபோய்க் குடியேற்றி யிருக்கிறார். அவர்தான் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன். சென்னையிலிருந்து அவர் மந்திரி உத்தியோகம் பார்ப்பது முள்ளின்மேல் நிற்பதைப் போலவே கஷ்டப்பட்டுக் கொண்டு செய்யும் காரியமாகும். "எப்போது உத்தியோகத் தொல்லை விடும், எப்போது கிராமத்துக்குப் போய்க் காவேரி ஸ்நானம்

செய்து கொண்டு, விவசாயத்தைப் பார்த்துக் கொண்டு, மன நிம்மதியோடு 'ஹாய்'யாக இருக்கலாம்" என்று டாக்டர் ராஜனின் மனம் விழிப்பு நிலையில் அடிக்கடி சிந்திக்கிறது. தூங்கும்போது கனவு கண்டால் அந்த நினைவே பலவித ரூபங்களை எடுக்கிறது.

* * *

திருச்சிராப்பள்ளி நகருக்கு இருபத்தாறு மைல் மேற்கே அகண்ட காவேரியின் வட கரையில் திருவேங்கி மலை என்னும் கிராமம் இருக்கிறது. குன்றை அடுத்த கிராமமாகையால் மேட்டுப்பாங்கான நிலம்; அதோடு பயிர் பச்சை முளைக்காத களர் நிலம். இத்தகைய பிரதேசத்தில் இருநூறு எக்கர் நிலம் தெய்வாதீனமாக டாக்டர் ராஜன் அவர்களின் வசத்தில் வந்தது. அந்த இருநூறு எக்கராவில் 23 எக்கராதான் அப்போது பயிர் செய்யத் தகுதியாக இருந்தது. அதிலும் விளைச்சல் மிகவும் சொற்பம். எக்கராவுக்குப் பத்து மூட்டை நெல்தான் கிடைக்கும். மற்றதெல்லாம் பயிரிடுவதற்கே தகுதியில்லாத மட்டமான நிலம்.

நிலம் கைக்கு வந்த சமயத்தில் டாக்டர் ராஜன் அச்சமயம் தீவிரமாக நடந்து வந்த உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார். நீண்ட காலம் சிறையிலிருந்தார். சத்தியாக்கிரஹ இயக்கத்தின் வேகம் 1934-ல் ஒருவாறு குறைந்தது. டாக்டர் ராஜன் அவர்களுக்கு விவசாயத்தில் மனம் சென்றது. கைக்கு வந்த நிலத்தைப் பண்படுத்தி நன்றாக விளையச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. உடனே பின்வரும் மூன்று வகைத் திட்டங்களைப் போட்டுக் கொண்டார்.

1. களர் நிலத்தைத் திருத்திப் பண்படுத்திப் பயிரிடத் தகுதியாகச் செய்தல்.

2. நன்செய்ப் பயிருக்குத் தகுதியான எண்பது எக்கர் நிலத்துக்கு இறை குழாய்கள் அமைத்துக் காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து பாய்ச்சுதல்.

3. மற்றப் புன்செய் நிலங்களில் கிணறுகள் வெட்டியும் இறை குழாய்கள் அமைத்தும் தோட்டக்கால் பயிர்கள் செய்தல்.

இத்தகைய ஒரு திட்டத்தைப் போட்டுக் கொண்டு வேலை ஆரம்பித்தார். பதினைந்து வருஷ காலத்தில் ஏறக்குறைய மேற்படி திட்டம் பூர்த்தியாகியிருக்கிறது.



விவசாயிகளின் உபசாரத்துக்குக் கவர்னர் பதில் அளிக்கிறார்.



மாட்டுப் பண்ணையைக் கவர்னர் பார்வையிடுகிறார்!......

இருநூற்று முப்பது மூட்டை நெல் கிடைத்த பண்ணையில் இப்போது 1,750 மூட்டை நெல் கிடைத்துவருகிறது. இதைத் தவிர 300 டன் கரும்பும், ஆறாயிரம் ரூபாய் பெறுமான வாழைத் தார்களும், 300 மூட்டை நிலக்கடலையும் கிடைக்கின்றன.

“ஒரு நெல் உற்பத்தியான நிலத்தில் இரண்டு நெல் உற்பத்தியாகும்படி செய்கிறவன்தான் உலகத்தில் சிறந்த பரோபகாரி” என்று மகான் ஒருவர் கூறியுள்ளார். இந்தப்படி பார்த்தால், டாக்டர் ராஜன் நம் நாட்டுக்குச் செய்திருக்கும் உபகாரத்தின் பெருமையைச் சொல்லத்தரமன்று. சுதந்திரப் போரில் டாக்டர் ராஜன் செய்த தியாகங்கள், அநுபவித்த சிறைவாச கஷ்டங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், விவசாயத்தில் கவனம் செலுத்தி உணவு உற்பத்தியை ஓரளவு பெருக்கியதன் மூலம் அதிகத் தொண்டு தாய் நாட்டுக்குச் செய்திருக்கிறார் என்று சொல்வது மிகையாகாது.

* * *

டாக்டர் ராஜனைப் போலவே இன்னும் பலரும் தமிழ் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயன்று வெற்றியும் பெற்றிருக்கலாம். ஆனால் டாக்டர் ராஜனுடைய முயற்சியில் ஒரு தனிச் சிறப்பு உண்டு. இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் வசித்து அவர் நவ நாகரிக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர். திருச்சி நகரில் அனைவராலும் மதிக்கப்பட்டு வாழ்ந்தவர். கத்தி எடுத்து ஒரு ஆபரேஷனைச் செய்துவிட்டு நூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் சுலபமாய்ச் சம்பாதித்துப் பழக்கப் பட்டவர். நகர வாழ்க்கையை வெறுத்து விட்டு, திருச்சியில் தம்முடைய பிரசித்தி பெற்ற வைத்திய விடுதியை மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு, கிராம வாசத்தை விரும்பிச் சென்றார் என்பதும், விவசாயத்தில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றார் என்பதும் மிக முக்கியமான விசேஷங்கள். “கிராமத்துக்குப் போங்கள்” என்ற காந்தி மகானுடைய உபதேசத்தைத் தம் வாழ்க்கையில் நிறைவேற்றியிருப்பது மட்டுமல்லாமல், கிராமவாசத்தை உபயோகமாகவும் வெற்றிகரமாகவும் செய்திருக்கிறார். மற்றவர்களுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டக் கூடியவாறு அவருடைய குடும்பத்தார் கிராம வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள்.

* * *

கிராம வாழ்க்கையிலும் விவசாய முயற்சியிலும் டாக்டர் ராஜன் இத்தகைய வெற்றி பெற்றதற்குச் சாதாரண காரணங்களைத் தவிர அதிர்ஷ்டவசமான சில காரணங்களும் உண்டு. அத்தகைய அதிர்ஷ்டக் காரணங்களில் காவேரி வெள்ளம் ஒன்றாகும். திருவெங்கிமலைக் கிராமம், காவேரி நதிக்குப் பக்கத்தில் உள்ளபடியால்தான் அவர் எடுத்த காரியத்தில் இவ்வளவு தூரம் வெற்றி பெற முடிந்தது. அவருக்கு உதவி புரிந்த இன்னொரு அதிர்ஷ்டவசமான காரணம் அவருடைய குடும்பத்தார்தான்.

டாக்டர் ராஜனுடைய மாப்பிள்ளை ஸ்ரீ சௌம்யநாராயணன் அவர்களும் அவரது வாழ்க்கைத் துணைவியும் நகர வாழ்க்கையில் பழக்கப்பட்டவர்களாயினும் கிராமத்துக்குப் போய் வாசம் செய்ய இணங்கினார்கள். ஸ்ரீ சௌம்ய நாராயணன் பி. எஸ். ஸி., தம்முடைய விஞ்ஞான அறிவை யெல்லாம் விவசாயத்தில் பயன் படுத்த முனைந்தார். இந்தத் தம்பதிகளின் புதல்வர்கள் மூன்று பேரும் அதேமாதிரி விவசாயத்தில் ஊக்கம் கொண்டார்கள். புதல்வர்களில் மூத்தவராகிய ஸ்ரீ ராமசாமியும் அவருடைய மனைவியும் ‘கம்யூனிஸ்ட்’ கட்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர்கள். இருவரும் போராட்டத்

தில் ஈடுபட்டுச் சிறைவாசம் செய்தவர்கள். ஸ்ரீமதி ராமசாமி, பி. ஏ., படித்த பெண்; கர்ப்பமாயிருந்த சமயத்தில் சிறை புகுந்தார். விடுதலையான பிறகு தம்பதிகள் இருவரும் கிராமத்துக்கு வந்தார்கள். அவ்வளவுதான். கிராம வாழ்க்கையின் இன்பம் அவர்களைப் பூரணமாக வசப்படுத்திக் கொண்டுவிட்டது. உண்மையான தேசபக்தர்கள் தஞ்சமயம் செய்ய வேண்டிய முதன்மையான தொண்டை அவர்கள் இருவரும் செய்கிறார்கள். கிராமத்தின் பொருளாதாரத்தை எந்தெந்த முறையில் அபிவிருத்தி செய்யலாமோ அவ்வளவு முறைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய புதல்வியையும் மாப்பிள்ளையையும் பேரப்பிள்ளைகளையும் பேரப்பிள்ளைக்கு வாய்த்த மனைவியையும் டாக்டர் ராஜன் பெற்றது அவருடைய பெரும் பாக்கியம்.

* * *

சில காலைக்கு முன்பு டாக்டர் ராஜன் அவர்களை நான் சந்திக்க நேர்ந்த போது, வைத்திய — சுகாதார இலாகாவை அவர் எடுத்துக் கொண்ட பிறகு செய்திருக்கும் சீர்திருத்தங்களைப் பாராட்டிப் பேசினேன். டாக்டருக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. "உன்னுடைய சர்ட்டிபிகேட் எனக்கு வேண்டியதில்லை. என் விவசாயப் பண்ணையை வந்து பார்க்கும்படி எத்தனை வருஷமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்? அதை நீ செய்யவில்லை! இந்த மந்திரி வேலை என்னத்துக்குப் பிரயோஜனம்? இதில் எனக்கு மனமே இல்லை. எப்போது இந்த பாரத்தை இறக்கி விட்டுக் கிராமத்துக்குப் போவோம் என்று ஏக்கமாயிருக்கிறது!" என்று சொன்னார்.

மந்திரி உத்தியோகத்தைக் காட்டிலும் கிராம வாழ்க்கையையும் விவசாயத்தையும் டாக்டர் ராஜன் முக்கியமாகக் கருதுகிறார் என்று தெளிவாகத் தெரிந்தது.

"நீங்கள் அடுத்தாற்போல் எப்போது திருவேங்கிமலைக்குப் போவீர்கள்?" என்று டாக்டரைக் கேட்டேன்.

"அடுத்த மாதத்தில் கவர்னர் பவநகர் மகாராஜா கிராமத்துக்கு வருகிறார். அப்போது நானும் அங்கிருப்பேன்" என்றார்.


"அதே சமயத்தில் நானும் அங்கே வந்து சேர்கிறேன்" என்று சொன்னேன்.

* * *

அக்டோபர் 14உ நானும் என் நண்பர்களும் திருவேங்கி மலையை அடைந்



.........மாடுகளும் கவர்னரைப் பார்வையிடுகின்றன!



குதூகலமாக விவசாய வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ ராமசாமியும் அவர் மனைவியும்

தோம். இரண்டு நாள் கிராமவாசம் ஆனந்தமயமாக இருந்தது. மாலை நேரத்தில் காவேரியில் ஸ்நானம் செய்வதில் ஒரு தனி சுகம் இருக்கிறது. ஷவரில் குளிப்பதற்கு அடுத்தபடியாகக் காவேரியில் குளிப்பதைத் தான் சொல்ல வேண்டும்!

டாக்டர் ராஜனுடைய பண்ணையில் நடக்கும் விவசாயங்களை யெல்லாம் பார்த்தோம். கண்ணுக்கு எட்டிய தூரம் பச்சைப் பசேலென்று நெல் வயல்களும் கரும்புத் தோட்டங்களும் இருந்தன. "பார்த்தால் பசி தீரும்" என்று சொல்லக்கூடிய காட்சிகள் இவைதான். பின்னர் டாக்டர் ராஜனின் வாழைத் தோட்டத்துக்குப் போனோம். பத்து ஏக்கரா நிலத்தில் நார் போட்ட வாழை மரங்களும், மற்றும் பத்து ஏக்கரா நிலத்தில் நாலு மாத வளர்ச்சி உள்ள வாழைக் கன்றுகளும் வரிசை வரிசையாகக் காணப்பட்டன. ஒரு ஆள் தூக்க முடியாத இரு நூறு காய்களையுடைய வாழைத் தார்களைப் பார்த்த போது, "விவசாயத்தில் சிறந்தது வாழை விவசாயந்தான்" என்று தோன்றியது. தளதள வென்று வளர்ந்திருக்கும் வாழைக் கன்றுகளைப் பார்த்தால், "இதைக் காட்டிலும் கண்ணுக்கினிய காட்சி வேறொன்று இருக்கவே முடியாது" என்றுதான் நினைக்கத் தோன்றும்.

பக்கத்தில் தரிசாகக் கிடந்த களர் நிலங்கள் சிலவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நிலங்களைப் பண்படுத்துவதற்கு எவ்வளவு பிரயாசை எடுத்திருக்க வேண்டும் என்று எண்ணி வியந்தேன். இதைப்பற்றி டாக்டர் ராஜன் அவர்களுடைய பேரப் பிள்ளைகளிடம் பாராட்டிச் சொன்னேன். அவர்களுக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை. "நெல்லும் கரும்பும் வாழையும் எத்தனையோ இடத்தில் பயிராகின்றன. அதில் என்ன விசேஷம்? எங்கள் மீன் பண்ணை, கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை—இவற்றை வந்து பாருங்கள்!" என்றார்கள்.

பார்ப்பாரப் பிள்ளைகள் மீன் பண்ணையும் கோழிப் பண்ணையும் வைத்து நடத்துகிறார்கள் என்று சொன்னால், வைதிகப் பற்றுடையவர்களுக்கு அருவருப்பும் கோபமும் உண்டாகலாம். மற்றவர்களுக்கு அது ஏளனமா யிருக்கலாம்.

ஆனால் ராமசாமியும் சேஷாத்ரியும் கோவிந்தனும் அதைப் பற்றி யெல்லாம் இலட்சியம் செய்வதில்லை. கிராமவாழ்க்கை செழிக்க வேண்டுமானால் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கக் கூடாது. மற்றத் துறைகளிலும் பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டும். கோழிப் பண்ணையும் மீன் பண்ணையும் மாட்டுப் பண்ணையும் விவசாயிகள் உபதொழில்களாக நடத்தக் கூடியவை; லாபகரமானவை. அவற்றையும் வெற்றிகரமாக நடத்திக் காண்பிக்க வேண்டும் என்று டாக்டர் ராஜனின் பேரப் பிள்ளைகள் பாடு பட்டு வருகிறார்கள்.

கோழிப் பண்ணைக்குப் போய்ப் பார்த்தோம். ஐம்பது அறுபது கோழிகள் வலை வேலிக்குள் அங்குமிங்கும் ஓடித் திரிந்து கொண்டிருந்தன. அவை யெல்லாம் சீமைக் கோழிகள் என்று தெரிந்தது. இங்கிலாந்திலிருந்து நூறு கோழி முட்டைகள் ஆகாச விமானத்தில் தருவித்தார்களாம். அதற்கு ஆயிரம் ரூபாய் செலவு ஆயிற்றாம்.

சீமையிலிருந்து கோழி முட்டைப் பார்ஸல் வந்த பெட்டியை ஸ்ரீமதி ராமசாமி எங்களுக்குக் காட்டினார். அதைப் பார்த்தால் இங்கிலீஷ்காரர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள் என்று எண்ணி வியக்கத் தோன்றும். பெட்டிக்குள் ரப்பர் தட்டுகள் அடுக்கடுக்காய் இருந்தன. ஒவ்வொரு ரப்பர்

தட்டிலும் பல சிறு அறைகள். ஒவ்வொரு அறையிலும் ஒரு முட்டை இருந்ததாம். மேலேயுள்ள ரப்பர் தட்டு கீழேயுள்ள ரப்பர் தட்டை நன்றாய் அமுக்கிக் கொண்டிருக்கும். ஆகையால் பெட்டிக்குள்ளே முட்டைகள் அசைவதற்கே இடமில்லை.

இவ்வளவு ஜாக்கிரதையாகவும் சாமர்த்தியமாகவும் பந்தோபஸ்து செய்து அனுப்பியிருந்தும் நாற்பது முட்டைகள் வீணாகி விட்டன. (நானூறு ரூபாய் தொலைந்தது!) பாக்கி 60 முட்டைகளிலிருந்தும் குஞ்சுகள் வந்தன. அவை இப்போது கோழிகளாகிக் கொக்கரிக்கின்றன. வலை வேலிக்குள் அடைபட்டிருந்தும் இலேசில் அந்தக் கோழிகளைப் பிடிக்க முடியவில்லை. நம்மால் பிடிக்கவே முடியாது. கோவிந்தன் ஒரு கோழியைப் பிடித்துக் கொண்டு வந்தான். அதன் இறகுகளைத் தடவிப் பார்த்தேன். பட்டைக் காட்டிலும் மிருதுவாயிருந்தது. அந்த சிறகுகளின் நிறத்தின் வனப்பைச் சொல்லி முடியாது. இவ்வளவு அழகான கோழிகள் மனிதர்களின் வயிற்றுக்குள் போகப் போகின்றனவே என்பதை நினைத்தால் கொஞ்சம் வருத்தமாய்த்தானிருந்தது.

ஆனால் மீன்களைப்பற்றி அந்தகைய வருத்தம் ஏற்பட நியாயமில்லை. கண்ணால் பார்த்தால் தானே வருத்தம்? மீன் பண்ணைக் குளத்துக்கு எங்களை அழைத்துப்போனார்கள். "அதோ பாருங்கள்! இதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினார்கள். விதவிதமான மீன்களின் பெயர்களையும் சொன்னார்கள். "ஆமாம், ஆமாம்" என்று மரியாதைக்கு நாங்களும் சொல்லி வைத்தோம். ஆனால் எங்கள் கண்ணுக்கு மீன் ஒன்றும் புலப்படவில்லை. தண்ணீருக்குள்ளேயே அந்தப் பொல்லாத மீன்கள் பிடிவாதமாக மறைந்து கொண்டிருந்தன.

குளத்தில் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு வலை போட்டு இழுத்துக் கொண்டே போனார்கள். இப்படிச் செய்தால் மீன்கள் துள்ளி விழும், அது பார்க்க மிக அழகாயிருக்கும் என்று. வலையை இழுத்தபோது மீன்கள் துள்ளத்தான் செய்தன. ஆனால் நாங்கள் ஒரு பக்கம் பார்க்கும்போது இன்னொரு பக்கம் அவை துள்ளி விழுந்தன. "அதோ! அதோ!" என்று ஸ்ரீ ராமசாமி கத்துவதைக் கேட்டுத் திரும்பிப் பார்ப்பதற்குள் மீன்கள் மாயமாய் மறைந்து விட்டன!

தூர்ந்திருந்த குளத்தை வெட்டிக் குப்பை எடுத்தெறிந்து தண்ணீர் தேக்குவதற்குச் செலவு இரண்டாயிரம் ஆயிற்று என்று சொன்னதும், நான், "ஐயோ! அவ்வளவு செலவா?" என்றேன். "இந்தச் செலவு என்ன பிரமாதம்? ஒரு ஏக்கரா பூமியில் விவசாயம் செய்து, ஒரு ஏக்கரா குளத்தில் மீன் வளர்த்தால், விவசாயத்தில் கிடைப்பதைவிட மீனில்தான் அதிக வருமானம் கிடைக்கும்" என்றார் ராமசாமி. "ஆனால் நல்ல ஜாதி மீன் வாங்கிக்கொண்டு வந்து குளத்திலே விட்டு நன்றாகத் தீனி போட்டு வளர்க்க வேண்டும்!" என்றார். "நாசமாய்ப் போச்சு! மீனுக்கு வேறே தீனியா?" என்று எண்ணிக் கொண்டேன்.

டாக்டர் ராஜுவுடைய பண்ணையில் எருமையும் பசுவும் காளையும் கன்றுமாக நூறு மாடுகள் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கன்றுகளாகச் சொற்ப விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து பண்ணை

இரண்டு ஆள் தூக்க வேண்டிய ஈரோட்டு வாழைத்தார்



யிலேயே பெரிதாக வளர்த்தவை. இப்போது எல்லாம் மாடுகளாகி நல்ல விலைக்குப் போகக் கூடியனவா யிருக்கின்றன.

கொழு கொழு மொழு மொழு வென்று நாலு சீமைப் பன்றிகள் இருக்கின்றன. அவை நல்ல ரோஜா நிறம். அந்தப் பன்றிகளைப் பார்த்தால், "பன்றிகள் அவலட்சணமானவை, அசுத்தமானவை" என்ற அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வோம். இங்கிலாந்தில் பெரிய பெரிய பிரபுக்களும் லார்டுகளும் பன்றி வளர்க்கிறார்கள் என்று படிக்கும்போது நமக்கு ஏற்படும் வியப்பும் அருவருப்பும் இந்தப் பன்றிகளைப் பார்த்தால் போய்விடும்.

* * *

மறுநாளைக்குச் சென்னைக் கவர்னர் பவநகர் மகாராஜா திருவெள்ளி மலைக்கு விஜயம் செய்தார். விவசாயப் பண்ணை, மீன் பண்ணை, கோழிப் பண்ணை முதலியவற்றை அவரும் பார்வையிட்டார். மாடுகளுக்கும் மீன்களுக்கும் கோழிகளுக்கும் பன்றிகளுக்கும் கவர்னரும் ஒன்றுதான், மகாராஜாவும் ஒன்றுதான், நம்மைப் போன்ற வெறும் ஆள்களும் ஒன்றுதான்,—என்பதைக் கவனித்ததில் எனக்கு ஒரு திருப்தி உண்டாயிற்று "ஏடா, கவர்னர் நம்மைப் பார்க்க வருகிறாரே?" என்று கோழிகள் ஒரு உபசாரப் பத்திரமாவது தயாரித்து வைத்திருக்க வேண்டுமே? அதுதான் கிடையாது. கவர்னர் வருகையை முன்னிட்டுக் குளத்தில் இன்னும் ஆழமான பள்ளத்தில் போய் அந்த மீன்கள் ஒளிந்து கொண்டன. தங்களைப் பார்த்தால் மகாராஜாவுக்கு நாவிலே ஜலம் ஊறும் என்று அவற்றுக்கு ஒருவேளை தெரியுமோ, என்னமோ?

ஆனால் பவநகர் மகாராஜா திருவெள்ளி மலைக்கு விஜயம் செய்ததைத் திருச்சிராப்பள்ளி விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு வரவேற்பு உபசாரம் நடத்தினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் ராஜன் அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டது தங்களுக்கெல்லாம் எவ்வளவு உபயோகமாயிருந்தது என்பதைத் தெரிவித்துக் கொண்டார்கள். டாக்டர் ராஜனின் விவசாய ஊக்கத்தைப் பாராட்டுவதற்கு அறிகுறியாக அடுத்த கிராமத்து மிராசுதாரான இம்பீரியல் பாங்கி ஸ்ரீ வி.எஸ். சுப்பிரமணிய ஐயர் வருஷந்தோறும் விவசாயத்தில் முதன்மையாகத் தேறும் மாணாக்கனுக்கு டாக்டர் ராஜன் பெயரால் ஒரு மெடல் வழங்கப்போவதாகவும் அதற்காக இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாகவும் தெரியப்படுத்தினார்.

விவசாயிகள் கவர்னருக்கு அளித்த உபசாரப் பத்திரத்தில் தங்கள் குறைகளையும் தெரிவித்திருந்தார்கள். உணவு உற்பத்தியைப்பெருக்கும் விஷயத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்புப்போதாது என்று சொல்லி, நெல் கொள்முதல் முறையில் நடக்கும் அநீதிகளையும் கொடுமைகளையும் பற்றிச் சொல்லியிருந்தார்கள். கவர்னர் அவர்களுக்கு ஆறுதலாக "மந்திரிமார்கள் எல்லாக் குறைகளையும் கவனிப்பார்கள்" என்று கூறினார்.

கவர்னர் போனபிறகு டாக்டர் ராஜன் மேற்படி மிராசுதார்களைப் பிடித்துக் கொண்டார். "வெறுமனேயாவது சர்க்கார் அதிகாரிகளைக் குற்றம் சொல்கிறீர்களே! நீங்கள் எல்லோரும் யோக்கியமாக நெல்லை அளந்து விடுகிறீர்களா! அளந்து விட்டால் சர்க்கார் அதிகாரிகள் எதற்காகத் தொந்தரவு படுத்துகிறார்கள்? என்னைப் பாருங்கள்! விளையும் நெல்லில் அளக்கக் கூடியதையெல்லாம் அளந்து கொடுத்து விடுகிறேன். என்னை எந்த அதிகாரியும் தொந்தரவு செய்யவில்லையே!" என்றார்.

டாக்டர் ராஜன் அவர்களுடைய அபிப்பிராயத்தை இந்த விஷயத்தில் மற்ற விவசாயிகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். "டாக்டருக்கு என்ன சொல்லுவதற்கு? அவர் பிரபல தலைவர், எம். எல். ஸி., மந்திரி. அவரிடம் அதிகாரிகள் சரியாகத்தான் நடந்து கொள்வார்கள். நம்முடைய கஷ்டங்களை அவரால் எப்படி உணர முடியும்?" என்று சொல்லுவார்கள். அவர்கள் சொல்லுவதில் பெரிதும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. டாக்டர் ராஜனிடம் அதிகாரிகள் நடந்து கொள்ளுவதைக் கொண்டு மற்றவர்களிடம் அவர்கள் நடந்து கொள்ளும் விதத்தைத் தீர்மானிக்க முடியாது.

ஆனால் ஒரு விஷயம் நான் சொல்லக் கூடும். டாக்டர் ராஜன் பிரபல தலைவராகவும் எம். எல். ஸி. யாகவும் மந்திரியாகவும் இல்லாவிட்டாலும் அவர் எடுத்த காரியத்தில் வெற்றியடையத்தான் செய்வார்.

ஒன்றுக்கும் உபயோகமில்லாத களர் நிலத்தைப் பண்படுத்தி இனி கொஞ்சம் நன்செய் நிலமாகவும் கரும்பு — வாழைத் தோட்டமாகவும் செய்தவருக்குச் சர்க்கார் அதிகாரிகளைப் பண்படுத்திச் சரிக்கட்டி அவர்களை உபயோக முள்ளவர்களாகச் செய்வது இயலாத காரியமாகி விடுமா?

606-ம் நம்பர் கைதி

ஆசிரியை: ஸ்ரீமதி விபுலாதேவி

தமிழாக்கம்: "ரமன்"

இன்றுதான் கொலை வழக்கின் கடைசி நாள். கோர்ட்டின் உள்ளும் புறமும் ஜனங்கள் கும்பல் கும்பலாகவும் கூட்டம் கூட்டமாகவும் ஆங்காங்கு குழுமி இருந்தனர். ஒவ்வொருவரும் 'கொலைகாரன் என்ன வாக்குமூலம் கொடுக்கப் போகிறான், ஜட்ஜ் எப்படித் தீர்ப்புக் கூறப்போகிறார்?' என்பதை அறிய ஆவலாக இருந்தனர்.

சர்க்கார் வக்கீல் எழுந்து, "என்னப்பா! மிஸ்டர் ஹென்றி கரே! நீ ஒரு பெரிய வீட்டுப் பெண்ணைக் கொலை செய்ததன் காரணமாக ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?" என்று 606-ம் நம்பர்க் கைதியைப் பார்த்துக் கேட்டார்.

குற்றவாளி மெல்லத் தலையை உயர்த்தினான். பிறகு தழதழத்த குரலில், "ஐயா! நான் வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை. தயவுசெய்து எனக்குத் தூக்குக் கொடுங்கள்; எலிஜா இன்றி வாழ்வதைவிட நான் மரணத்தைத்தான் பெரிதும் விரும்புகிறேன்!" என்றான்.

சர்க்கார் வக்கீல் ஆச்சரியம் ததும்பும் குரலில், "என்ன, தூக்கு வேண்டுமா?... ஆமாம், நீ உண்மையில் எலிஜாவை நேசித்திருந்தால் அவளை ஏன் கொலை செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

கைதி எல்லோரையும் ஒருமுறை பார்த்து விட்டு, "அவள்தான் தன்னைக் கொன்று விடும்படி என்னிடம் சொன்னாள்; என் காலில் விழுந்து அழுது, 'என்னைக் கொன்று விடுங்கள், என்னைக் கொன்று விடுங்கள்!' என்று கதறினாள். நானும் கடைசியில் உணர்விழந்து அவளைக் கொலை செய்து விட்டேன்!" என்றான்.

அவன் சொன்ன பதிலைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டனர். நீதிபதிக்கு அவன் சொன்னதின் அர்த்தம் விளங்காததால் 'கைதி தன் வரலாற்றை விளக்கமாகக் கூறவேண்டும்' என்று உத்தரவு பிறப்பித்தார்.

கைதியும் ஒரு பெருமூச்சு இழுத்து விட்டு விட்டுத் தன் கதையை ஆரம்பித்தான்:

பிறந்ததிலிருந்து யார் அப்பா, அம்மா என்று அறியாத ஒரு பாவி நான். என்னைக் காருண்யம் நிறைந்த ஒருவர் ஆதரித்து வந்தார். அவரும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இறந்து விட்டதனால் நான் அனாதையாக நடுத்தெருவில் நின்று விட்டேன். அப்பொழுது எனக்கு வயது ஏழு, எட்டு இருக்கும். உண்ண உணவு இன்றி உடுக்க உடையின்றிப் படுக்க படுக்கையின்றித் தவிபாய்த் தவித்துக் கொண்டிருந்தேன். கிராமத்து ஜனங்கள் பல வசவுகளுக்கிடையில் அவ்வப்போது கொஞ்சம் ஆகாரமும் கொடுத்து என் உயிரைக் காப்பாற்றி வந்தார்கள். இப்படியே நாலு ஐந்து வருடங்கள் உருண்டு ஓடிவிட்டன.

ஒரு நாள் பாதிரி ஒருவர் எங்கள் கிராமத்துக்குப் பிரசாரத்துக்காக வந்தார். என் நிலைமையைக் கண்டு வருந்தி அவர் என்னை அழைத்து வந்து தங்கள் கிறிஸ்தவக் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டார்.

அங்கே என்னைப்போல் பல பிள்ளைகள் இருந்தனர். அவர்களோடு நானும் சில வருஷங்களில் நன்றாக எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டேன். என் திறமையைக் கண்டு பாதிரியார் என்னை மேலும் மேலும் படிப்பில் கவனம் செலுத்த வைக்கினார்.

எனக்கு வயது பதினெட்டு ஆயிற்று. தானே சம்பாதிக்கும் திறமை வந்துவிட்டதால் பாதிரியார் என்னை அன்புடன் அழைத்துக் கொஞ்சம் பணமும் கொடுத்துச் சுதந்திரமாக வாழ அனுமதித்துச் சிலுவையினால் ஆசீர்வாதம் செய்து அனுப்பினார்.

அதன் பிறகு நான் அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு 'ஸைக்கிள் ஷாப்' வைத்தேன். என் உண்மை உழைப்பினாலும், திறமையினாலும் பல கிராக்கிகள் வந்தனர். நிறைய வாடிக்கைக்காரர்களும் கிடைத்தனர். ஒரு வருஷத்திற்குள்ளாகவே என் கடையை இன்னும் கொஞ்சம் பெரிதாக்கிச் சில புதிய ஸைக்கிள்களையும் பல தனி சாமான்களையும் வாங்கி வைத்தேன்.

நாட்கள் சுகமாக ஓடிக் கொண்டிருந்தன. ஒரு நாள் என் கடையில் உட்கார்ந்து

கொண்டு, நான் ஒரு ஸைக்கிளை மிக மும்முரமாக ரிப்பேர் செய்துகொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் ஒரு பெண் வந்து, "என்னங்க! இந்த ஸைக்கிளைக் கொஞ்சம் பாருங்களேன்!" என்றாள்.

நான் அவளைப் பார்க்காமலேயே என் வேலையைச் செய்துகொண்டு, "கொஞ்சம் பொறுங்கள்; இந்தக் கை வேலையை முடித்துவிட்டு வந்து விடுகிறேன்!" என்று சொன்னேன்.

"தயவுசெய்து என் ஸைக்கிளை முதலில் பார்த்து விடுங்கள். நான் வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே நேரமாகி விட்டது; குறித்த நேரத்தில் நான் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். இல்லையேல் அபராதம் செலுத்துவதுமன்றி என் தாய் தகப்பனாரின் கோபத்துக்கும் நான் ஆளாக நேரிடும்" என்றாள்.

"இதோ பாருங்கள், நான் ஒரு வேலையை எடுத்து விட்டால் அதை முடித்து விட்டுத் தான் மற்றொரு வேலையில் கையை வைப்பேன்......மேலும் இந்த வேலையும் முடியும் தறுவாயில் இருக்கிறது" என்றேன் நான்.

பிறகு ஒரு பதிலும் வராததைக் கண்டு நான் என் தலையை உயர்த்தினேன். அவ்வளவுதான்; என் கண்கள் அப்படியே நிலைத்து நின்றுவிட்டன. ஏனென்றால் குளு குளு வென்று சாந்தம் ததும்பும் முகத்தையும், அழகிய வட்டவடிவமான நீல விழிகளையும், ஆப்பிள் பழம் போன்ற இளஞ் சிவப்பேறிய கன்னங்களையும் அதற்கு முந்தி நான் பார்த்ததேயில்லை.

அவளுடைய மனோரம்மியமான கண்களில் கலக்கம் நிறைந்திருந்ததைக் கண்டதும் என் கைவேலையை அப்படியே போட்டு விட்டு, நான் அவள் ஸைக்கிளைப் பார்க்கத் தொடங்கினேன்.

அநேகமாக அந்த வண்டி மூன்று நான்கு நிமிஷங்களில் சரிப்படுத்தப்பட்டு விட்டது. அவள் தன் ஸைக்கிளை எடுத்துக் கொண்டு, "இதற்கு என்ன தர வேண்டும்?" என்று கேட்டாள்.



"எட்டணா!" என்றேன். உண்மையில் நான் ரிப்பேர் செய்ததற்குக் கூலி கேட்கவில்லை. ஒரு புதிய 'நட்' ஒன்றைப் போட்டிருந்தேன். அதன் விலையை மட்டும்தான் சொன்னேன்.

உடனே அவள் ஒன்றும் கூறாமல் தன் சட்டைப் பைக்குள் கையை விட்டாள். பிறகு இன்னொரு பைக்குள் கையை விட்டாள். அவசர அவசரமாக அப்படியும் இப்படியும் கையை விட்டு விட்டுத் துழாவினாள்.

நான் அவளிடத்தில் பணம் இல்லையென்பதை உணர்ந்து கொண்டேன்.

பணம் கொடுக்காமல் எப்படிப் போக முடியும் என்ற கவலையினால் அவள் அழகிய முகம் வாட்டமடைந்தது.

நான் அவள் கஷ்டத்தைத் தெரிந்து கொண்டு, "பரவாயில்லை; நாளைக்குக் கொடுங்கள். இப்பொழுது ஒன்றும் எனக்கு வேண்டாம்" என்றேன்.

அவள் என்னை நன்றியோடு பார்த்து, "அவசியம் நாளைக்குக் கொண்டுவந்து கொடுத்து விடு

கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். எனக்கு ஏனோ அந்த நாள் முழுதும் அவனுடைய ஏக்கமாகவே இருந்தது.

மறு நாள் பணத்தைக் கொண்டு வந்து அவன் கொடுத்து விட்டான்.

அந்த வழியாகத்தான் பள்ளிக்கூடம் போக வேண்டுமாதலால் தினந்தோறும் என் கடைக்கு நேரே வரும்பொழுது அவன் என்னைப் பார்த்துப் புன்னகை புரிவான். நானும் ஆதரத்துடன் அந்தப் புன்னகையை வரவேற்பேன். அவன் பள்ளிக்கூடம் சென்று விட்டபிறகு 'எப்பொழுது நாலடிக்கும், எப்பொழுது பள்ளிக்கூடம் விடுவார்கள்?' என்று மணியை எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். அந்தச் சமயத்தில் நான் என்ன செய்கிறேன் என்று எனக்கே தெரிவதில்லை.

ஒரு நாள் என் வாடிக்கைக்காரர் ஒருவர் ஐந்தாவது தடவையாகத் தம் சைக்கிள் பழுது பார்க்கப்பட்டு விட்டதா என்று பார்ப்பதற்காக வந்தார். அவருடைய சைக்கிளை நான் அதுவரை பழுது பார்க்கவில்லை. எப்படிப் பார்க்க முடியும்? நான் தான் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறேனே!



அவர் எட்டாவது தடவையாக வந்தபொழுது நான் வெட்கத்துடன் அவருடைய சைக்கிளைப் பழுது பார்க்கத் தொடங்கினேன்.

அவர் புன்சிரிப்போடு, "என்ன, மிஸ்டர் ஹென்றி கரே! நீங்கள் ஏதாவது காதல் சிக்கலில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்களா, என்ன?" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "தாங்கள் சொல்லுவதின் அர்த்தம் ......" என்று தடுமாறினேன்.

"அர்த்தம் என்ன அர்த்தம்? நீங்கள் செய்யும் வேலையிலேயே தெரிகிறதே! இதைப் பூட்டுவதற்குப் பதில் அதைப் பூட்டுகிறீர்கள்; அதைப் பூட்டுவதற்குப் பதில் இதைப் பூட்டுகிறீர்கள்! சில சமயங்களில் செய்யும் வேலையையே மறந்து ரோட்டைப் பார்க்கிறீர்கள். ஒன்று கை வேலையையாவது கவனிக்க வேண்டும்; அல்லது காதல் வலையாவது விரிக்கவேண்டும். நீங்கள் ஓர் உறையில் இரண்டு கத்திகளை வைக்கப் பார்க்கிறீர்களே!" என்றார்.

அவருடைய சைக்கிளில் வேலை கொஞ்சம்தானிருந்தது. அதை முடித்து அவரிடம் கொடுத்துவிட்டு, "ஸார்! நீங்கள் சொன்னதை இனிமேல் கடைப் பிடிக்கிறேன்" என்றேன்.

"எதைக் கடைப்பிடிக்கப் போகிறீர்கள்? கை வேலையையா, காதலையா?" என்று அவர் கேட்டார்.

"கை வேலையைத்தான்!" என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே போய் விட்டார்.

அப்பொழுதுதான் எனக்கு விளங்கியது— அதாவது, நான் என்னை அறியாமல் எலிஜாவைக் காதலிக்கிறேன் என்று! "அட, பகவானே! நான் இது வரை எந்தப் பெண்ணையும் காதலிக்க வேண்டுமென்று கனவு கூடக் காணவில்லையே! அப்படியிருக்க எப்படி இதில் சிக்கிக் கொண்டேன்?......சரி, இனிமேல் எலிஜாவை மறந்துவிட வேண்டும்; அவன் நினைவை அடியோடு அகற்றி விட வேண்டும்; ஒருபொழுதும் அவனை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது; அதனால் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சரி, பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக் கொள்ள வேண்டும். மேலும் அவனிடத்தில் நாம் காதல் கொள்ள முடியுமா? அவன் எங்கே, நாம் எங்கே? மரியாதையாக அவனை மறந்து விடத்தான் வேண்டும். அவன் என்



பேரன்:—பாட்டி! நான் உனக்கு ஒரு லக்ஷ ரூபாய் ஆஸ்தி என்று சொன்னாயே! இப்போது ஒரு ரூபாய் கொடு என்றால் தரமாட்டேன் என்கிறாயே!

ணத்தைக் கண்டிப்பாகக் கிள்ளி எறியத் தான் வேண்டும்"— இப்படி என் மனம் நிச்சயித்துக் கொண்டிருக்கும்; ஆனால் என் கண்களோ அடிக்கொருதரம் 'இன்னும் அவன் வரவில்லையே, இன்னும் அவன் வரவில்லையே!' என்று அவன் வரும் வழியை நோக்கிக் கொண்டிருக்கும்.

சில சமயம் இந்தத் தடவை அவன் வரும் வழியைத் திரும்பிப் பார்க்கவே கூடாது என்று நினைப்பேன். அடுத்த கணம் ஸைக்கிளின் சத்தம் கேட்டால் போதும், உடனே ஆவலுடன் திரும்பிப் பார்த்துவிடுவேன்.

இப்படியே என்னை நானே எத்தனையோ நாட்கள் ஏமாற்றிக் கொண்டிருந்தேன். எவ்வளவுக் கெவ்வளவு என் எண்ண அலைகளை நான் அடக்க முயற்சித்தேனோ, அவ்வளவுக் கவ்வளவு அவை பீறிட்டு எழுந்து மோதிக் கொண்டிருந்தன.

சில சமயம் அவன் தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்டுப் பார்க்காததுபோல் நான் வேலையில் மூழ்கி இருப்பேன். அவன் கிட்ட வருவான்; கொஞ்சநேரம் நிற்பான்; பிறகு மணி அடிப்பான். நான் அப்பொழுதுதான் பார்த்ததுபோல், "என்ன, ஏதாவது ரிப்பேரா?" என்பேன்.

"ஒன்றுமில்லை; சும்மாதான்!" என்று சொல்லிவிட்டு, அவன் ஒரு விஷமப் புன்னகையை உதிர்த்து விட்டுப் போவான். நானும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு அவன் போகும் ஒய்யாரத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பேன்.

அன்றொரு நாள் மணி நாலரை இருக்கும். எலிஜா ஸைக்கிளிலிருந்து இறங்கி என்னண்டை வந்தான்.

"தயவுசெய்து என் ஸைக்கிளைப் பார்க்க முடியுமா?" என்றான்.

நான் உடனே என் கை வேலையைப் போட்டுவிட்டு எழுந்தேன். அவன் என்னைத் தடுத்து, "அப்படி ஒன்றும் அவசரமில்லை; அதை முடித்துவிட்டு இதைப் பார்க்கலாம்" என்றான்.

"இருந்தாலும் அதுவரை நிற்க வேண்டுமே!" என்று சொல்லிக் கொண்டே நான் அவன் ஸைக்கிளைப் பரீட்சிக்கத் தொடங்கினேன்.

அதில் ஒரு பழுதும் இல்லை. நன்றாக ஆராய்ந்து பார்த்தேன்; ஒரு குற்றமும் தென்படவில்லை.

"ஸைக்கிளில் ஒன்றுமே இல்லையே!"

"இல்லையா? எங்கேயாவது இருக்கும், பாருங்கள்!" என்றான்.

நான் திடமான குரலில், "இதில் ஒரு குற்றமும் இல்லை; நான் நன்றாகப் பரீட்சித்துப் பார்த்து விட்டேன்" என்றேன்.

எலிஜா சிரித்துக் கொண்டே ஸைக்கிளை வாங்கிக் கொண்டு, "இதில் ஏதோ கெட்டு விட்டதென்று நினைத்துக் கொண்டிருந்தேன்; நல்ல வேளை, கெட்டுப் போகவில்லை போலிருக்கிறது!" என்றான். பிறகு, எதையோ நினைத்துக் கொண்டவன் போல், "ஆமாம், மிஸ்டர் கமே! நீங்கள் வெறும் ஸைக்கிள்களைத்தான் ரிப்பேர் செய்வீர்களா, அல்லது மோட்டார்களைக் கூட......" என்று இழுத்தான்.

நான் ஒருகணம் என் பார்வையை அவன் மனோகரமான முகம் முழுதும் செலுத்தினேன். அந்த முகத்தில், 'இவனை வியர்த்தமாக வேலை வாங்கி விட்டோமே!' என்ற விசனம் கொஞ்சம்கூட இல்லை. அதற்குப் பதிலாக ரோஜா இதழ் போன்ற கன்னங்களிலும், ஜொலிக்கும் விழிகளிலும் குளிர்ப் புன்னகைகளும் முல்லை முறுவல்களும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

"ஏன், உங்கள் காரை என்னிடம் கொண்டு வரப்போகிறீர்களா, என்ன?" என்று கேட்டேன் நான்.

"ஆமாம்" என்றான்.

"சரிதான்; ஸைக்கிள் ரிப்பேர் செய்வதில் இப்பொழுது கால் வயிறு கஞ்சியாவது கிடைக்கிறது. இனிமேல் கார் ரிப்பேர் செய்யத் தொடங்கினால் அவ்வளவுதான்; நான் பசியோடு சாகவேண்டும்!"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"ஏனென்றால், பொதுவாக ஸைக்கிள்கள் எல்லா ஏழைகளிடத்திலும் இருக்கின்றன. மோட்டார் கார் சில பணக்காரர்களிடத்தில்தானே இருக்க முடியும்? அதுவும் அல்லாமல் ஸைக்கிள்களை எப்படியோ இந்தச் சிறிய இடத்தில் திறந்தி ரிப்பேர் செய்ய முடிகிறது ; மோட்டார் கார்களை ரிப்பேர் செய்ய அவ்வளவு பெரிய இடத்துக்கு நான் எங்கே போவேன் ?"

"அப்படியானால் உங்களுக்கு மோட்டார் களைக்கூடப் பழுது பார்க்கத் தெரியும் என்று சொல்லுங்கள். சரி, காரைக்கு நான் ஒரு ஆளை அனுப்புகிறேன் ; எங்கள் வீட்டுக்கு வந்து மோட்டாரைப் பாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவள் தலையைச் சாய்த்து மனதைக் கிறுகிறுக்கச் செய்யும் ஒரு பார்வையை என்மீது வீசி விட்டுப் போனாள்.

அன்றிரவு முழுதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் நெளிந்து நெளிந்து புரண்டு கொண்டிருந்தேன். அவள் வீட்டுக்குப் போவதா, வேண்டாமா? ஒரு சமயம் போகலாம் என்று நினைப்பேன் ; மறு சமயம் போகக்கூடாது என்று தீர்மானிப்பேன். இப்படியே நினைத்து நினைத்துப் பொழுதும் புலர்ந்து விட்டது. அவள் முதல் நாள் சொல்லிவிட்டுச் சென்றதற்கிணங்க, ஒரு மனிதனும் என்னை அழைத்துப் போக வந்து சேர்ந்தான்.

நான் அவனை ஒன்றும் விசாரிக்காமல் எலிஜாவின் வீட்டிற்குச் சென்றேன். அவள் வீட்டைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஏனெனில், அவள் செல்வவந்தருடைய மகள் மட்டும் அல்ல ; நல்ல அந்தஸ்து வாய்ந்த ஓர் உயர் குடும்பத்து ஒரே பெண்ணாகவும் இருந்தாள்.

'அட கடவுளே ! இவ்வளவு பெரிய இடத்துப் பெண்ணை ஓர் ஏழை காதலிப்பதா ?' என்று எண்ணினேன். அவ்வளவுதான் ; என் இதயவானில் உயர எழும்பி இருந்த மனக் கோட்டைகளெல்லாம் மளமளவென்று சரிந்து கீழே விழுந்தன.

சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்கு மோட்டார் காண்பிக்கப்பட்டது. அதை ஆழ்ந்து பரீட்சித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் எலிஜா எங்கிருந்தோ மான்போல் துள்ளி ஓடிவந்து, "ஹலோ, மிஸ்டர் கரே!" என்று என்னை அழைத்து என் தோளின்மேல் ஒரு தட்டுத் தட்டினாள்.

நான் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டேன். (அடுத்த இதழில் முடியும்)

கண்கண்ட தெய்வம்

ரா. பாலகிருஷ்ணன்

அன்று மாலை நான் காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டினான் வேலு. அதை ஒரே மூச்சில் படித்து முடித்த நான் யோசனையில் ஆழ்ந்தேன். அருகிலேயே நின்றிருந்த வேலு "என்னங்க, யாரு எழுதியிருக்காங்க?" என்று ஆர்வத்தோடு கேட்டான்.

என் குடும்பத்தைப் பற்றிய சகல விஷயங்களையும் நான் அவனுக்குச் சொல்லி விடுவது வழக்கம். அவ்வளவு நம்பிக்கையான ஆசாமி, வேலு. "என் தாயாருக்கு உடம்பு சரியில்லையாம்; என்னை வரச் சொல்லி எழுதியிருக்கிறான். அடுத்த மாதம் ஊருக்குப் போகவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது ஒரு தடவை போக வேண்டுமென்றால் லீவுக்கு என்ன செய்வதென்றுதான் யோசிக்கிறேன்" என்று அவனுக்குப் பதிலளித்தேன்.

அதைக் கேட்ட வேலு பரபரப்புடன், "என்ன, உடம்பு சரியில்லையா? அம்மாவுக்கா? நல்லா இருக்குது, நீங்க யோசனை பண்ணறது? லீவுமாச்சு, எல்லாமாச்சு! தாயாரைவிட ஆபீசு அவ்வளவு பெரிசா என்ன? கிளம்புங்க, உடனே!" என்று அவன் எனக்குச் சுவாதீனத்துடன் கட்டளையிட்டான்.

எனக்கு மட்டும் தாயாரிடம் வாஞ்சையில்லையா, என்ன? அவளுக்குப் பாரிச வாயு. அடிக்கடி ஏதாவது உபத்திரவம் நேர்ந்துகொண்டுதானிருக்கும். இருந்தாலும், வேலு கண்டித்துச் சொன்னது, என் கடமையை எனக்கு உணர்த்தியது போலிருந்தது. ஆபீசுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு, வேலுவையும் அழைத்துக் கொண்டு அன்றிரவே ஊருக்குக் கிளம்பினேன்.

அந்த நிசி வேளையின் அமைதியைக் குலைத்த தவளைகளின் குரலும், மாட்டு வண்டிபோல் அசைந்து சென்ற மதுரை பாசஞ்சரின் கட கட, தட தட வென்ற சத்தமும் என் மனப் போக்குக்கு ஒத்ததாயில்லை.

வேலு எதையோ நினைத்துக் கொண்டவன்போல், "என்ன இருந்தாலும் உங்களுக்குக் கல் மனசுங்க!" என்றான்.

"ஏன், எதனால் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன். "ஒரு தடவைக்கு இரண்டு தடவையா நான் சொன்னதுக்கு மேலென்று நீங்க கிளம்பினீங்க? தாயாரைப் பார்க்கணுமின்னு உங்களுக்கு சுயமா தோணல்லியே? இது மாதிரிதான் நான் முன்னே ஒரு தடவை கொஞ்சம் அலட்சிய புத்தியோடு நடந்துகிட்டேன். அதனாலே எத்தனை கஷ்டம் போங்க!" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான், அவன்.

"என்னப்பா கஷ்டம்?" என்று நான் கேட்டதற்கு, "உங்களுக்குத் தூக்கம் வரல்லேன்னா, கேளுங்க சொல்றேன்" என்று ஆரம்பித்தான், வேலு.

* * *

"அப்போ எனக்குப் பதினாலு வயசு இருக்கும். கல்லு மாதிரி இருந்த என் அப்பா திடீர்னு வைசூரி கண்டு செத்துப் போயிட்டாரு. அதுக்கு அப்புறம் என் அம்மாதான் என்னை வளர்த்தாங்க. அப்பாரு சம்பாதிச்ச பணம் அப்படி ஒண்ணும் அதிகப்படியா மிச்சமில்லீங்க. என்ன இருக்கப் போவுது? அந்தத் தொழிலே அப்படித்தானுங்க! எல்லாம் குடிச்சே தீர்த்துப்பிட்டாரு..."

நான் அவனை இடைமறித்து, "உன் அப்பாவுக்கு என்ன வேலை?" என்று கேட்டேன். அவன் சிரித்துக் கொண்டே, "ஓஹோ! அதைச் சொல்ல மறந்துட்டேனே, அவரு நாடகக்காரருங்க. 'ராஜபார்ட் ராமசாமி'ன்னா அந்தக் காலத்திலே இப்புட்டுப் பிள்ளைக்குக்கூடத் தெரியும். அவரு கோவலன் வேஷம் கட்டினாருன்னா பிரமாதமாயிருக்கும், போங்க! ஏதோ சம்பாதிச்சாரு. சொகுசா இருந்தாரு. போயிட்டாரு!" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டு நிறுத்தினான்.

அவனுடைய கொச்சை, கொச்சையான கிராமிய பாஷை சில இடங்களில் எனக்கு விளங்கவில்லை. "என்ன, வேலு! நீதான் விக்கிரமாதித்தன், நளமகாராஜன் கதை என்றெல்லாம் நிறையத் தமிழ்ப் புத்தகங்கள் படிக்கிறாயே, தினமும்? கொஞ்சம் நல்ல தமிழிலேயே உன் கதையைச் சொல்லேன்" என்றேன். அவனும் 'ஆகட்டும்' என்ற பாவனையில் தலையை அசைத்து விட்டுத் தொடர்ந்தான்:

"என் தந்தை இறந்ததும், என்னை வளர்க்க என் தாயார் மிகவும் சிரமப்பட்டாள். அவள் கஷ்டப்பட்டாளேயொழிய, என் கண்ணில் எந்தத் துன்பத்தையும் காட்டவில்லை. தவறாமல் பள்ளிக்கூடத்துக்குச் சம்பளம் கொடுத்து விடுவாள். ஆனால் பள்ளிப் படிப்பு என்புத்தி


யில் ஏறவேயில்லை. எங்கேயாவது நாடகம் என்றால் ஓடிவிடுவேன். என் தந்தை உயிரோடிருந்த வரையில் நான் அவர் நடிக்கும் நாடகத்துக்குப் போகாத நாளே கிடையாது.

"இப்படியே ஐந்தாறு வருஷங்கள் கழிந்தன. அப்போது நடந்த ஒரு சம்பவம்தான் என் வாழ்க்கையையே அடியோடு மாற்றி விட்டது. ஒரு நாள் எங்கள் ஊரைத் தேடி நாடகக் கம்பெனி ஒன்று வந்து முகாம் செய்தது. 'ஜில் சதாரம்' 'குலேபகாவலி' என்று பல நாடகங்களை அவர்கள் தொடர்ந்து நடத்தினார்கள். நல்ல வரும்படி. கடைசியாக வந்ததுதான் பசார நாடகம் என்று 'கோவலன்' நாடகம் நடந்தது.

"அன்றுதான் கடைசி நாள் நாடகம். விடிந்தால் கம்பெனி வேற்றூர் போவதாக இருந்தது. அன்று நான் பார்த்த அளவு ஜனத்திரள் அதற்கு முன் எந்த நாடகத்திற்கும் கூடியதில்லை. நாடகம் ஆரம்பமானதும் பபூன் வந்தான். அடுத்த சீன் கோவலன்-கண்ணகி திருமணம். கண்ணகியின் கழுத்தில் தாலி ஏறியதும் மாதவியின் நடனம். அதுவரை எல்லாம் சரியாகத்தான் நடந்தது.

"அதைத் தொடர்ந்து வர வேண்டிய காட்சி, கோவலன்-மாதவி தர்க்கம். கோவலன் வேடத்தில் தோன்றிய ஆசாமி எதிர் பாராத விதமாய் மாரடைப்பு வந்து, தலை சுற்றிக் கீழே விழுந்துவிடவே நாடகத்தை அத்துடன் நிறுத்திவிடும் படியான நிலைமை ஏற்பட்டது. ஜனங்களின் ஆரவாரமும் கூக்குரலும் எல்லை மீறியது. 'எங்கே மாதவி?' 'கொண்டு வா, கோவலனை!' என்று பலவிதமான கூச்சல்கள் ஜனங்களிடமிருந்து எழுந்தன. மேடைமீது ஒன்றிரண்டு கற்களும் வந்து விழுந்தன. நாடகக் கம்பெனியின் முதலாளி செய்வதறியாது விழித்தார். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த எனக்கு அவர் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

"திடீரென்று எனக்கொரு யோசனை உதயமாகியது. உடனே என் இடத்தை விட்டு எழுந்து அவரிடம் சென்று 'தங்களுக்குச் சம்மதமானால் கோவலன் வேடத்தை நான் ஏற்றுக் கொண்டு நடிக்கிறேன்; எனக்கு நல்ல அனுபவம் உண்டு' என்று துணிந்து கூறினேன். அவர் பதில் கூறாமல் சிரித்தார். என் பேச்சில் நம்பிக்கை இல்லை போலும்! சகஜம்தானே?



என் நண்பர்களில் சிலர், ராஜபார்ட் ராமசாமியின் மகன் நான் என்றும், கோவலன் நாடகத்தைக் கரைத்துக் குடித்தவன் என்றும் எனக்கு ஒத்துப் பாடவே அவரும் ஒரு வழியாகச் சம்மதித்தார். எப்படியாவது ஜனங்களின் ரகளை ஓய்ந்தால் போதும் என்றுதான் அவர் நினைத்திருக்க வேண்டும்.

"நாடகம் மீண்டும் தொடங்கியது. நான்தான் கோவலன் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு நடித்தேன். மாதவியின் கேள்விகளுக்கு ஏற்றவாறு நாடகத்தின் 'ஒரிஜினல் சம்பாஷணை'யை ஒட்டிச் சாதுர்யமாகப் பேசி நடித்தேன். என் தந்தை வழக்கமாக அந்தக் கட்டத்தில் பாடும், 'மாலையோ கழுத்தை விட்டு...' என்ற பாட்டை நான் பாடியதும், சபையோர் செய்த குதூகல ஆரவாரமும் கை தட்டலும் கொட்டகையையே அதிரச் செய்தது. கம்பெனி முதலாளியின் உடல் சந்தோஷத்தால் இரண்டு மடங்காகப் பருத்தது. நாடகம் முடிந்ததும் என்னை அப்படியே இரு கைகளாலும் கட்டித் தழுவினார், அவர்.

"'ஒரிஜினல் கோவலன்' வேஷக்காரருக்கு எதிர்பாராத விதமாய் ஏற்பட்ட மாரடைப்பு, என் அதிருஷ்டத்தின் பயனாய் யமன் உருவத்தில் வந்தது. அன்றிரவு படுத்தவன், பிறகு எழுந்திருக்கவேயில்லை. அவனுக்குச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்துவிட்டு, கம்பெனி எங்கள் ஊரை விட்டுப் புறப்பட்டது. ஆமாம்; நானும் கிளம்பி விட்டேன் அந்தக் கோஷ்டியுடன். அதற்குப் பிறகு 'ராஜபார்ட்' போட வேண்டியவன் நான் தானே?

"அப்போதுதான் ஒரு பெரிய தவறான காரியத்தை நான் செய்தேன். என் தாயாரிடம் 'போகிறேன்' என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் கிளம்பிவிட்டேன். சொன்னால், எங்கே அவள் வேண்டாமென்று தடுத்து விடுவாளோ என்ற பயம். தாய்ப் பாசம் பொல்லாது, பாருங்க! அது மட்டுமல்ல; அன்று மாதவி வேஷம் போட்டாளே, சிங்காரி—அதுதான் அவள் பெயர்—அவ்வளவு தூரம் என்னை மயக்கி விட்டாள், அவள். அத்தனை அழகாக இருந்தாள், சிங்காரி.

"இயற்கையின் சேஷ்டைகளுக்கு அடிமையாகி, நேற்று வந்த நாடகக்காரியின் மையலில் சிக்குண்டு, பெற்ற தாயாரையே மறந்தேன், பாவி! ஆனால், வெகு நாட்கள் அம்மாதிரி இருக்க முடியவில்லை. இடையிடையே சிற்றின்பத்தையும் மீறிக்கொண்டு அலைபோல் மோதும், தாயாரின் நினைவு. அப்போதெல்லாம் தாயாருக்கு ஒன்றிரண்டு தடவை பணம் அனுப்பி வைப்பேன். ஆனால் பணம் அவள் கைக்குச் சேராமல், திரும்பி என்னிடமே வந்து கொண்டிருந்தது.

"ஆறு மாதங்களுக்குப் பின் ஊருக்குக் கிளம்பினேன், அம்மாவைப் பார்க்க. அங்கே என் வீடு - இல்லை, என் தாய் வசித்து வந்த வீடு - பூட்டிக் கிடந்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்ததில், அவள் என்னைத் தேடிக்கொண்டு கிளம்பி விட்டதாக அறிந்து, கரை காணாத வருத்தத்துடன் திரும்பினேன்.

"திருச்சி ஜில்லாவில் சமயபுரம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அங்குதான் எங்கள் நாடகக் கோஷ்டி அப்போது முகாம் செய்திருந்தது. நான் திரும்பி வந்தவுடன், எங்கள் முதலாளி இறந்து விட்டதையும் தமக்குப் பிள்ளை குட்டி இல்லாததால் அவர் நாடகக்கம்பெனியை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டார் என்பதையும் தெரிந்து கொண்டேன். என்னால்தான் நாடகக் கம்பெனி அவ்வளவு பிராபல்யம் அடைந்தது என்ற காரணத்தால் முதலாளிக்கு என்னிடம் அத்தனை பிரியம்.

"ஒருநாள் உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர் என்னிடம் வந்து, 'மாரியம்மன் கோவில் உற்சவம் நாளை ஆரம்பமாகிறது; உங்களால் ஏதாவது பண உதவி செய்ய முடியுமா?' என்று கேட்டார். 'எவ்வளவு செலவு ஆகும்?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'பத்து நாட்கள் உற்சவம்; முந்நூறு ரூபாய்க்குமேல் பிடிக்கும். கடைசி நாளன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது வழக்கம். உங்களாலியன்றதைக் கொடுக்கலாம்' என்றார். பெட்டியைத் திறந்து அதிலிருந்த என் சொந்தப் பணம் நானூறு ரூபாயை எடுத்து அவரிடம் கொடுத்து, 'நீங்கள் மற்றவர்களிடம் வசூலிக்கும் பணத்தைக் கொண்டு உற்சவம் நடத்துங்கள். இந்தப் பணத்தைக் கொண்டு பத்து நாட்களும் அன்னதானம் செய்யுங்கள்!' என்றேன். அவர் உற்சாகத்துடன் அப்படியே செய்வதாகச் சொல்லிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

"மாரியம்மன் என்றாலே எனக்கு அலாதியான பக்தியும் பயமும் ஒருங்கே தோன்றிவிடும். ஒரு சம்பவம், கேளுங்கள்: எனக்குப் பத்து, பன்னிரண்டு வயதிருக்கும். என் தந்தை நாடக விஷயமாக வெளியூர் போய்விட்டார். எனக்குக் கடுமையான வைசூரி கண்டு விட்டது. அத்துடன் காய்ச்சல் வேறு. என் தாயார் இரவும் பகலும், ஊண் உறக்கமின்றி என்னருகிலேயே இருந்து அந்த எட்டு

நாட்களும் செய்த சிச்ருஷைக்கு, இந்த உடலையே செருப்பாகத் தைத்துப் போட்டாலும் ஈடாகாது. அதை நினைக்கும்போது என் மனம் இப்போதுகூடத் துடிதுடிக்கிறது. ஜுர வேகத்தில், 'அம்மா, நான் செத்துப் போய்விடுவேனா?' என்று கேட்டேன். அவள் பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு, 'கண்ணே, வேலு! கவலைப் படாதேடா, என் ராசா! மாரியாத்தா உனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டா!' என்று உறுதியிட்டு என்னிடம் கூறிவிட்டு, இரு கைகளையும் கூப்பியபடி, 'மகமாயி, தாயே! என் மகனைக் காப்பாத்து; உன் பிச்சையாக இருக்கட்டும்' என்று வேண்டிக் கொண்டு ஒரு மஞ்சள் துணியில் நான்கணா வெள்ளிப்பணத்தை முடிந்து வைத்தாள்.

"என்னைத் தொட்டால் எங்கே தன்னையும் வைசூரி தொத்திக் கொள்ளுமோ என்று கொஞ்சமும் யோசனை செய்யாமல் என்னை அணைத்துக் கொண்டாள், அவள். 'அம்மா! நான் பொழைச்சு எழுந்தேன்னா, அப்பாமாதிரி உன்னை வீட்டிலே தனியே விட்டுட்டு எங்கேயும் போகவே மாட்டேன். நல்லாப் படிச்சு ஒரு வேலை தேடிக்கிட்டு உன்னைச் சொகமா காப்பாத்துவேன், அம்மா!'' என்று அவளுக்கு உறுதியிட்டுக் கூறினேன். 'நீ சொன்னதே போதும்டா, என் ராசா!' என்று சொல்லி அவள் என்னை மீண்டும் அணைத்துக் கொண்டாள். கடைசியில், அவள் சொன்னபடியேதான் ஆயிற்று. அவளுக்கு என்னால் யாதொரு பிரயோசனமுமில்லாமற் போயிற்று!'' என்று சொல்லி, வேலு தன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

வண்டி அப்போதுதான் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நின்றுவிட்டுக் கிளம்பியது.

உணர்ச்சியின் வேகத்தால் உந்தப்பட்ட வேலு தன் சொந்தக் கிராமிய நடையிலேயே பாக்கிக் கதையைத் தொடர்ந்தான்:

"அன்னிக்கு, கடைசி நாள் உற்சவம்; ரொம்ப ஏழை ஜனங்க சாப்பிட்டாங்க. நானும் கூட இருந்து அவங்க வயிறு நிறையச் சாப்பிட்டதைப் பார்த்துத் திருப்தியடைஞ்சேன். அப்புறமா, கோவிலுக்குப் போயி அம்மனைத் தரிசனம் பண்ணிட்டு, தேர் கிளம்பறமட்டும் அங்கேயே இருந்தேன். நான் வீட்டுக்குத் திரும்பறபோது மணி பன்னிரண்டு அடிச்சுது.

"கதவு திறந்தே கிடந்தது. சிங்காரி வீட்டிலே இல்லே. அவ ஏன் இருக்கப் போறா? அங்கே ஒரு கடிதாசு மாத்திரக்

தான் இருந்துச்சு; இதோ, அதை நீங்களே படிச்சுப் பாருங்க!" என்று சொல்லித் தன் சட்டைப் பையில் பத்திரமாக வைத்திருந்த ஒரு கசங்கிய காகிதத்தை என்னிடம் தந்தான், வேலு. அவன் தாயார் எழுதியிருந்த கடிதம் அது. தட்டுத் தடுமாறி, பென்சிலால் எழுதப்பட்டிருந்த அதைப் பின்வருமாறு படித்தேன் :

" அருமை மகன் வேலுவுக்கு,

நீ வீட்டை விட்டுக் கிளம்பியதும் எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. கையில் பணமுமில்லை. உன் அப்பா இருந்த காலத்திலேயே வீட்டையும் விற்றுவிட்டது. எங்கேயாவது வேலை செய்து பிழைக்கலாமென்றால் அதற்கும் என் உடம்பில் தெம்பு இல்லை. உன்னை எங்கெல்லாமோ தேடியலைந்தேன். என்றாவது ஒருநாள் உன்னைக் காணமாட்டேனா என்ற ஆசையால் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கவும் துணிந்தேன்.

கடைசியாக, இன்று நீ போட்ட சாதத்தைச் சாப்பிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கோவிலில் ஆயிரக் கணக்கான ஏழைகள் சாப்பிட்டார்களே, அவர்களில் நானும் ஒருத்தி. அப்போது உன்னை என் கண் குளிரப் பார்த்து மகிழ்ந்தேன். நீ அவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருக்கும்போது, 'மகனே' என்று உன்னை அழைக்க என் மனம் துணியவில்லை. மேலும், நாலு பேர் மத்தியில் உன்னுடன் பேசி அதன்மூலம் நீ ஒரு பிச்சைக்காரியின் மகன் என்பது உலகிற்குத் தெரிந்தால், எங்கே உன் கௌரவத்துக்குப் பங்கம் விளையுமோ என்று அஞ்சினேன்.

தனியாக உன்னைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்துடன் உன் வீடு தேடி வந்தேன். அங்கே எனக்கு முகம் கொடுத்துப் பேசக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? தெருவில் போய்க் கொண்டிருந்த ஒரு பையனைக் கொண்டு இந்தக் கடிதம் எழுதி உன் வீட்டில் சேர்ப்பித்தேன். என்னை நீ வேறு எங்கும் தேடாதே! திருக்குளத்தின் கீழ்க்கரையில் ஒரு பிணம் மிதக்கும். அதற்கு நீ உன் கையால் கொள்ளி போட்டுவிட்டால், உன் கடமையைச் செய்தவனாவாய்!

இப்படிக்கு,
உன் அருமைத் தாயார்

இதைப் படித்ததும் என் கண்களில் நீர் துளித்தது. "அப்படியானால் உன் தாயார்......" என்று நான் கேட்டு முடிக்கு முன்பே, "சொன்னபடியே செய்துட்டா, அவ. கொள்ளி போட்டேனே, அவள் பிணத்திற்கு—அது ஒன்று தான் நான் அவளுக்குச் செய்தது. அதுக்கு மேலே எனக்கு ஏது வாழ்வு? பிச்சைக்காரியின் மகனோடே வாழப் பிடிக்காமல் சிங்காரியும் ஓடிவிட்டாள், என் பணத்தைச் சுருட்டிக் கொண்டு. அவ போனாப் போகட்டும், கழுதை! தாயார்தானுங்க இந்தக் கலிகாலத்திலே கண்கண்ட தெய்வம்!" என்று சொல்லித் தன் கதையை முடித்தான், வேலு.

நான் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினேன். அருணன் உதய மாகிக் கொண்டிருந்தான்.

காலக்ஷேபம்

உபாத்தியாயர் :—டேய் மணி, காட்டில் வாழும் எட்டு கொடிய மிருகங்களைச் சொல்லு, பார்ப்போம்!

மணி :—ஐந்து சிங்கங்கள், மூன்று புலிகள், ஸார்!

★

புருஷன்:—உனக்கு வைர அட்டிகை வாங்கிப் போட்டது போல் ஒரு சொப்பனம் கண்டேன்......!

மனைவி:—போகிறது, தூக்கத்திலாவது நல்ல புத்தி வந்ததே!

★

சித்திரக்காரர்:—எப்படி யிருக்கிறது என் சித்திரம்?

நண்பர்:—ரொம்ப பேஷ், போங்கள்! அதில் ஒரு ஆரஞ்சுப்பழம் போட்டிருக்கிறீர்களே, அதைப் பார்த்தால் நாக்கில் ஜலம் ஊறுகிறது!

சித்திரக்காரர்:—அட கடவுளே! அது ஆரஞ்சுப்பழம் இல்லை, அஸ்தமன சூரியன், ஐயா!

வீட்டுக்கார அம்மாள்:—என்ன அப்பா, வாடிக்கையாக விடும் பாலைக் குறைத்து விட்டாயே!

பால்காரன்:—மறந்து போய் விட்டேன்; நாளைக்குச் சேர்த்துக் கொடுக்கிறேன்.

வீ. அ:—பாலை வைத்துக்கொண்டே இல்லை என்கிறாயே; இருக்கிற பாலைக் கொடு!

பால்காரன்:—அது அடுத்த வீட்டுக்குங்க!

வீ. அ:—அவர்களிடம் மறந்து விட்டேன் என்று சொல்வேன்.

பால்காரன்:—நேற்றுத்தான் அவர்களுக்கு மறந்து போனேன்; தினமும் ஒருத்தர் வீட்டுக்கே மறப்பது நல்லாயிருக்குமா?

★

உபாத்தியாயர்:—என்டா, ராமு! இந்தக் கணக்கைப் பார்த்தால் உங்கள் அப்பா கையெழுத்து மாதிரி இருக்கிறதே!

ராமு:—இல்லை, ஸார்! நான்தான் போட்டேன். ஆனால் அப்பாவின் பேனாவினால் எழுதினேன்!

படித்துப் பார்!

இராஜாஜி

ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் நம் கல்வி முறை அடைந்த பல சீர்கேடுகளில், நம் நாட்டுப் பேரறிஞர்களையும் வீரர் பெருமக்களையும் பற்றி நம் மாணவர்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்குப் போதிய வசதி செய்யப்படாதது ஒன்றாகும். நல்ல வேளையாக அந்தப் பெருங் குறைக்கு இப்போது ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது போலத் தோன்றுகிறது. தமிழன்னை ஈன்றெடுத்த தவப் புதல்வர்களில் ஒருவரும், சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலுமாகிய இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை இண்டர்நேஷனல் பப்ளிஷிங் கம்பெனியார் ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். மாணவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் பெரும்பாலும் சுவை எதுவும் இல்லாமல் வெறும் விஷயத் தொகுப்பாகச் சப்பென்றிருக்கும். இந்தப் புத்தகம் அதற்கு முற்றிலும் விதிவிலக்காக விளங்குகிறது. மாணவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது. தமிழ் மாணவர்களுக்கு இது ஒரு அரும் பொக்கிஷமாகும். விலை அணா 14. ஆசிரியர்: மு. பா. ஸ்ரீநிவாஸன்; பிரசுரம்: இண்டர் நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி, நுங்கம்பாக்கம், சென்னை.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

சுந்தரகாண்டம் (இரண்டாம் பாகம்)

வடமொழியில் ஆதிகாவியமாக விளங்கும் வால்மீகி ராமாயணத்தில் சாஸ்திர ரத்னாகரம் பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரியாருக்கு உள்ள புலமை அவருடைய நூல்களைப் படித்தவர்களுக்கு நன்றாகத் தெரிந்தது தான். இதுவரை அவர் ஐந்து காண்டங்களைத் தமிழாக்கியிருக்கிறார். இப்போது சுந்தர காண்டத்தின் இரண்டாவது பாகம் வெளி வந்திருக்கிறது. வழக்கம்போல, ஸ்ரீ சாஸ்திரியாரின் மேதையையும், நுண்ணறிவையும், ஆராய்ச்சித் திறமையும் நாம் இதில் காண்கிறோம். விலை ரூ. 3. கிடைக்குமிடம்: குருகுலம், அபிராமபுரம், சென்னை 18.

மகான் காந்தி

மகாத்மாவின் வாழ்க்கை ஒரு மாபெரும் இதிகாசம். அதை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது இந்நூல். விலை ரூ. 1.

வெடி நாலூறு

நினைத்தாலும் படித்தாலும் பிறர் சொல்லக் கேட்டாலும் நம்மையும் மீறிச் சிரிக்கவைக்கும் சொற்சுவை ஹாஸ்ய வெடிகள் நானூறு இந்நூலில் அடங்கி இருக்கின்றன. விலை அணா 10.

முத்துக் குவியல்

அரசியல் தியாகிகளும், பேரறிஞர்களும் இலக்கிய மேதைகளும், முற்றும் உணர்ந்த ஞானிகளும் அருளிய அருள் மொழிகள் பல தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது இந்நூலில். சமுதாய நல்வாழ்வுக்கு ஆத்மீக அறிவையும் சிந்தனை வளத்தையும் அளிக்கவல்லது. விலை: அணா 12.

மேற்கூறிய மூன்று நூல்களையும் தொகுத்தவர்கள்: சாம்ராஜ்—மணி; பிரசுரம்: புதுமுறை வெளியீடு, மாம்பலம், சென்னை 17.

தேச கோஷ மாலை

தேசத்துக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து அமரத்துவம் அடைந்த நம் மாபெரும் தலைவர்களாகிய லோகமான்ய திலகர், லஜபதி ராய், சுப்ரமண்ய சிவா முதலியோரைப் பாராட்டி அவர்கள்மீது புனையப்பட்ட முப்பது பாக்கள் அடங்கியிருக்கின்றன இந்நூலில். விலை அணா 4. ஆசிரியர்: க. கி. குமாரசிவம்; கிடைக்குமிடம்: க. ந. கந்தசாமி, கணபதி போஸ்ட், கோயமுத்தூர்.

பக்தி மார்க்கம்

சுவாமி பரமானந்தர் ஆங்கிலத்தில் எழுதிய இந்நூலை ராமகிருஷ்ண மடத்தார் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இது ஐந்தாவது பதிப்பு என்பதிலிருந்தே இந்நூலின் பெருமையைத் தெரிந்து கொள்ளலாம். விலை அணா 8. பிரசுரம்: ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.



சித்திரலேகா

ஸ்ரீ பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா.வீ.

சித்திரலேகா சுவேதாங்கனின் கையை விட்டுவிட்டாள். "கேள், இன்று எனக்குக் கிடைத்த வெற்றி உண்மையில் வெற்றியே அல்ல. அதை மாபெரும் தோல்வி என்று தான் கூறவேண்டும். குமாரகிரி என் வாழ்க்கையையே ஆக்கிரமித்து ஆட்கொண்டு விட்டான்" என்றாள்.

பீஜகுப்தன் ஜாடை மாடையாகச் சொன்ன அந்தப் பயங்கர உண்மையின் நிலை சுவேதாங்கனுக்குச் சிறிது விளங்கியது. இருந்தாலும் அவன் தன் அவநம்பிக்கையைப் போக்கிக் கொள்வதற்காக, "அது எப்படி?" என்று கேட்டான்.

"எப்படியா? இதுகூட உனக்குப் புரியவில்லையா? கேள்: குமாரகிரியிடத்திலே நான் என் மனதைப் பறிகொடுத்து விட்டேன். யுக யுகாந்தரமாகக் குமாரகிரிக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏதோ உண்டாகிறது. இன்று ராஜ சபையிலே கூடியிருந்த பாரத நாட்டுப் பழம்பெரும் வித்வான்களையெல்லாம் கூட அந்த யோகி வெற்றி கொண்டு விட்டான். அங்கே கூடியிருந்த அவ்வளவு பேருடைய மனதையும் அவன் ஆகர்ஷித்து விட்டான். ஆனால் என் ஒருத்தியை மட்டும் அவனால் ஆகர்ஷிக்க முடியவில்லை. அதுமட்டும் ஏன்? நான் குமாரகிரியை நன்கு அறிவேன்; குமாரகிரி என்னை நன்கு அறிவான். அதனால்தான் என்னை அவனால் ஆகர்ஷிக்க முடியவில்லை. நாங்கள் இருவரும் ஜன்ம ஜன்மாந்திரங்களாகக் கூடியே வாழ்ந்திருக்கிறோம். ஒருவரையொருவர் நன்கு அறிந்திருக்கிறோம். அதனால்தான் அவனால் என் மனதைக் கவரமுடியவில்லை என்று தோன்றுகிறது" என்றாள் சித்திரலேகா.

சுவேதாங்கன் புனர் ஜன்மத்தில் நம்பிக்கை கொண்டிருந்தான். ஆகவே அவன் சித்திரலேகா சொன்னதை ஆட்சேபிக்கவில்லை. "ஆமாம், இப்பொழுது புரிந்து கொண்டேன்" என்றான் அவன்.

"குமாரகிரியை நான் என்றைக்கு முதன் முதலாகப் பார்த்தேனோ, அன்று முதலே என் உள்ளம் குமாரகிரியை நாடத் தொடங்கி விட்டது. பாம்பின்கால் பாம்புக்குத் தெரியும் என்பார்களே, உனக்குத் தெரியுமா? அது போல ஒருவன் இன்னொருவனை நன்கு அறிந்திருந்தால்தான் அவனுடைய ஆத்மாவின் ஆழத்தையும் நன்கு உணர முடியும். நான் குமாரகிரியை நன்கு அறிவேன்; அவனுடைய ஆத்மாவையுங்கூட நன்கு அறிவேன். சுவேதாங்கா! குமாரகிரி என் வாழ்க்கை நாடகத்தின் பிரதான நடிகனாகி விட்டான்!"

"தாங்கள் சொல்லுவது புரிகிறது, அம்மா! ஆனால் நான் தங்களுக்கு எந்த விதத்தில் உதவ முடியும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. தாங்கள் கோரும் உதவியைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றான் சுவேதாங்கன்.

பணிப்பெண் இருவருக்கும் இரண்டு தட்டுகளில் ஆகாரம் கொண்டு வந்து வைத்தாள். சுவேதாங்கனை உணவு அருந்துமாறு சொல்லி விட்டுச் சித்திரலேகா உணவருந்தலானாள்.

உணவு அருந்தி முடித்ததும், சித்திரலேகா "சுவேதாங்கா, 'நான் எந்த விதத்தில் உதவ முடியும்?' என்று நீ கேட்டாய் அல்லவா? பீஜகுப்தனிடம் எனது இந்த ரகசியத்தை வெளியிடாமல் இருப்பதே நீ எனக்குச் செய்யும் மாபெரும் உதவி ஆகும். பீஜகுப்தனுக்கு என் மேல் அவநம்பிக்கை உதிக்காமல் பார்த்துக் கொள்வதும், அப்படி அவநம்பிக்கை உதித்தால் அதைப் போக்குவதும் உன் பொறுப்பாக இருக்க வேண்டும். புரிகிறதா?" என்றாள்.

சுவேதாங்கன் சற்று யோசனையில் ஆழ்ந்தான். சித்திரலேகா சொல்லும் காரியத்தைச் செய்வது சுவேதாங்கனுக்கு மிகவும் கடினமான காரியமாகப் பட்டது. பீஜகுப்தனே அவனுடைய எஜமானன். பீஜகுப்

னை ஏமாற்றுவதென்றால், அது எஜமானத் துரோகம் இழைப்பதாக அல்லவா வந்து முடியும்? அப்படிப்பட்ட மகா பாதகத்தை அவன் செய்யலாமா? ஆனால் சித்திரலேகாவும் அவனுடைய எஜமானிதானே? அது மட்டும் அல்ல. அவன்......



சுவேதாங்கனின் முகத்திலே தோன்றி மறைந்த பாவங்களைச் சித்திரலேகா ஒருவாறு உணர்ந்து கொண்டாள். உடனே அவள் பக்கத்திலிருந்த பானக் கோப்பையை நிரப்பி, சுவேதாங்கனின் வாயருகே கொண்டு போனாள். அப்பொழுது அவளுடைய வதனத்திலே இனிய புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. சித்திரலேகாவையே பார்த்தவாறு சுவேதாங்கன் ஒரே மூச்சில் கோப்பையைக் காலி செய்து விட்டான். சித்திர லேகா முன்போலவே முகத்தில் புன்முறுவல் தவழ, "சொல்லு, என் வேண்டுகோளுக்கு இணங்க மாட்டாயா?" என்று கேட்டாள்.

சுவேதாங்கன் மௌனமே உருவாக உட்கார்ந்திருந்தான்: 'முடியும் - முடியாது' என்று யாதொரு விதமான பதிலும் அவன் சொல்லவில்லை.

சித்திரலேகாவின் முல்லை முறுவல் மாயமாய் மறைந்தது. முல்லை முறுவலின் ஸ்தானத்தைக் கோபம் மேற் கொண்டது. அவளுடைய அழகிய சிவந்த ரோஜாக் கண்கள் கோபத்தினால் இன்னும் அதிகமாகச் சிவந்தன. அவளுடைய தளிர்க் கரங்கள் ஆவேசத்தில் ஆடத் தொடங்கின. அவள் சுவேதாங்கனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "சுவேதாங்கா! நான் சொன்னதை நீ செய்துதான் ஆக வேண்டும்; இது என் உத்தரவு. மீறக் கூடாது. மீறினாயானால்......" என்று வாக்கியத்தைப் பூர்த்தி செய்யாமலே நிறுத்தினாள்.

சித்திரலேகாவின் கோபாவேசத்தைக் கண்ட சுவேதாங்கன் நடுநடுங்கி விட்டான். அவளை அவனால் நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. தலை குனிந்தவாறே அவன் மிகவும் மெதுவான குரலில், "தங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறேன்" என்றான்.

"நீ சத்தியம் செய்து தரவேண்டும்" என்று ஆரம்பித்தாள் சித்திரலேகா. ஆனால் அடுத்த கணமே, "வேண்டாம், நீ சத்தியம் செய்து தரவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் நீ சற்று முன்பு சத்தியம் செய்து தருவதாகக்கூட வாக்கு அளித்தாயே, ஞாபகமிருக்கிறதா? வாக்குச் சுத்தம் எவ்வளவு அவசியமானது என்பதைப் பற்றி நான் உனக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படாது என்று எண்ணுகிறேன். ஆகவே, நீ கொடுத்த வாக்கிலிருந்து பிறழ மாட்டாய் என்றும் நம்புகிறேன்" என்று சொன்னாள். பிறகு பக்கத்திலிருந்த கோப்பையில் பானத்தை நிரப்பி மூன்றாவது தடவையாகச் சுவேதாங்கனுக்குக் கொடுத்தாள்.

சுவேதாங்கனுடைய கண்கள் மூடிக் கொண்டன. அவன் இனந் தெரியாத இணையற்ற இன்பத்தை நுகர்ந்தான். பானத்தை அருந்திய பின் அவன், "அம்மா! நான் எப்பொழுதுமே தங்களைப் பூஜித்து வந்திருக்கிறேன். இதுவரை என் வாழ்க்



கைக்கும் தங்கள் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. தாங்களோ என் எஜமானி; நானோ தங்கள் ஊழியன். தாங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் நான் வேத வாக்காகவே மதித்து வந்திருக்கிறேன். தாங்கள் என்னைத் தாராளமாக நம்பலாம். நான் சொன்ன சொல் பிறழமாட்டேன் என்பதற்கு அத்தாட்சியாக, 'நான் மிகவும் நேர்த் தரமானவன் அல்ல' என்று சொல்வதைத் தவிர, வேறென்ன முகாந்தரம் கொடுக்க முடியும்?" என்றான்.

அடுத்த கணம் சுவேதாங்கன் எழுந்து நின்றான். "இன்று சுவேதாங்கனை வீடு கொண்டு சேர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டி வருமோ?" என்று சிரித்தவாறே கேட்டாள் சித்திரலேகா.

"வேண்டியதில்லை" என்று சொன்ன சுவேதாங்கனின் குரலில் சிறிதும் நடுக்கம் தோன்றவில்லை; தன்னை மறந்த நிலையும் தென்படவில்லை. "என் நினைவு எனக்கு நன்றாக இருக்கிறது. அது மாறவும் மாறாது!" என்று சொல்லிவிட்டுச் சுவேதாங்கன் அங்கிருந்து புறப்பட்டான்.

சுவேதாங்கன் திரும்பி வந்த பொழுது, பீஜகுப்தனுடைய கல்விச் சாலையிலே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுவேதாங்கன் வருவதைக் கண்ட ஒரு பணிப் பெண் அவனிடம் வந்து, "எஜமானர் உனக்காகத்தான் காத்திருக்கிறார்!" என்றாள்.

சுவேதாங்கன் நேரே கல்விச் சாலைக்குள் நுழைந்தான். அப்பொழுது பீஜகுப்தன் கவலையே உருவாகக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவாறு உட்கார்ந்திருந்தான். அம்மாதிரி பீஜகுப்தன் சிந்தனையில் ஆழ்ந்திருந்து சுவேதாங்கன் கண்டதேயில்லை. பீஜகுப்தனின் எதிரே பானக் கோப்பை காலியாக உருண்டு கிடந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது எவ்வளவு அநுபவ பூர்வமான வார்த்தை! அவனுடைய உள்ளத்தில் கவலை யென்னும் ஆழ்கடல் குமுறிக் கொண்டிருக்கிறது. கற்பனை யென்னும் உத்தியான வனத்திலே பயம் என்னும் 'சூறைக் காற்று பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கிறது. இன்பமே உருவெடுத்த சுக சாம்ராஜ்யத்திலே துயரம் புரட்சி விதையை ஊன்றித் தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை யெல்லாம் அவனுடைய முகபாவம் வெகு அழகாகச் சித்திரித்துக் காட்டிக் கொண்டிருந்தது.

சுவேதாங்கனைக் கண்டதும் பீஜகுப்தன் தூக்கத்திலிருந்து திடுக்குற்று விழித்தவன் போல, "அடே! நீ வந்துவிட்டாயா? வெகு நேரம் ஆகிவிட்டதே?" என்றான்.

சுவேதாங்கன் அருகிலிருந்த கூஜாவைச் சாய்த்து ஒரு கோப்பை தண்ணீர் எடுத்துக் குடித்தான். பிறகு பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

அவன் பதில் சொல்லுவான் என்று பீஜகுப்தன் சிறிது நேரம் வரை எதிர்பார்த்தான். அவன் பதில் சொல்லாமற் போகவே, "சுவேதாங்கா! நான் கேட்ட கேள்விக்கு நீ பதிலே சொல்லவில்லையே! என்ன காரணம்?" என்று கேட்டான்.

“எஜமானியம்மாளுக்காகக் காத்திருக்கும்படி ஆகிவிட்டது. அதனால் தான் திரும்ப இவ்வளவு நேரம்” என்றான் சுவேதாங்கன்.

“சித்திரலேகாவுக்காகக் காத்திருக்கும்படி ஆகிவிட்டதா?”

பீஜகுப்தன் இதைக் கேட்டவாறே நிமிர்ந்து உட்கார்ந்தான். “...ஆமாம், நீ போன பொழுது சித்திரலேகா வீட்டில் இல்லையா?” என்று கேட்டான்.

சித்திரலேகாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதி நினைவு வரவே சுவேதாங்கன் சற்றுத் தயங்கினான். “எஜமானனுடைய ஊகம் முற்றிலும் சரியே. நான் போன பொழுது சித்திரலேகா வீட்டில் இல்லை தான்” என்றான்.

சுவேதாங்கனுடைய சொல்லிலே தயக்கம் தொனிப்பதைக் கண்ட பீஜகுப்தன், “ஆமாம், அவள் எங்கேயாவது போயிருந்ததாக உன்னிடம் சொன்னாளோ?” என்று கேட்டான்.

சுவேதாங்கனுடைய உள்ளத்திலே ‘சொல்லலாமா, கூடாதா?’ என்ற கேள்வி எழுந்தது. ஆனால் ஒருவித முடிவுக்கு வர அவனுக்குப் போதிய அவகாசம் இல்லை. ஆகவே, அவன் எவ்விதத் தயக்கமும் இன்றி, “எஜமானி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் மந்திரி சாணக்கியரின் அழைப்புக் கிணங்கி அவருடைய மாளிகைக்குப் போய் வந்திருக்கவேண்டும் என்று தோன்றியது” என்றான்.

பீஜகுப்தனுக்குத் தன் இதயத்திலிருந்து மாபெரும் சுமை இறங்கியது போலிருந்தது. ‘குமாரகிரியின் குடிசைக்குச் சித்திரலேகா ஒரு வேளை போயிருப்பாளோ?’ என்ற சந்தேகம் பீஜகுப்தனுடைய உள்ளத்திலே எப்படித்தான் எழுந்ததோ, தெரியவில்லை. சுவேதாங்கன் சொன்ன பதில் அவனுடைய பீதியை ஒருவாறு போக்கிவிட்டது. அவன் மறுபடியும் சுவேதாங்கனைப் பார்த்து, “அது போகட்டும். நீ சித்திரலேகாவுக்கு வாழ்த்துக் கூறினாயா, சொல்லு?” என்று கேட்டான்.

“ஆம், கூறினேன்!” என்று ஆரம்பித்த சுவேதாங்கன் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, “ஆனால் தான் வாழ்த்துக்குப் பாத்திரமானவள் அல்ல என்று சித்திரலேகா சொல்லிவிட்டாள். தனக்குக் கிடைத்த அந்த வெற்றிக்காக அவள் சிறிதும் கர்வம் கொள்ளவில்லை; பெருமிதமும் அடையவில்லை. தனக்குக் கிடைத்த அந்த வெற்றிக்காக, மிகவும் வருந்தத்தான் செய்தாள். அதைக் காண எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது” என்றான்.


பீஜகுப்தன் இலேசாகச் சிரித்தான். அவனுடைய சிரிப்பிலே அன்பிற் கன்பான ஒரு பொருளைப் பறிகொடுத்து விட்டது போன்ற பரிதாப உணர்ச்சி தோய்ந்திருந்தது. “முன்னமேயே நான் உன்னிடம் என்ன சொன்னேன்? சித்திரலேகா தன் வெற்றியை ஒப்புக் கொள்ளவில்லை என்கிறாயே, அது எதைக் குறிக்கிறது? அவள் தோற்று விட்டாள் என்றுதானே அதற்கு நாம் அர்த்தம் கொள்ள வேண்டும்?”

“எஜமானர் சொல்வதன் அர்த்தம் இப்பொழுதுதான் எனக்குச் சற்று விளங்கியது” என்றான் சுவேதாங்கன்.

“சற்று விளங்கியது என்னும் சொல்லுக்கு அர்த்தமே கிடையாது. விளங்கினால் நன்றாக விளங்க வேண்டும். இல்லாவிட்டால் விளங்கவே கூடாது. அது போகட்டும், சுவேதாங்கா! நீ இன்னொரு விஷயம் நன்றாக நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். மனிதன் சுதந்திர நோக்கங்கள் படைத்தவனாக இருந்த பொழுதிலும் காலச் சக்கரத்துக்கு அடிமைப் பட்டவன்; சூழ் நிலைக்கேற்றவாறு நடக்க வேண்டியவன். காலச் சக்கரம் என்று எதைச் சொல்லுகிறோம் தெரியுமா? பூர்வ ஜன்மங்களில் செய்த கர்மங்களுக்கேற்ற பலாபலன்களை அனுபவிக்க வேண்டி ஏற்படுத்தப்பட்ட ஒரு வான் முறையைத்தான் நாம் காலச் சக்கரம் என்று பெயர் சொல்லி அழைக்கிறோம். அப்படிப்பட்ட காலச்சக்கரத்தின் சுழற்சியிலே சிக்கி அதற்கேற்றவாறு மனிதன் சுழலாமல் இருக்க வேண்டும். ‘செய்யத் தக்கது எது, செய்யத் தகாதது எது?’ என்று நன்றாகத் தீர ஆலோசித்து அந்தச் சூழ் நிலையை வெற்றி கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் வெற்றி கொண்டான் என்று சொல்லுவது பொருந்தும். ஆகவே சித்திரலேகாவோ, குமாரகிரியோ வெற்றி கொண்டார்கள் என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. சித்திரலேகா காலச்சக்கரத்தின் சுழலிலே சிக்கி விட்டாள். குமாரகிரி அவளுடைய வாழ்க்கையிலே குறுக்கிட்டிருக்கிறான். இருவருமே ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளாமல் ஒருவருடைய வாழ்க்கையில் ஒருவர் புகுந்து விட்டனர். அதன் காரணமாக அவ்விருவருடைய சாதனைகளுமே தவிடுபொடியாகிவிடக் கூடும். கடவுள் தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்” என்று சொல்லிக் கொண்டே பீஜகுப்தன் படுக்கச் சென்றான்.

(தொடரும்)

திருவையாறு திருவிழா



கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

4. போட்டி உற்சவம்

பெரிய கட்சியார் ஒன்றுசேர சம்மதிக்காததைக் கண்டு ஒருவரும் கவலைப்படவில்லை. ஒன்று சேர விருப்பமுள்ளவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு ஒரு சமாஜத்தை நிறுவ ஏற்பாடு செய்தார்கள். அதற்காகப் பஞ்சு பாகவதரின் சம்மதத்தையும் எழுத்து மூலம் வாங்கினார்கள். இதற்குச் சம்மதித்த வித்வான்களிடமிருந்தும் கையொப்பம் வாங்கப்பட்டது.

1914-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி மீண்டும் தஞ்சையில் கூடினார்கள். சென்னையில் வசித்து வந்த பிரம்மஸ்ரீ பண்டித லக்ஷ்மணாச்சார் அவர்களைத் தலைவராகவும், ராமநாதபுரம் சீனிவாசய்யங்காரை உப தலைவராகவும் இருக்கும்படி வேண்டிக்கொண்டு கடிதங்கள் எழுதப்பட்டன. ஜனவரி இருபத்தொன்பதாம் தேதியன்று அவர்கள் இருவரும் அதற்குச் சம்மதித்துப் பதில் எழுதி விட்டார்கள். சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரைக் காரியதரிசியாகவும், திருவையாறு சபேசய்யரைப் பொக்கிஷதாரராகவும், மாங்குடி சிதம்பர பாகவதரைக் கணக்குகளை வைத்துக் கொள்பவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு சமாஜத்தின் சட்ட திட்டங்களையும் ஒருவாறு ஆலோசித்து முடிவு செய்து விவரமாக எழுதி தலைவரின் அனுமதிக்காக சென்னைக்கு அனுப்பப்பட்டது.

அடுத்த பிப்ரவரி மாதம் முதல் தேதி எல்லோரும் திருவையாற்றுக்குப் போய் அங்குள்ளவர்களிடம் இதுவரையில் சமாஜம் சம்பந்தமாக நடந்திருக்கும் விவரங்களைத் தெரிவித்தார்கள். உடனே வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டது. அதில் வக்கீல் சீதாராமய்யர், கோபால கிருஷ்ணய்யர், வேதாரண்ய பாகவதர், ராஜகோபால பாகவதர் ஆகியோரை நியமித்து இன்னும் சேரக்கூடிய நிர்வாகிகளையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். தம் ஆயுள் முழுவதும் இந்த சமாஜத்தில் இருந்து பூஜைகளை நடத்திவருவதாக ஒப்புக்கொண்ட பஞ்சு பாகவதருக்குச் சமாஜத்திலிருந்து வருஷம் ஒன்றுக்கு ரூ. 35 கொடுப்பது என்று தீர்மானம் செய்தார்கள். பஞ்சு பாகவதரும் ஒப்புக் கொண்டார்.

1914-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 17-ந் தேதியன்று சென்னையில் சமாஜத்தின் தலைவரான பண்டிட் லக்ஷ்மணாச்சாரியின் வீட்டில் அவருடைய தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், திருவையாறு சபேசய்யர், பல்லடம் சஞ்சீவி ராவ், கரூர் சின்னசாமி அய்யர் முதலியோர் வந்திருந்தனர். "வித்வான்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் ஈடுபட்டு உழைத்தால் நம் சமாஜம் பிரபலமாகிவிடும். தியாகப் பிரம்மத்துக்கு நிலையான ஒரு கட்டிடமும் இன்னும் பல தர்மங்களுக்கும் ஏற்பாடு செய்யலாம்" என்றார் பண்டிட் லக்ஷ்மணாச்சார்.

பல்லடம் சஞ்சீவி ராவைக் கூட்டுக் காரியதரிசியாகவும் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதரை உதவி பொக்கிஷதாரராகவும் சேர்த்தார்கள். மறுநாள் நடந்த கூட்டத்தில் சமாஜத்திற்கு "ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்ம வைபவப் பிரகாச சபா" என்று பெயர் சூட்டப்பட்டது. தஞ்சையில் ஆலோசித்து முடிவு செய்திருந்த சட்ட திட்டங்களைப் பரிசீலனை செய்து அச்சுக்குக் கொடுக்கப்பட்டது. சங்கீத கோஷ்டியில் கச்சேரி செய்யும் யோக்கியதையுள்ளவர்கள் எல்லோரையும் அங்கத்தினர்களாகச் சேர்ப்ப

தென்றும், அங்கத்தினர்களின் வருஷ சந்தா ரூ. 10 என்றும் முடிவு செய்தார்கள்.

“ தியாகப் பிரம்மத்துக்கு வருஷா வருஷம் நடக்கும் உற்சவம் மட்டும் போதாது. ஒவ்வொரு நாளும் பூஜையும், மாதந்தோறும் சத்குருவின் புண்ணிய திதியை உத்தேசித்துக் காரியதரிசியால் ஏற்பாடு செய்யப்படும் சௌகரியமான ஒரு தினத்தில் கதையோ அல்லது கச்சேரியோ நடத்த வேண்டும். இந்த நிகழ்ச்சிகளைத் திருவையாற்றில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்து, அந்த வீட்டில் நடத்த வேண்டும். அந்த வீட்டிலேயே சத்குருவுக்குப் பூஜை செய்பவரை வாடகையில்லாமல் இருந்துவர ஏற்பாடு செய்ய வேண்டும் ” என்று தீர்மானித்தார்கள். அத்துடன் சென்னையில் சங்கீத போதகாசாரியர்களா யிருப்போரிடம் மாத சந்தாவும் நன்கொடைகளும் வசூல் செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சிகளை எல்லாம் சங்கீத வித்துவான்களுக்குக் கடித மூலம் தெரிவித்து, அங்கத்தினர்களாக உடனே சேரும்படி செய்வதுடன் ஆங்காங்கு கூடியவரை பண வசூல் செய்து ஆராதனை உற்சவத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இப்படியாகச் சின்னக் கட்சியாரின் சமாஜம் “ ஸ்ரீ தியாகராஜ பரப் பிரம்ம வைபவப் பிரகாச சபா ” என்ற பெயரில் வேலை செய்ய ஆரம்பித்ததிலிருந்து அநேக வித்வான்களும், அபிமானிகளும், பக்தர்களும் சேர்ந்து ஒத்துழைக்க முன் வந்தார்கள். அத்துடன் தங்கள் தங்களால் கூடியமட்டும் பொருள்களை வசூல் செய்து கொண்டு வந்து ஆராதனை உற்சவத்துக்குக் கொடுத்தார்கள். சமாஜம் ஏற்பட்ட முதல் வருஷ உற்சவ வரவு செலவுக் கணக்கு விவரங்கள் ஏராளமாய் அச்சிடப்பட்டு அபிமானிகளுக்கு வழங்கப்பட்டன. இதனால் சமாஜத்துக்கு மகா ஜனங்களுடைய நன்மதிப்பு கிடைத்தது. நன்கொடைகளும் ஏராளமாக வந்து சேர்ந்தன. மறு வருஷம் திருவையாறு கீழ வீதியிலுள்ள பாலாயி சத்திரத்தில் உற்சவத்தை நடத்தினார்கள்.


பண்டிட் லக்ஷ்மணாச்சார்

சின்னக் கட்சியார் “ ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்ம வைபவப் பிரகாச சபா ” என்ற பெயரால் தங்கள் உற்சவத்தைப் பலப்படுத்தி பிரபலமாகி வருவதை யறிந்த பெரிய கட்சியார் யோசனை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தங்களில் முக்கியமானவர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய ஒரு கச்சேரி அல்லது கதையில் வரக்கூடிய தொகையை உற்சவத்துக்கு நன்கொடையாக அளிப்பதென முடிவு செய்தார்கள். பொது ஜனங்களிடம் வசூல் செய்வதைவிட இந்த முறை சுலபமானது என்று தீர்மானித்தார்கள். உற்சவ சம்பந்தமான வரவு செலவுகளைப் பிடில் கோவிந்தசாமிப் பிள்ளையும் மிருதங்கம் அழகநம்பியாப் பிள்ளையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்கள்.

இப்படியாக ஒவ்வொரு கோஷ்டியிலும் சுமார் 1,500 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை வசூல் செய்யப்பட்டு ஆராதனை உற்சவத்தை நடத்தினார்கள்.

1915—16 வருஷத்திய சின்னக் கட்சியின் உற்சவங்கள் மிகுந்த சிறப்பாக இருந்தன. பாலாயி சத்திரத்தில் இட நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. ஆகவே, 1917-ம் வருஷம் முதல் புஷ்ய மண்டபத்தில் உற்சவத்தை நடத்தினார்கள்.

காலக்ஷேபத் துறையில் பிரபலமா யிருந்த தஞ்சாவூர் கோவிந்த பாகவதர், தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், குலமங்கலம் சௌந்தரராஜ பாகவதர், குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், பழனி சுப்பிரமணிய பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், பண்டிட் லக்ஷ்மணாச்சார் ஆகியோர் இதில் ஒவ்வொரு வருஷமும் ஈடுபட்டிருந்தபடியால் கதா காலக்ஷேபங்களை ஏராளமாய் அன்பர்கள் ரசித்தார்கள்.

பாகவதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கதைகளில் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் கீர்த்தனைகளைச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு ஏராளமாகப் பாடி, அர்த்தமும் சொல்லி வந்தபடியால் கச்சேரிகளை விடக் கதைகளில் வரும் கீர்த்தனைகளை மகாஜனங்கள் அநுபவித்துப் பரவசமானார்கள். முக்கியமாகச் சுவாமிகளின் கீர்த்தனைகளைப் பழையமுறைக்கு

இணங்கச் சேர்ந்திருந்த சங்கதிகளை நன்கு அமைத்து சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு பாடுவதில் தன்னிகரற்று விளங்கிய தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் அவர்களின் பத்ததிப்படி தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர் கதைகளுக்கு நடுவில் கீர்த்தனைகளைப் பாடுகையில் எல்லா வித்துவான்களும் பாகவதர்களும் பொது ஜனங்களும் மெய்ம்மறந்து ரஸித்தார்கள்.



ஸ்ரீ முத்தையா பாகவதர்

இதேமாதிரி பண்டிட் லக்ஷ்மணாச்சார் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் கீர்த்தனைகளையும் அவைகளுக்குச் சமமான உபநிஷத்துகளையும் கதைகளில் சொல்லி வந்தார்.

சங்கீத வித்வான்களில் பிரசித்தர்களான பழமார்னேரி சாமிநாத ஐயர், கல்லிடைக் குறிச்சி வேதாந்த பாகவதர், நேமம் நடேசய்யர், திருவையாறு சுப்ரமண்ய அய்யர், திருவையாறு சபேசய்யர், நாடியம் ராமுவைய்யர், பல்லடம் சஞ்சீவி ராவ், வீணை ராமஸ்வாமி அய்யங்கார், மாயவரம் வீணை சபேசய்யர், பிடில் பஞ்சாபகேச பாகவதர், கரூர் சின்னஸாமி ஐயர், சென்னை பாலகிருஷ்ணையர், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மிருதங்கம் மைலாட்டூர் கிருஷ்ணையர், மாமுண்டியா பிள்ளை, பழனி முத்தையா பிள்ளை, மைலாட்டூர் சாமி அய்யர், தஞ்சாவூர் வைத்தியநாதய்யர் ஆகியோரும் இந்தக் கட்சியில் ஈடுபட்டிருந்தபடியால் உற்சவத்தின் சிறப்பைப் பற்றி வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். ஆகவே சின்னக் கட்சியாரின் உத்ஸவத்திற்கு ஈடு கொடுக்க முடியாத நிலைமையில் தான் பெரியகட்சியாரின் உத்ஸவம் 1920-ம் வருஷம் வரை நடந்து வந்தது.

முத்தையா பாகவதர் 1915-ம் வருஷத்தில் இரண்டு கோஷ்டிகளிலும் கலந்து கொண்டு கதைகள் செய்தார். ஆனால் கட்சிகளை ஒன்று சேர்க்கும் விஷயத்தில் அவருடைய முயற்சி வீணாகி விட்டதால் அதன் பிறகு இரண்டு கட்சிகளிலும் சேராமல் நின்று விட்டார்.

சின்னக் கட்சியார் பிரதி வருஷமும் வரவு செலவுக் கணக்குகளை அச்சடித்து வழங்கி வந்தபடியால் அதேபோல் பெரிய கட்சியிலும் வரவு செலவுக் கணக்கு விவரங்களை அறிய சிலர் ஆவல் கொண்டார்கள். அது காரணமாகச் சிலசில்லறைத் தகராறுகள் ஏற்பட்டன. என்றாலும் அவைகளை எல்லாம் பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை சமாளித்து விட்டார். "உற்சவத்துக்கு மனமுவந்து கொடுப்பவர்கள் கொடுக்கட்டும், சந்தேகப்படுபவர்கள் கொடுக்க வேண்டாம். யார் கொடுத்தாலும் கொடுக்கா விட்டாலும் இந்தக் கட்சியின் உற்சவம் வருஷா - வருஷம் சிறப்பாக நடக்கும். அதற்கு நாங்கள் ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை" என்று தெரிவித்தார். பிடில் கோவிந்தசாமிப் பிள்ளையிடம் விசேஷ அபிமானமும் மதிப்பும் வைத்திருந்தவர்கள் எல்லோரும் பரம சந்தோஷ மடைந்தார்கள்.

இந்தக் காலத்தில் சங்கீத உலகத்திற்கே சில எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்பட ஆரம்பித்தன. 1918-ம் வருஷம் முதல் 1923-ம் வருஷத்துக்குள் மதுரை புஷ்பவனமய்யர், பாலக்காடு அனந்தராம பாகவதர், ராமநாதபுரம் சீனிவாசய்யங்கார், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், மைலாட்டூர் கிருஷ்ணையர், பண்டிட் லக்ஷ்மணாச்சார், மாயவரம் வைத்தியநாதய்யர், தஞ்சாவூர் கோவிந்த பாகவதர் முதலியோர் மறைந்து விட்டனர். கதைகளில் தனக்கு இரண்டு புஜங்களைப் போல் விளங்கிய இரண்டு சகோதரர்களையும் மான்குடி சிதம்பரபாகவதர் இழந்து விட்டபடியால் 1921 முதல் மூன்று வருஷங்கள் வரை கதைகள் செய்ய இயலாதவரானார்.

இந்தப் பெரிய கஷ்டங்களால் இரண்டு கட்சிகளும் கலகலத்தன என்றாலும் சின்னக் கட்சியாராகிய 'ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்ம வைபவப் பிரகாச சபை'யார் மிகவும் பலஹீன மடைந்தார்கள். பண்டிட் லக்ஷ்மணாச்சார் வகித்து வந்த தலைமை ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாயவரம் வைத்தியநாதய்யர் வெகு சீக்கிரத்தில் காலமடைந்ததால் தஞ்சாவூர் கோவிந்த பாகவதரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவரும் ஒரு வருஷத்திலேயே பரமபத மடைந்தார். இதனால் தலைமை ஸ்தானத்தை ஒப்புக் கொண்டு நிர்வகிப்பதில் காரணமில்லாத ஒரு பீதி உண்டாகிவிட்டது. உற்சவத்தை நிர்வகித்து நடத்தும் முழுப்பொறுப்பும் ஆலமங்கலம் வைத்தியநாத பாகவதரிடம் போய்ச் சேர்ந்தது. (தொடரும்)



நேரம் கெட்டு வரும் இந்த சர்க்கார் பஸ்களைப் பற்றி எவ்வளவு விகடத் துணுக்குகள் எழுதப்பட்டு நாடும் நகரமும் சிரித்திருக்கின்றன!

ஆனால் இவற்றையெல்லாம் அந்த அப்பாவி மோட்டார் பஸ்கள் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாமல் நம் பொறுமையை சோதித்துக் கொண்டுதானே வருகின்றன!

இப்படி ஒரு சிந்தனை கடுமையான வெய்யிலில் வெகுநேரம் மூர்மார்க்கெட்டுக்கெதிரே 7-ம் நம்பர் பஸ்ஸிற்காகக் காத்து நின்றதின் காரணமாக எழும்பியது.

மேலும் அல்லல்கள் மிகுந்த என்னுடைய அவல வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியே பிரித்தெடுத்து ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்து விட்டது மனம்.

பிறந்தகத்திலிருந்த அவளிடமிருந்து அன்றைக்குக் காலையில்தான் கடிதம் வந்திருந்தது. கடிதம் பேசியது:—

"நமஸ்காரம். வர வர என் உடல் நிலை மோசமாகிக் கொண்டு வருகிறது. நீங்கள் சென்ற தடவை இங்கு வந்திருந்தபோது நான் வற்புறுத்திய விஷயத்தில் இன்னமும் நீங்கள் அசிரத்தை காட்டுகிறீர்கள். என்னை இனி நம்பிப் பிரயோஜனமில்லை.

உங்களுக்குக் கடுகளவாவது சுகம் வேண்டாமா? என் கண்ணெதிரே நீங்கள் கொஞ்சமாவது சந்தோஷமாய் இருப்பதை நான் விரும்பக் கூடாதா?

மங்களம்."

உலகத்திலே பல துறைகளிலும் கஷ்டப்பட்டு உழலுவது சர்வ சாதாரணமான ஒரு விஷயமாகக் கூட இருக்கலாம்! ஆனால் அன்பின் காரணமாக, பரிவுடன் நம்மை அண்டினவர்கள் அதை எடுத்துச் சொல்லும்போதுதானே வாழ்க்கையின் பயங்கரம் நம்முன் பேயாட்டம் ஆடுகிறது!

மங்களத்தைக் கலியாணம் செய்து கொண்டு அவளுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்திய இரண்டு வருஷங்களும் இப்போது கனவாகத்தானே போய் விட்டது!

'தீராதென்று' டாக்டர்கள் கூறிய ஒரு அபூர்வ வியாதி அவளைப் பிடித்துக் கொண்டதிலிருந்து வீட்டில் எப்போதும் மருந்து வாசனையும் பாட்டில்களின் சத்தமும்தான்!

இந்த நிலையில் 'சந்தோஷம்' தலைகாட்ட முடியுமா என்ன?

'ஆசைக் கணவனுக்கு மிகு வேதனையைக் கொடுத்து விட்டோமே' என்று அவளுக்கு வருத்தம்தான்.

எனக்கு மாத்திரம் என்ன? மனதிற்கிசைந்த மனைவி கிடைத்து விட்டாள்! நம்மைப் புரிந்துகொண்டு வாழ்க்கையின் இன்னல்களை நீக்க அவள் ஒருத்தி இருக்கிறாள் என்றுதானே கலியாணம் ஆன புதிதில் நானும் நினைத்தேன்? ஆனால்...?

என் பெற்றோரைப் பொறுத்த வரையில், பிள்ளை பி.ஏ. பாஸ் செய்தவுடன் உத்தியோகம் பண்ணி, அந்திய காலத்தில் தங்களை உட்கார வைத்துக் 'கனகாபிஷேகம்' செய்துவிடுவான் என்று எண்ணியிருந்தனர்.

தங்கம் விற்கும் விலையில் கனகாபிஷேகம் செய்யாவிட்டாலும்கூடக் கிடைக்கிற நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் வயிறு காயாமல் சோறு போட முடிகிறதே என்று அவர்களிடம் கட்சி பேசிக் கொண்டிருக்க முடியாது!

'வீட்டுக்கு வந்தவளின்' அதிருஷ்டம் தான் இப்படி ஆறாய்ப் பெருகுகிறது என்று அம்மாவுக்கு ஆத்திரம்!

என் அதிருஷ்டத்திற்கு அவள் என்ன செய்வாளாம்?

இப்படியெல்லாம் அம்மாவிடம் நேரிடையாகச் சொல்லிவிட முடியாது. ஆனாலும், அம்மா மங்களத்தினிடம் எப்போதும் சிடுசிடுப்பதை என்னாலேயே பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

மனைவி நேற்று வந்தவளாக இருக்கலாம். ஆனால் அவள் படுகிற ஒவ்வொரு வேதனைக்காகவும் என் நரம்புகள் அல்லவா துடிக்கின்றன. அது ஏன்?

'தாலி கட்டிய தோஷம்' என்று வேண்டுமானால் பூடகமாகப் பதில் சொல்லலாம், அப்படிப்பட்ட ஒரு கேள்விக்கு.

வைத்தியம் பார்த்துக் கொள்ள மங்களம் பிறந்தகம் சென்றதிலிருந்து அம்மாவின் 'தொண தொணப்பு' அதிகமாகி விட்டது.

"அந்தப் பீடைதான் வீட்டை விளக்க வைக்கவில்லை! உனக்குப் பெண் கொடுக்க உலகத்தில் மனுஷ்யாளே இல்லாமே போய் விட்டார்களா என்ன? நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுடா,

அம்பி" என்று அவன் மறு விவாகத்திற்காகத் தூண்டுதலெடுக்க ஆரம்பித்து விட்டார்.

மனைவி இறந்த பிறகு இரண்டாம் தாரமாகக் கலியாணம் செய்து கொள்ள மனம் இல்லாத சங்கடமெல்லாம் படுகிறதே! உயிருடன் அவள் இருக்கும்போது இன்னொருத்தியுடன் வாழ்க்கையா?

சீ! என்ன பயங்கரம்.

மங்களத்தின் வியாதி தீர்ந்து, அவளுடன் புது வாழ்வு தொடங்கப் போகிறோம் என்பது டாக்டர்கள் கூறுவதிலிருந்து நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட விஷயமாகத்தான் இருக்கிறது! அப்படியானால்...வேறு வழி?

சென்ற தடவை அவளைப் பார்க்கச் சென்றிருந்தபோது மங்களமே என்னிடம் கூறினாள்:—

"இந்தாருங்கோ! நான் சொல்றதை நீங்க கொஞ்சம் கவனமாக் கேட்கணும்" என்று ஆரம்பித்தாள். சோகை பிடித்திருந்த அவள் வளையல் கரங்களைப் பற்றிக் கொண்டு செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினேன்.

"நீ சொல்றதை நான் எப்போ கவனமாகக் கேட்கலே! சொல்லேன்" என்று கூறினேன்.

"இப்படி ரொம்ப நாட்களுக்கு நீங்கள் கஷ்டப் படுவதென்றால் அதைச் சகிக்க என்னால் முடியாது! நான் பிழைப்பது துர்லபம். அப்பாவுக்கும் என்னால் ஏகச் செலவு. மீனாக்ஷியின் கலியாண விஷயம் வேறு அவர் மனத்தை உறுத்துகிறது. நான் அவரிடம் சொல்லி விட்டேன். விஷயத்தை, அவரும் ஒப்புக்கொண்டு விட்டார். உங்கள் மங்களத்திற்காக மீனாக்ஷியை நீங்கள் மணம் செய்து கொள்ளத்தான் வேண்டும்" என்று மூச்சுவாங்கச் சொல்லி முடித்தாள்.

அவளுடைய தங்கையின் க்ஷேமத்தை மாத்திரம் உத்தேசித்து இந்த யோசனையை மங்களம் வெளியிடவில்லை. என் அவஸ்தையை உணர்ந்து அதற்கு மாற்றாகத்தான் இந்தச் சஞ்சீவியை யளிக்க முன் வந்திருக்கிறாள் என்பது எனக்குத் தெரியாமல் போகவில்லை!



மீனாக்ஷி...! அவள்தான் எவ்வளவு அழகு! அற்புதமாகப் பரிணமித்திருந்த மீனாக்ஷியின் அழகையும், மங்களத்தின் நல்லெண்ணத்தையும் நினைத்துப் பார்க்கும் போது, மனம் ஆட்டம் காணத்தான் செய்தது.

நான் எதற்காகத் தயங்குகிறேன்? என்னதான் அவள் அப்படிக் கூறினாலும், மங்களத்தின் மனத்தில் எங்காவது ஒரு மூலையில் 'நாம் சந்தோஷமாகத் தொடர்ந்து வாழ்க்கை நடத்த முடியவில்லையே' என்ற ஏக்கம் எதிரொலிக்காதா?

* * *

மகத்தான இந்தப் பிரச்னையைத் தீர்க்க மனம் குழம்பியது! இன்னமும் பஸ் வந்தபாடில்லை. 7-ம் நம்பர் பஸ்ஸுக்கு யாராவது சாபம் கொடுத்து விட்டார்களா என்ன?

'பார்க்' ஸ்டேஷனிலிருந்து ஒரு கும்பல் வெளிக் கிளம்பியது. நான் தனியாக நின்று தவிக்கிறேனே என்பதற்கு அனுதாபப் படுபவர்கள் போல இன்னம் இரண்டு பேர் எனக்குத் துணையாகத் தவமியற்ற என் பக்கத்தில் வந்து நின்றனர்.

ஏதோ நினைத்துக் கொண்டவனாகப் பின்புறம் திரும்பினேன். ஒரு கணம் என் சூழ் நிலையே எனக்கு மறந்துவிட்டது.

யார் அவள்? அவளாக இருக்கமுடியுமா? உலகத்தில் எல்லா அம்சங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கக்கூடிய சிருஷ்டிகளை பிரமன் உண்டு பண்ணுவதில்லையா!

அந்தப் பெண்ணும் என்னையே உற்று நோக்கினாள்.

வேறு யாராவது இருந்தால் அந்தச் செய்கை என்னைத் தாக்கி வாரிப்போட்



சர்வர்:—டெல்லி பாதுஷா, கல்கத்தா ரஸகுல்லா, பாம்பே ஹல்வா, பீஹார் புட்டிங் எல்லாம் இருக்கு; எது வேணும்?

செட்டியார்:—எல்லாம் வெளியூர் சரக்காக இருக்கிறதே! செய்து ரொம்ப நாளாகியிருக்குமே! இப்போது செய்தது ஏதாவதிருந்தால் கொண்டுவாரும்!

டிருக்கும்! ஒருவேளை அவளும் என்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டாற் போல் இருக்கிறது.

"யாரது காந்தியா?" என்று என்னையும் மீறிய நிலையில் என் வாய் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டது.

"ஆமாம்...நீ...நீங்கள்...கோபுதானே?"

பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்ட இந்தக் கேள்விகளுக்குப் பிறகு, நாங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை.

காந்திமதியும் நானும் பால்ய சிநேகிதர்கள். சிறு குழந்தைகளாக இருந்தபோது பல வருஷங்கள் எங்கள் குடும்பங்கள் 'எதிரெதிர்' வீடுகளில் மிகவும் அன்யோன்னியமாக வசித்து வந்தன.

காந்திமதி குழந்தையாக இருந்தபோதே 'அழகி' என்று பெயரெடுத்தவள். இப்போது கேட்க வேண்டுமா? இந்தப் பெண்கள்தான் 'மட மட'வென்று வளர்ந்து விடுவார்களே!

பல வருஷங்கள் கழித்து — உலகம் தெரிந்த பிறகு—நாங்கள் சந்தித்துக் கொண்டதால், பழைய பாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு எங்கள் குடும்ப க்ஷேமங்களைப் பற்றிச் சாங்கோபாங்கமாகப் பேச ஆரம்பித்து விட்டோம்! இடையில் சென்ற 7-ம் நம்பர் பஸ் ஒன்றைக்கூட நான் நழுவ விட்டு விட்டேன் என்றால், சம்பாஷணையின் முக்யத்வத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

அவள் 15-ம் நம்பர் பஸ்ஸில் போக வேண்டும். பூந்தமல்லி ஹைரோடில் உள்ள பிரபல ஆஸ்பத்திரி ஒன்றில் அவள் கணவன் சிகிச்சைக்காக அநுமதிக்கப் பட்டிருக்கிறார். அவரைப் பார்க்கத்தான் அவளும் பஸ்ஸை நாடி வந்தாளாம்.

என்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் மிகவும் அநுதாபத்துடன் அவள் கேட்டாள். அந்த நிலையில் எனக்கும் யாரிடமாவது அந்தரங்கமாக என் குறைகளைச் சொல்லி மனப் பளுவை இறக்கிக் கொள்ளத் தோன்றியது.

ஆழ்ந்த பெருமூச்சொன்று அவள் நெஞ்சிலிருந்து வெளிக் கிளம்பியது!

"கோபு! சிறு வயதில் வாழ்க்கையின் பயங்கரம் நமக்குத் தெரிவதில்லை. இளமைப் பருவத்தில் நாம் கண்ட கனவுகளும், ஆசைகளும் உலகத்தில் அப்படியே நிறைவேறி விட்டால் அப்புறம் என்னதான் இருக்கிறது?" என்று அவள் ஆரம்பித்தாள்.

இருபது வயதிற்கு மேற்பட்ட அவளுடைய அந்தப் பேச்சு எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது! அவள் என்னதான் சொல்லப் போகிறாள்......?

"கோபு! நான் சென்னை வந்திருப்பதே அவருக்காகத்தான்! அவருக்குத் தஞ்சை 'மாருதி' பாங்கியில் ஏஜெண்ட் வேலை. என்னைக் கலியாணம் செய்து கொண்ட பிறகு, ரொம்ப நாட்கள் அவர் சுகமாக இருக்கவில்லை. இரண்டு வருஷத்திற்குள்ளேயே அவருக்கு டி. பி. யின் அறிகுறி இருப்பதாக டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். என் பெற்றோர்களுக்கு இதில் சொல்லொணாத வருத்தம். அருமையாக வளர்த்த ஒரே பெண்ணைக் கடைசியில் இந்த இடத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டோமே என்று அவர்கள் படும் வேதனை சொல்லி முடியாது. அவர்களுடைய குறை அவர்களுக்கு வேண்டுமானால் நியாயமாக இருக்கலாம்.

"ஆனால் என் நிலை ...? அவரைப் போல, என்னைக் கண்ணிமைக்குள் வைத்துக் காப்பாற்றக் கூடிய கணவர் எனக்கு ஈரேழு ஜன்மத்திலும் கிடைக்கவே மாட்டார். அவர் பிழைத்து விடுவார் என்று மற்றவர்கள் நம்பவில்லை. ஆனால் எனக்கு மாத்திரம்..." என்று எதற்காகவோ 'சட்'டென்று பேச்சைச் சற்று நிறுத்தினாள் காந்திமதி!

அவளுடைய அந்த மனோபாவம் எனக்கு வியப்பை உண்டுபண்ணியது. அவள் பேசிய

தோரணை என் எண்ணத்திற்குச் சவால் விடுவதுபோல் இருந்தது.

“காந்தி! அப்படியானால் நீ இப்படியே வேதனைப் பட்டுக்கொண்டு கிடக்கவேண்டியவள்தானே?” என்று தர்க்க ரீதியில் துணிந்து கேட்டுவிட்டேன்.

“கோபு! எங்களுக்குக் கணவர்தான் லட்சியம். அவர்தான் எங்கள் நம்பிக்கை! அந்த நம்பிக்கையின் ஆணிவேரை அறுத்து விடாமல் எங்களுக்குள்ளேயே ஒரு மகா சக்தி இயங்குகிறது. ஆண்களுக்கு அப்படியில்லை. எந்த விஷயத்திலும் நிர்மாணமான புத்தி அவர்களிடம் இல்லை. க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக் கொண்டிருக்கும் மனதைக் கட்டுப்படுத்த அவர்களால் முடிகிறதில்லை.”

இந்த ரீதியில் காந்திமதி பேசிக்கொண்டிருப்பதைக்கேட்க என் சித்தனை குழம்பியது. பேச்சை வேறு வழியில் திருப்பினேன். பொதுவாகச் சில விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றுக் கொண்டோம் நாங்கள்.

* * *

காந்திமதியைச் சந்தித்துப் பேசியதன் விளைவாக என் மனநிலை மிகவும் மோசமாகி விட்டது.

நோயாளிக் கணவனை இலட்சிய புருஷனாகக்கொண்டு அசைக்க முடியாத ஒரு நம்பிக்கையில் வாழ்க்கையுடன் போராட அவளுக்கு இந்த நெஞ்சுத் துணிவு எப்படி ஏற்பட்டது?

நானும் இருக்கிறேனே! மனைவியே சொல்கிறாள் என்று மறு விவாகத்திற்குச் சபலப்பட்டுக் கொண்டு அலைகிறேனே!

ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம் என்று எவ்வளவுதான் காடியாகக் கத்தினாலும் பெண்களுடைய உயர்ந்த மனப் பண்பிற்கு முன் ஆண் எம்மாத்திரம்?

அவள் எதை ‘நம்பிக்கை’ என்று சொல்கிறாளோ அதுவே அவள் கணவனை வியாதியிலிருந்து மீட்டுத் தந்து விடுமோ, என்னவோ? யார் கண்டது?

மங்களத்தின் விஷயத்தில் நான் ஏன் இந்த மாதிரி கொள்கையைக் கைக் கொள்ளக் கூடாது?

மங்களத்தை இனி நம்பிப் பிரயோஜனமில்லை. என் பால்ய சிநேகிதி காந்திமதி பேசிய ஒரு புரியாத தத்துவத்திற்காக நான் என் வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ள வேண்டும் என்பது அசட்டுத்தனமாக அல்லவோ இருக்கிறது?

என் மனத்தில் நடந்த இந்த மனப்போர் கடைசியாக முடிவடைந்தே விட்டது.

கொஞ்ச நாட்கள் கழித்து, நானும் மீனாக்ஷியும் தம்பதிகளானோம்.

சாகப்போகிற மங்களத்திற்குத் தன் கடைசி காலத்திலாவது கணவனுடைய வாழ்வைப் பொலிவுறச் செய்ய முடிந்ததே என்று பெரு மகிழ்ச்சி. அவளுக்குத்தான் என்னிடம் எவ்வளவு நம்பிக்கை! நான் சந்தோஷ வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எவ்வளவு ஆர்வம்!

* * *

மணம் செய்து கொண்ட ஆறு மாதத்திற்குப் பிறகு யதேச்சையாக ஒரு நாள் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நான் காந்திமதியைச் சந்தித்தேன். தன் பக்கத்தில் நின்ற மனிதரை எனக்கு அறிமுகம் செய்வித்து என்னைப் பற்றியும் அவரிடம் கூறினாள்.

அவர்தான் அவள் கணவர். நோயிலிருந்து புத்துயிர் பெற்ற அறிகுறி அவரிடம் காணப்பட்டது. காந்திமதி சொன்னாள்:

“அண்ணா! என் நம்பிக்கை வீண் போய் விடவில்லை. அவர் பிழைத்துக் கொண்டு விட்டார். இனி அவரைப் பற்றிக் கவலையே இல்லை!”

அவள் பேச்சு என்னைத் திணற அடித்தது. என் அருகில் நின்ற மீனாவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். உலகமே என் முன் சுழன்றது.

காந்தி கேட்டாள்:—

“இது தானே என் மன்னி?”

அப்போதுதான் மீனாவை அறிமுகப் படுத்த வேண்டிய அவசியத்தை நான் உணர்ந்தேன்.

“காந்தி! இவள்தான் மீனாக்ஷி! மங்களத்தின் தங்கை! நாங்கள் தம்பதிகளாகி விட்டோம்!” என்று சொன்னேன்.

“அப்படியானால் மங்களம்......?” என்று நீட்டி முழக்கி அவள் கேட்ட கேள்வி என்னுள் எங்கோ ஒலிப்பதுபோல் இருந்தது.

மங்களத்தின் கதியைப் பற்றி நான் அவளிடம் என்ன சொல்வது? என் உடலும் உள்ளமும் சிலிர்த்தன!

“அவளா...? இப்போது அவளுக்கு உடம்பு கொஞ்சம் தேவலை. எப்படியும் பிழைத்துக் கொண்டு விடுவாள் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்” என்று தட்டுத் தடுமாறிய குரலில் பதில் கொடுத்தேன்.

நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். அந்த ஆதர்ச தம்பதிகளின் வாழ்க்கை எதனால் அப்படி புத்துயிர் பெற்றது?

காந்திமதியின் நம்பிக்கையினால்தானே?

புலிப்பால் கொண்டு வா!

ரஜனி

கொழும்பு, நவ. 30

மண்டபம் நிலைமையை நேரில் பார்த்து விட்டு வந்திருக்கும் இந்திய ஹை கமிஷனர் காரியதரிசி ஸ்ரீ ராகவாச்சாரி கூறுவதிலிருந்து அங்குள்ள இலங்கை அரசாங்கக் குடியேற்ற வெளியேற்ற இலாகா அதிகாரிகள் இந்தியர்கள் விஷயத்தில் புதிய சட்டத்தைக் கடுமையாக அமுல் நடத்துவதாய்த் தெரிகிறது. இலங்கையில் முதல் போட்டுக் கடை கண்ணிகளை நடத்துகிறவர்கள் இந்தியாவுக்குப் போய்விட்டுத் திரும்பினால், இலங்கையில் ஐந்து வருஷங்கள் வசித்ததை ருசுப்படுத்தினால்தான் இலங்கைக்குப் போகலாமென்று சொல்லி மண்டபத்தில் தடுத்து விடுகிறார்களாம்! இப்படித் தடைசெய்யப்படுவோரின் இலங்கையிலுள்ள சொத்துக்கள் என்ன ஆவது? "ஐந்தாறு மாத காலமேனும் இலங்கையிலிருந்து கடைகளையும் இதர சொத்துக்களையும் விற்று விட்டு இந்தியாவுக்குத் திரும்பி விடுங்கள்" என்று சொல்லி மண்டபம் அதிகாரிகள் அனுமதி கொடுத்தனுப்பினால் ஓரளவு நேர்மையாயிருக்கும். இப்படிக்கில்லாமல் இந்தியாவுக்குச் சென்ற கடை முதலாளிகளையும் மற்றவர்களையும் இலங்கைக்குத் திரும்பி வரமுடியாமல் திடீரென்று தடுப்பது நேர்மையாகுமா?

இதற்கு அதிகாரிகள் ஒரு சாக்குச் சொல்லுகிறார்கள். ஏற்கனவே இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு அதிகமாக இருந்தவர்களைத் தாங்கள் தடை செய்யவில்லையென்றும், இலங்கையிலிருந்ததற்கு இலங்கை டிவிஷனல் ரிவின்யூ அதிகாரி ஒருவரின் சர்டிபிகேட்டை வாங்கிக் காட்டும்படியே கேட்பதாயும் மண்டபம் அதிகாரிகள் சொல்லுகின்றனர். இந்தியாவிலிருக்கும் பிரயாணி இலங்கை அதிகாரியிடமிருந்து சர்டிபிகேட்டை எப்படி வாங்கிக் காட்டுவது? அத்தகைய சர்டிபிகேட்டைக் கேட்போமென்று பிரயாணிகள் இந்தியாவுக்குப் போகும் பொழுதே சொல்லியிருந்தாலாவது அவர்கள் சர்டிபிகேட்டுகளைக் கையிலேயே வாங்கிச் சென்றிருப்பார்கள்.

இந்தியாவிலிருந்துகொண்டு சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் சர்டிபிகேட்டுகளை அனுப்புவார்களென்று எதிர் பார்க்க முடியுமா? லட்சக்கணக்கான ஜனங்கள் வசிக்கும் கொழும்பைப் போன்ற பெரிய நகரத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு வருஷம் இங்கு வசித்திருக்கிறார்கள் என்று அதிகாரிகள் எப்படிச் சரிபார்த்து சர்டிபிகேட்டு கொடுப்பது சாத்தியம்? இலங்கையிலிருப்பவர்களுக்கே இவ்வித சர்டிபிகேட்டு வாங்குவது அசாத்தியமாயிருக்கும் பொழுது, இந்தியாவுக்கு ரஜாவில் சென்றவர்களிடம் இப்படிப்பட்ட சர்டிபிகேட்டு காட்டினால்தான் இலங்கைக்குத் திரும்பிச் செல்லலாமென்பது புலிப்பாலைக் கொண்டு வரச் சொல்லுவது போலிருக்கிறது! இதனால் மனம் கசந்து தினந்தோறும் சுமார் எண்பது முதல் நூறுபேர் இலங்கையை அடியோடு விட்டு விட்டு இந்தியாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரிய தவறு

வோட்டுரிமை மசோதாவைப் பற்றி செனேட்டிலும் அதற்கு முன்னால் ஜனப் பிரதிநிதி சபையிலும் விவாதம் நடந்த பொழுது இந்தியர்களுக்கு இலங்கையில் சாசுவதமான தொடர்போ, சிரத்தையோ எதுவும் இல்லையென்றும், கிடைப்பதைச் சுருட்டிக்கொண்டு இந்தியாவுக்குப் போவது தான் அவர்களது இலட்சியமென்றும் சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் செலாவணிக் கட்டுப்பாடு கண்ட்ரோலர் தம்முடைய நிர்வாக அறிக்கையில் சொல்லியிருக்கும் சில முக்கிய விஷயங்கள் குறிப்பிடத் தக்கவை.

இலங்கையிலுள்ள எட்டு லட்சம் இந்தியர்களில் ஆறரை லட்சம் பேர்கள் தோட்டத் தொழிலாளிகள் என்றும், இந்த ஆறரை லட்சம் பேர்களில் சுமார் பதினையாயிரத்து ஐந்நூறு பேர் தான் இந்தியாவுக்குப் பணம் அனுப்பியிருக்கிறார்கள் என்றும், அவர்களும் மொத்தம் அறுபத்தையாயிரம்

ரூபாய்தான் அனுப்பியிருக்கிறார்கள் என்றும் செலாவணி இலாகா தலைவர் தமது அறிக்கையில் கூறுகிறார். இதிலிருந்து சுமார் ஆறு லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியத் தொழிலாளர் இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்பது வெளியாகிறது. பிரஜா உரிமையும் அரசியல் உரிமைகளும் கேட்பதெல்லாம் அவர்களுக்குத்தானே யொழிய இலங்கையில் நிரந்தரமாக வசிக்காதவர்களுக்கு அல்ல. சுமார் ஒன்றரை லட்சம் இந்தியர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்புகிறார்கள் என்பதற்காக இலங்கையைத் தவிர இந்தியாவுடன் எவ்வித பந்தமும் இல்லாத ஆறரை லட்சம் இந்தியத் தொழிலாளரையும் இலங்கையில் சாசுவதமான சிரத்தையில்லாதவர்கள் என்று வர்ணிப்பது எவ்வளவு பெரிய தவறு?

பெருமை ஏற்பட வழி

இலங்கை இந்தியர்களின் நிலைமையைப் பற்றிச் சென்னை மாகாண சட்டசபை நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் இங்கு எல்லோருக்கும் மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. சென்ற வருடம் அக்டோபர் மாதம் சென்னை மாகாண சட்ட சபை இதேபோல ஒரு தீர்மானத்தை, இன்னும் சிறிது கடுமையான வார்த்தைகளிலேயே அமைத்து நிறைவேற்றி இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பியது. அதைப் பார்த்தும், இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காருக்கு ஒரு ஆட்சேபணைக் கடிதம் அனுப்பியதோடு நின்றுவிட்டனர். மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த மாதிரி இம்முறையும் ஆகிவிடக் கூடாதே என்று இலங்கை இந்தியர்கள் கவலைப்படுகிறார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்னால் 1939-ல் பண்டித நேரு இலங்கைக்கு விஜயம் செய்தார். அரசாங்க உத்தியோகங்களிலிருந்து தினச் சம்பள இந்தியத் தொழிலாளர்களையெல்லாம் இலங்கை சர்க்கார் டிஸ்மிஸ் செய்து நாடு கடத்திய பொழுது அந்த அநியாயத்தை இடித்துச் சொல்லி நியாயம் கேட்பதற்காக நேருஜி இங்கு வந்தார். ஆனால் வெறுப்புவாத வெறி காரணமாக இலங்கை அரசாங்கம் ஆசியாவின் மாபெரும் தலைவரின் புத்திமதியை அலட்சியம் செய்தது. அதன் விளைவாக நேருஜி இந்தியா திரும்பியவுடன் இந்திய சர்க்காரைத் தூண்டி சகல உழைப்புத் தொழிலாளர் மேற்கொண்டு இலங்கையில் குடியேறுவதற்குத் தடை விதிக்கும்படி செய்தார்.

அதைவிட இன்னும் பன்மடங்கு அதிக நெருக்கடியான இத் தருணத்திலே நேருஜி இலங்கைக்கு வருகிறார். இந்தியரின் பிரஜா உரிமையும் வோட்டுரிமையும் பறிக்கப்படுகின்றன. ரஜாவில் இந்தியாவுக்குப் போகும் இந்தியர்களை மறுபடி இங்கு வரமுடியாதபடி மண்டபத்திலேயே தடை செய்து திருப்பியனுப்பக் குடியேற்ற வெளியேற்றச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. செலாவணிக் கட்டுப்பாடுகள் ஒருபுறமும், ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றொரு புறமும், வர்த்தக ஸ்தாபனச் சிப்பந்திகளை இலங்கையர் மயமாக்கும் திட்டங்கள் இன்னொரு புறமுமாக இந்திய வியாபாரிகளின் குரல்வளையை நெறிக்கின்றன. இந்த நெருக்கடியான தருணத்தில்தான் நேருஜி இங்கு வருகிறார். இந்த விஜயம் காரணமாக இலங்கை-இந்தியா பிரச்னைகள் சுமுகமாகத் தீருமானால் இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, காமன்வெல்த்துக்கே பெருமை ஏற்படும்.



கும்பகோணம் டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் புதல்வி பேபி சரூபாலனின் நடனம் கும்பகோணத்தில் டிசம்பர் 6-ந் தேதி அரங்கேறியது.

கிறிஸ்துமஸுக்காக சலுகை

அதிக நாள் உழைக்கக் கூடிய கடிகாரங்கள் அசல் விலையில் சமீபத்தில் வரவழைக்கப் பட்ட புதிய ஸ்விஸ் கடிகாரங்கள் அனைவரின் சக்திக்கும் ஏற்றவாறு அசல் விலைகளில் அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இந்த கடிகாரங்கள் நீடித்துழைப்பதுடன் அதன் கைதேர்ந்த வேலை திறத்தினால் நம்பகமான உழைப்புக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.

ஒரிஜினல் 15 முதல் 17 ஜுவல் முழு லீவர் கடிகாரங்கள் 5 வருஷங்களுக்கும் இதர ரகங்கள் 3 வருஷங்களுக்கும் உத்திரவாதமுள்ளவை. ஆர்டர் செய்த கடிகாரங்கள் நன்கு பயிற்சியடைந்த அனுபவம் வாய்ந்த திறமையான மெக்கானிக்குகளின் மேற்பார்வையில் 32 மணி நேரத்திற்கு நன்கு பரிசோதனை செய்யப்பட்டு எண்ணெய் போடப்பட்டு நேரத்தைச் சரிப்படுத்தப்பட்ட பிறகு தான் அனுப்பப் படுகின்றன. பிரதி கடிகாரத்துடனும் எழுத்து மூலம் ஒரு உத்திரவாத சர்டிபிகேட்டும் ஒரு உயர்தரமான கடிகாரப் பட்டையும் ஒரு அழகான வெல்வெட் பெட்டியும் இலவசமாக அளிக்கப்படும். ஆர்டர்கள் எங்கள் பொறுப்பில் வி. பி. பி. யில் அனுப்பப்படும். இன்ஷூரன்ஸ், விற்பனை வரி, தபால் மற்றும் பாக்கிங் செலவு இலவசம்.

இனாம் அளிப்பு



ஒரே பாக்கிங்கில் இரண்டு கடிகாரங்களுக்கு டிஸம்பர் 31 தேதிக்குள் வரும் ஆர்டர்களுக்கு மேலே காட்டப்பட்ட அழகிய அமெரிக்க பேனா, பென்சில் செட்டு தங்க நிற கிளிப்புகளுடனும் வழவழப்பாக எழுதுவதற்காக இரிடியம் தோய்ந்த நிப்புகளுடனும் இலவசமாக தரப்படும்.




ரவுண்டு (சைஸ் 10½)

616 A	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	ரூ. 23	0
654	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	38	8
620B	ஷாக்ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	43	0
619 A	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	54	0




சென்டர் செகண்டு ரவுண்டு (சைஸ் 10½)

621 A	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	25	8
657	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	40	8
624	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	54	0
629	வாட்டர் ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் ரேடியம் டயல் 17 ஜுவல்	85	0



கர்வெக்ஸ் (சைஸ் 7¾)

609	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	43	0
663	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	48	0
612 A	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	65	0




டனோ (சைஸ் 6¼)

613	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41	0
666	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	50	0
615	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	68	0



சென்டர் செகண்டு (சைஸ் 8¾)

637	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவெல்	29	0
639	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவெல்	66	0
641	வாட்டர்ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	98	0



லேடீஸ் (சைஸ் 5¼)

643	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41	8
669	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	53	8
646	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	66	0

CAROLINE AGENCIES (India), Dept. 17, P.B. 6764, Bombay 22



காலத்திற்கிசைய
காட்ஸ்வால்
அணியுங்கள்!
களியாட்டக்காரர்களுக்கு மட்டுமென்றி, எல்லோருக்கும் எக்காலத்திலும் சாதாரணமாக அணிவதற்குகந்தது.
உடம்பை சமசீதோஷ்ணமாக வைத்திருக்கும் காட்ஸ்வால் அணிந்து உங்கள் தேகோஷ்ணத்தை நிலைப்படுத்துங்கள்!
உங்கள் ஜவுளிக்கடையில் இன்றே போய் விசாரியுங்கள்!
சதா ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு இதை விட மேலான துணி கிடைப்பதரிது - பார்வைக்கும் அழகானது!
தி பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிட்., பெங்களூர் ஸிடி.
ஏஜண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதார்கள்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்.
சலவை விதிகள்: கம்பளித் துணிகளைப்போலவே ஸோப்புச் சீவல் அல்லது வாஷிங் ஸோப்பு உபயோகித்து வெதுவெதுப்பான ஜலத்தில் சலவை செய்யவும்
Cotswol
தயாரிப்பவர்கள்:
தி பெங்களூர் மில்ஸ்
மற்றுமொரு பிரசித்த ஆமோர்க் துணி
பிரதேசவாரி வினியோகஸ்தர்கள்:
பெங்களூர் ஸிடி: மெஸர்ஸ். எச். ஏ. ஆர். முகமது சேட் & ஸன்ஸ், சிக்பேட்
மெஸர்ஸ். ஹாஜி இப்ராஹிம் இஸ்ஹாக் & ஸன்ஸ், சிக்பேட்
மெஸர்ஸ். ராம் நாராயண் கிஷன் தாஸ் & கோ., தொட்டபேட்
மதராஸ்: மெஸர்ஸ். எச். ஏ. ஆர். முகமது & ஸன்ஸ், 6, கிடங்கு தெரு, ஜி. டி.



உழைக்கும் கைகளில் அழுக்குப்படிகின்றது...
எங்கு அழுக்கிருக்கிறதோ அங்கு கிருமிகளாலான
அபாயம் ஏற்படும்!
அடிக்கடி லைப்பாயினால் சுத்தம்
செய்துகொள்ளுங்கள்!
LIFEBUOY
லைப்பாய்
சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைக்காப்பாற்றுகிறது
L. 114-172 TM

முன்னேற்றத்தின் முன்னணியில்

ஸிந்திரி உர உற்பத்தி சாலை:



இந்தியாவின் உணவுப் பிரச்னையைத் தீர்க்க, நிலத்தின் விளைவுத் தன்மையை அதிகரிக்க வேண்டும். இப் பிரம்மாண்டமான உர உற்பத்தி சாலை முடிவான உடன் நம் நாட்டின் உணவுப் பயிர் விளைவுகளை அதிகரிக்க தேவையாயிருக்கும் விசேஷ உரமாகிய அம்மோனியா ஸல்பேட்டை தினத்திற்கு 1000 டன் விதம் தயாரிக்க சௌகரியப்படும்.

இப் பெரிய உற்பத்தி சாலையை நிர்மாணிக்கும் தொழிலில், ஆயிரக்கணக்கான டன் இந்திய எஃகு உதவியளித்து வருகிறது. எருவை தயாரிக்கவும், அதை விநியோகம் செய்யவும் வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல வகைகளில் எஃகு ஒத்துழைக்கும்.


டாடா எஃகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை செல்லிங் ஆபீஸ்: 23-B நேதாஜி ஸுபாஷ் ரோட், கல்கத்தா.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI டிசம்பர் 11, 1949 4 அண

கோல்கேட்

சுவாசத்தையும் பற்களையும் சுத்தப்படுத்துகின்றன

கோல்கேட் பவுடரோ அல்லது கிரீமோ உங்கள் இஷ்டப்படி வாங்கிக்கொள்ளலாம்

★ உங்களது பற்களைச் சுத்தம் செய்வதுடன் உங்களது சுவாசத்தையும் சுத்தமாக்குகிறது.

★ கோல்கேட்டிலுள்ள மிருதுவான பளபளப் பூட்டும் பொருளானது எனாமலை மிக எளிதாகவும், கேடு விளைவிக்காமலும் பரிபூரணமாகவும், சுத்தப் படுத்துகின்றது.

★ கோல்கேட் ஒரு சிறந்த உயர் ரகப் பொருள். மிருகக் கொழுப்பு அற்றது.

★ பல் வைத்தியர்களால் சிபார்சு செய்யப்படுவது. விலை குறைவு - அதிக நாட்கள் வரும்.





பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்



பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சுத்திகரித்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி மூடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் குளிர்ந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் பசையாக கரைத்து. இதை டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

Regd No M. 4392

